ஊற்று 1

துளி 1

# அமுது

අමුද AMUDHU

தமிழுக்கும் அமுதென்று பேர்

## அதிரும் யாழ்ப்பாணம்

## காதல் கப்பல்




ரணிலின் பொறி

குங்ஃபூ

கொலைத் திட்டம்

சினிமா !

முரளியின் இலவச போஸ்டர்

30/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் மாதாந்த குடும்ப சஞ்சிகை - ஒக்டோபர் '98




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமுதக் கடலில்...


ஓ(ம்).....! ஷாந்தி.........................05
**நெற்றிக்கண்:**..............................06
**அரசியலரங்கம்:**
விக்ரமசிங்கவின் வியூகம்.............08
யாழ்ப்பாணம்:
உறையாத குருதி.......................10
**நேருக்கு நேர்:**
என்னைக் கொல்லுவதே
திட்டம்... - டக்ளஸ்......................12
OH... BUTTERFLY ———— 15
டைட்டானிக் காய்ச்சல................18
கவிதைகள்...............................20
விலைமாதரின் சுவர்க்
கவிதைகள்...............................25
முரளி:
மாயப் பந்து வீச்சாளன்...............26
கிரக சஞ்சாரம்..........................28
**சிரிக்க சிந்திக்க**..........................31
**சிறுகதை:** செ. யோகநாதன்
பொய்முகம்...............................32
குங் ஃபூ
ஒரு வாழ்க்கை முறை................34
இரத்தினபுரி:
இரட்டைக் கொலையும்
இனக் கலவரமும்.......................36
வெற்றி வேந்தன்:
ஸ்பீல்பேர்க்..............................37
**நோயற்ற:**
அழகு தேமலுக்கு இலகு
வைத்தியம்...............................39
வயக்ரா:
சந்தையைக் கலக்கும்
காமக் குளிசை..........................41
**சினிமா:**
தமிழக சினிமா
சவால்களும் சாதனைகளும்........42
**நூல் அறிமுகம்**.........................44




முரளி.....
மாயப் பந்து வீச்சாளன்.. **26**



யாழ்ப்பாணம்:
உறையாத குருதி.... **10**



குங்ஃ பூ
ஒரு வாழ்க்கை முறை... **34**




டைட்டானிக்
காய்ச்சல்.. **18**



தமிழக சினிமா
சவால்களும் சாதனைகளும்... **42**



என்னைக் கொல்லுவதே
திட்டம்... – டக்ளஸ் **12**


**ஓ(ம்).. ஷாந்தி ........05**
**விக்ரமசிங்கவின்**
**வியூகம் ..................08**
**இரத்தினபுரி:**
**இரட்டைக் கொலையும்**
**இனக் கலவரமும்......36**
**OH! BUTTERFLY .....15**
**வயக்ரா:**
**சந்தையைக் கலக்கும்**
**காமக் குளிசை .........41**


உங்கள் ஆக்கங்கள் அபிப்பிராயங்களை
அமுது வரவேற்கிறது.


ஆசிரியர்,
'அமுது'
இல: 35, டி.ஆர். விஜேவர்த்தன மாவத்தை,
கொழும்பு 10.

தொலைபேசி: 445233
ஃபக்ஸ்: 320677
E-Mail: webmgr@sri.lanka.net




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் வியாபார நடவடிக்கைகளுக்கான
"சென்றல்"
இடம்
வரையறுக்கப்பட்ட சென்றல் ஃபினான்ஸ் நிறுவனம்

# கவர்ச்சியான வட்டி

லீசிங்

காப்புறுதி வசதிகள்

வாடகை உரித்து

கழிவு பற்றுச் சீட்டு (பில்):

ஃபினான்ஸ் வர்த்தகம்

செயற்பாட்டு வரி

வீடு, சொத்து கடன்

**வரையறுக்கப்பட்ட சென்றல் ஃபினான்ஸ் நிறுவனம்**

தலைமை அலுவலகம்
84, இராஜ வீதி, கண்டி. தொலைபேசி: 08-234278, 234247, 234394, 223842, 227000

நகர அலுவலகம்
270, வக்சோல் வீதி, கொழும்பு -02. தொலைபேசி: 448573, 300555

காட்சியறை
254, கட்டுகஸ்தோட்டை வீதி, கண்டி. தொலைபேசி: 08-234234, 08-234235

கிளை அலுவலகம்
அநுராதபுரம், பதுளை, தெஹிஅத்தகண்டிய, காலி, கம்பஹா, குருனாகல், மாத்தளை, மாத்தறை, நீர்கொழும்பு, இரத்தினபுரி, பொலன்னறுவை

**செழிப்பாய் வளரவும் சுபீட்சம் பெறவும் நாம் உங்களுக்கு உதவுவோம்**


10814

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லதோர் வீணை செய்தே....

**பிரதமஆசிரியர்:**
எஸ். மனோரஞ்சன்
**இணையாசிரியர்:**
து. பாஸ்கரன்
**கட்டுரையாசிரியர்:**
சி. சிவகுமார்
**ஏனைய ஆசிரிய பீடத்தினர்:**
டி. பி. எஸ். ஜெயராஜ்
எம். எச். எம். ஷம்ஸ்
**பிரதம வடிவமைப்பாளர்:**
சி. முரளிதரன்
**ஓவியர், கார்டூனிஸ்ட்:**
இ. ப்ரகீத்
**பக்க வடிவமைப்பு (கணனி):**
ஜெரால்ட் எஸ். நடேசன்

.......

**விளம்பர முகாமையாளர்:**
வருண மல்லவஆராச்சி
**தயாரிப்பு முகாமையாளர்:**
அபய அமரதாஸ
**அச்சமைப்பு முகாமையாளர்:**
நவரட்ணம் சற்குணநாதன்
**விற்பனை முகாமையாளர்:**
அனுர அபேரத்ன

**அச்சிட்டு வெளியிடுவோர்:**
அசோஸியேடட் நியூஸ் பேப்பர்ஸ்
ஒஃப் சிலோன் லிமிடெட்
இல. 35, டி. ஆர். விஜேவர்த்தன மாவத்தை,
கொழும்பு 10.

**Chief Editor:**
*S. Manoranjan*
**Associate Editor:**
*T. Baskaran*
**Features Editor:**
*S. Sivakumar*
**Other Editorial Staffs:**
*D. B. S. Jeyaraj*
*M.H.M. Shams*
**Chief Designer:**
*C. Muralitharan*
**Artist/Cartoonist:**
*Ekkneligoda Prageeth*
**Computer Page make-up:**
*Gerald S. Nadesan*
**Graphics:**
*E. D. Pemasiri*

நல்லது......! வாருங்கள்.........
நாமும் கைகோர்த்துக் கொள்வோம்.
நேர்கொண்ட அணிநடையல்ல நம் பயணம்.
அக்கம் பக்கம் மறைக்கப்பட்டுக் கடிவாளம்
பூட்டப்பட்ட குதிரைகளல்ல நாம்.
முப்பரிமாண உலகின் நாற்றிசையும் பயணிப்போம்.
நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளைத் தேடாது தொடர்ந்த
எம் தேடலினால் புதியவற்றைத் தரிசிப்போம்.
ஒன்றே கலை, ஒன்றே இலக்கியம், ஒன்றே ரசனை,
ஒன்றே கொள்கை என்று எந்த விதியுமில்லை.
அவரவர் தாம் விரும்பிய பூக்களை எடுத்துக்
கொள்ளட்டும்.
நாம் தோட்டக்காரர். யாவருக்குமாகச் செடிகள்
நடுவோம்.
உயர்வு தாழ்வு, பெருமை, சிறுமை, புதுமை, பழமை,
லட்சணம், அவலட்சணம், சிறந்தவை, மட்டமானவை
என்று மதிப்பிட முனையப் போவதில்லை நாம்.
ஏனெனில் அவற்றிற்கென ஒருபுறத்திலிருந்து மட்டும்
தீர்ப்பிட வகைசெய்யும் பொதுவிதியொன்றில்லை.

உலகம் இன்று அதிவேகமாக மாறிச்செல்கிறது.
மாற்றங்களை ஏற்கவும் மாறுதளத்திலிருந்து
சிந்திக்கவும் தயாராவோம்.
நாமும் மாற்றத்திற்குள்ளாவோம்.
பல்கிப் பெருகியுள்ள புதியவைகளை
உள்வாங்கிக்கொள்ள எம் எண்ணமும்
இயங்கு தளமும் ஊடகமும் வெகுவாக
விரிந்து தம்மைத் தகவமைத்துக் கொள்ள
வேண்டிய தேவையை ஏற்போம்.

தலைக்குள் நிறைந்திருப்பவற்றைக்
காலிசெய்யா விட்டால்
புதியவற்றை எப்படி உள்வாங்கிக்
கொள்வது? ஆ-ர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தாயன்பு போல ஆதரிக்கும்...

## நாம் எங்கள் சிறகுகளின் நிழல்...

அன்னையின் அன்புக்கு நிகரான அக்கறையுடன் உங்களை அல்லும் பகலும் அரவணைத்துக் காக்கும் இடமாகும்.

ஈகிள் இன்சூரன்ஸ் கம்பனி கடந்த பத்து ஆண்டுகளாக உங்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான காரியங்களில் ஆழ்ந்த அக்கறை காட்டி வருகின்றது.

பண்டிகை காலங்களில் பட்டாசுகளினால் ஏற்படும் விபத்துக்கள் பற்றி மக்களுக்கு விழிப்புணர்வை உண்டுபண்ணும் எமது முயற்சி பெரும் பயனளித்திருக்கிறது. அனுராதபுரம் உற்சவ காலத்தில் யாத்திரிகர்கள் நீரில் மூழ்குவது எமது முயற்சியினால் தவிர்க்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு மிக்க வேலைத்தலத்திற்கு நாம் விருது வழங்குகிறோம். பாதுகாப்பின் முக்கியத்துவம் பற்றிப் பாடசாலைப் பிள்ளைகளுக்குக் கருத்தரங்குகளை நடத்துகிறோம். அதுமட்டுமன்றி, நாடு முழுவதிலும் சகல மக்களுக்கும் பாதுகாப்புப் பற்றி உணர்த்துவதற்கு ஆண்டுதோறும் ஒக்டோபர் மாதம் 'ஈகிள் பாதுகாப்பு மாத' மாக அனுஷ்டிக்கப்படுகிறது.

நாம் காப்புறுதியை ஒரு தொழிலாக மட்டும் கருதவில்லை. மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான ஒரு கடமையாகவும் கருதுகிறோம். மக்களின் நலனில் கண்ணும்கருத்துமாக இருந்துவருவதன் மூலம் பொறுப்பு வாய்ந்த ஒரு காப்புறுதித் துறைக்கு வழிகாட்டியாக விளங்குகிறோம்.

**சீ.ரீ.சீ. ஈகிள் இன்சூரன்ஸ் கம்பனி லிமிட்டெட்**

*எங்கள் சிறகின்கீழ் சேருங்கள்... என்றும் துணையிருப்போம்*

10 ஆண்டு கால மகத்தான ஈகிள் காப்புறுதி. என்றும் உங்கள் அருகில் இருப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓ.....(ம்)! ஷாந்தி



உங்கள் அபிமான ஷாந்தி இலங்கைக்கு வருகிறார்...! என்ற செய்தியை எம்.ரி.வி. தொலைக்காட்சி ஒளிபரப்பியதுதான் தாமதம், பார்வையாளர்களுக்கு சொல்லொண்ணாக் குதூகலம். சரியாக வெளிநாட்டில் தொழில்பார்த்துவிட்டு நாடு திரும்பும் தனது மகளோ, சகோதரியோ ஊருக்குத் திரும்பிவருவதுபோன்ற உணர்வு. அவ்வளவு தூரம் ஷாந்தி சிங்கள தொலைக் காட்சிப் பார்வையாளர்களின் மனங்களோடு நெருங்கிவிட்டார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் வந்து இறங்கியது முதல் இலங்கையின் பல இடங்களுக்கு சென்று மீண்டும் இந்தியா திரும்பும்வரை பெரும் அன்புத் தொல்லையும் அமோக வரவேற்பும் அவருக்கு. அப்பப்பா.....!

இந்தியாவிலே பிரபல்யமான **அதீ போஷா** என்னும் இயக்குநரின் 'ஷாந்தி' என்னும் தொலைக்காட்சித் தொடரின் கதாநாயகிதான் ஷாந்தி என்னும் **மந்திரா பேடி.**

ஷாந்தி நாடகத் தொடரின் நடிகைத் தேர்வுக்கு வந்த 300க்கு மேற்பட்ட நடிகைகளைத் தோற்கடித்து இவர் தேர்ந்தெடுக்கப்பட்டதே இவருடைய முதல் வெற்றி. அடுத்ததாக, நாடகத்திலே இவருக்கு வழங்கப்பட்ட பாத்திரமும் அதனை அவர் நடித்த விதமும் இரண்டாவது வெற்றி. மூன்றாவது, இலங்கையில் ஷாந்தி நாடகத்திற்கு சிங்களத்தில் குரல் கொடுத்த கலைஞர்களின் சிறப்பான பணியே அடுத்த வெற்றி. அதனால்தான் இந்த அமோக வரவேற்பு.

ஷாந்தி கதையிலே வரும் பாதிக்கப்படும் பெண்களுக்கான உரிமைக் குரலாக **மந்திரா பேடி** தோன்றுகிறார். இலங்கை, இந்தியா போன்ற தென்ஆசிய நாடுகளின் பெண்கள், சமூகத்தில் முகம்கொடுக்கும் பிரச்சினைகளுக்கே ஷாந்தியும் முகம்கொடுத்து மோதுகிறார், சமாளிக்கிறார். எனவே அவர் குறிப்பாக பெண்களிடம் பிரபல்யம் அடைந்ததில் வியப்பில்லை.

ஷாந்தி என்னும் கதாபாத்திரம் தனது வாழ்க்கையிலும் நிச்சயம் பாதிப்பை ஏற்படுத்தும் என கூறுகிறார் **மந்திரா பேடி.**

1972 ஆம் ஆண்டு ஏப்ரல் 15ம் திகதி இந்தியாவில் கல்கத்தாவில் பிறந்த மந்திரா பேடி ஒரு பொருளியல் பட்டதாரி. இவர் தொடர்பூடகத் துறையிலும் உயர் கல்வி கற்றவர். பத்திரிகையாளராக வருவதே தனது நோக்கமாக இருந்தது என்கிறார்.

சினிமா உலகைப்போல் தனக்கு எவரிடமிருந்தும் பாலியல் ரீதியான வற்புறுத்தல்கள் எதுவுமே வரவில்லை எனக் கூறும் **மந்திராபேடி** (ஷாந்தி) தான் இப்போதும் மிக எளிமையாகவே வாழ்வதாக கூறுகிறார். பிரபல்யம் ஒன்றுமட்டும்தான் வேறுபாடே தவிர பழைய நண்பர்களுடன் இப்போதும் புகையிரதத்திலேயே பயணிக்கிறேன் என்கின்றார்.

எம்.ரீ.வி.யில் பிரதிவாரமும் 5 நாட்கள் ஒளிபரப்பப்படும் ஷாந்தி தொலைக்காட்சி நாடகத்தின் 500வது அங்கம் ஒளிபரப்பானதைக் கொண்டாடவே எம்.ரீ.வி. நிறுவனத்தினர் அவரை இங்கு அழைத்திருந்தனர். இங்கு வருகை தந்திருந்தபோது, சிறுவர்கள் சிறுமியர்கள் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்படுவதற்கு எதிராக அவர் பிரசாரம் செய்தார். சிலவேளை எமது இனப் பிரச்சினையைப் பற்றிக் கூட அவர் ஏதாவது கூறியிருந்தால் அது சிங்கள டீ.வி.ரசிகர்களிடம் வெகுவாக எடுபட்டிருக்கும். அவ்வளவிற்கு ஷாந்தியின் அழகிய முகமும் புன்னகையும் எடுப்பான ஊசி மூக்கும், கவர்ச்சியான.... அகன்ற.... மருளும்.... ஆனால் குழந்தை விழிகளும் ரசிகர்களைக் கவர்ந்தே விட்டிருந்தன.

ஷாந்தி நாடகம் தமிழிலும் டப்பிங் செய்யப்பட்டிருந்தால் தமிழ் ரசிகர்களுக்கும் மகிழ்ச்சியாய் இருந்திருக்கும்...... ம்.... என்ன செய்வது!

**கா. கீதாஞ்சலி**

## ஷாந்தி! இதுவா நீதி!

**ஷாந்தி** நாடகத் தொடருக்கு சிங்கள மொழியில் பின்னணிக் குரல் வழங்கிய கலைஞர்கள் மிகவும் மனமுடைந்துபோய் உள்ளனர். ஷாந்தி வந்திருந்த பொழுது அவருக்கென இசை நிகழ்ச்சிகள், தொலைக்காட்சிப் பேட்டிகள், விருந்துபசாரங்கள், கிரிக்கட் போட்டிகள் என்பன ஒழுங்கு செய்யப்பட்டிருந்தனவாம். அக் கிரிக்கெட் போட்டியில் பங்குபற்றிய பின்னர் இக் கலைஞர்களுக்கு ஒரு கோப்பை பிளேன்ரீ கொடுக்கக்கூட எம்.ரீ.வி நிறுவனம் முன்வரவில்லையாம். அதுமட்டுமன்றி அக் கலைஞர்களை ஒரு பத்து நிமிட நேரம் கூட மந்திரா பேடியுடன் பேச எம்.ரீ.வி நிறுவனம் அனுமதிக்கவில்லையாம். நாங்கள் இவ்வளவு பாடுபட்டு நன்றாக குரல் கொடுத்ததால்தானே மந்திரா பேடி என்கிற ஷாந்தி இப்படிப் பிரபல்யமானார் என்பது அவர்களின் வாதம். பார்க்கப்போனால் அதுவும் நியாயம்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்மணிக்குப் பதிலென்ன?




நக்கீரன்

யாழ்ப்பாணக் குடாநாட்டின் செம்மணிப் பகுதியில் உள்ள சதுப்புநிலப் பிரதேசத்தில் இருப்பதாகச் சொல்லப்படும் மர்மப் புதைகுழிகளை உரிய முறையில் அகழ்ந்தாராய்ந்து நீதிவிசாரணை நடத்துமாறு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயகா குமாரதுங்க மீதான அரசியல் அழுத்தங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. 'சந்திரிகா அம்மணியே செம்மணிக்குப் பதில் சொல்' என்ற வகையில் தமிழ் தேசிய வட்டாரங்கள் சர்வதேச ரீதியாகக் குரல் எழுப்பி வருகின்றன. யாழ்ப்பாணத்தில் காணாமற் போனதாகக் கருதப்பட்டவர்களின் நூற்றுக் கணக்கான சடலங்கள் செம்மணியின் மர்மப் புதைகுழிகளில் இருக்கின்றன என்ற விடயம் இலங்கையின் புதைகுழி அரசியலில் மேலும் ஒரு புதிய கறையினை இன்று பூசிவிட்டிருக்கிறது.

செம்மணி சடல விவகாரமும் கூட பாரதூரம் வாய்ந்த பிரச்சினைதான் என்பதில் இருவேறு கருத்துகளுக்கு இடமில்லை. ஆனாலும், பாதுகாப்பற்ற நிலையில் உள்ளவர்களைப் பாதகமானமுறையில் கொன்று ரகசியமாக சடலங்களை மறைத்துவிடும் பயங்கரமான புதைகுழி அரசியல் தமிழினத்தைப் பொறுத்தவரை இதுதான் முதலாவது முறையா? அல்லது சிங்கள இனத்துக்குத்தான் புதை குழிகள் என்ன புதிய விடயமா? புதைகுழிதோறும் தனையனைத் தேடும் தாய்மார்களின் நிலை இரு இனத்திற்கும் பொதுவாகிவிட்டதல்லவா?

அது ஒருபக்கம் இருக்கட்டும். கடந்த காலங்களில் தமிழினம் நடந்த பாதையினை மீள அசை போட்டால் ஆயிரக்கணக்கான கேள்விகள் காத்திரமாய்த் தோன்றி கண்களைக் கலக்குகின்றன. முறுகிச் செறிந்த தமிழார்வம் முதிரா இளைஞர் ஆருயிராய்ப் பெருக, நமக்கென்று நாடு வேண்டும் என்ற நாட்டத்துடன் போராளி இயக்கங்களுடன் இணைந்தனர் ஆயிரமாயிரம் இளந் தமிழர். அவர்களில் இயக்க மோதல் என்ற பெயரில் படுகொலை செய்யப்பட்டு அழித்தொழிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர்? இயக்கங்களின் உட்பிரச்சினைகள் காரணமாக களையெடுப்பு என்ற பெயரில் இரகசியமாகப் பிடுங்கி எறியப்பட்டவர்கள் எத்தனை பேர்?

நஞ்சையும் புஞ்சையும் நிறைந்த தஞ்சை மாவட்டத்தில் போராளி முகாம்கள் இருந்த இடங்களை அகழ்ந்தெடுத்தால் கிடைக்கக்கூடிய நூற்றுக்கணக்கான எலும்புக் கூடுகள் ஒரு சோக வரலாற்றைக் கூறாதோ? "தோழனே துப்பாக்கியின்றி வா" என்று பேச அழைத்துவிட்டு யாழ் ஆஸ்பத்திரி விறாந்தையில் பரஸ்பரம் சுட்டுக் கொலையுண்ட வரலாறு நம்முடையதில்லையா? ஈழ விடுதலையை நோக்கிப் பயணம் என "பச்சைப் படகில்" ஏற்றி நயவஞ்சகமாக சமுத்திர சங்கமமாக்கப்பட்ட இன்னுயிர்கள்தான் எத்தனை?

அரச ஒற்றர், மாற்று இயக்க உறுப்பினர், வேற்று இயக்க ஆதரவாளர், சமூகவிரோதி, தகுந்த முறையில் பங்களிப்புச் செய்யாதவர் என்று பல்வேறு காரணங்களுக்காகப் போராளி முகாம்களில் காவலில் வைக்கப்பட்டு, சித்திரவதைக்குட்பட்டு கொலையுண்டவர் எண்ணிக்கைக்கு கணக்கு வழக்கை யாரிடம் ஐயா போய்க் கேட்போம்? தமிழ் மண்ணிலே விலங்குகள்போல் விலங்கிடப்பட்டு, நடைப்பிணங்களாக குழிகளுக்குள் சிறை வைக்கப்பட்டு பின் புதைகுழிக்குள் போன அப்பாவித் தமிழ் மக்களுக்காக யார் கண்ணீர் விடுவது? "கந்தன் கருணை" யில் காவல் வைக்கப்பட்ட கன்னித் தமிழ்க் காளையர்கள் சுட்டுக் கொல்லப்பட்டு வில்லூன்றியில் ரகசியமாக எரிக்கப்பட்ட சோகத்தை யார் நினைவு கூருவது? இன்று வவுனியாக் காட்டு மரங்களின் வேர்களைக் கேட்டால் தாங்கள் எத்தனை மனிதரின் ஊனினை உறிஞ்சிக் குடித்துச் செழித்து நிற்கிறோம் எனக் கதை கதையாகச் சொல்லும்.

**இவை ஒருபுறமிருக்க, செம்மணி விவகாரம் தகுந்த முறையில் நிரூபிக்கப்பட்டால் அது இந்நாட்டு மனித உரிமை மீறல்கள் வரலாற்றில் அருவருப்பான படலம் என்பதில் சந்தேகமில்லை. அது கண்டிக்கப்படவும் வேண்டும். ஆனால் செம்மணி மாத்திரம்தான் ஒரு புதைகுழி விவகாரம் என நாம் நம்மையே ஏமாற்றிக் கொள்வது மிகப் பெரிய தறவாகும்.**

படுகொலையும் படுகுழியும் நிறைந்த படுபாதக சடல அரசியல் இன்று பல்வேறு தரப்பினராலும் நடத்தப்படுகிறது என்ற கசப்பான உண்மையைக் மனதில் கொண்டு நம்மவர்க்காக நீதி கேட்டுத் தொடர்ந்து போராடுவோம். •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## செம்மணி ராஜபக்ஷ

குற்றவாளிகளிடமிருந்து பொதுமக்களைப் பாதுகாப்பதற் காகத்தான் அவர்களைச் சிறைச்சாலைகளுக்குள் அடைத்து வைக்கிறார்கள் என்ற நிலையை இலங்கையில் எவரும் நம்பப் போவதில்லை. அவர்களிடமிருந்து பொதுமக்களைக் காப்பதல்ல இங்கு பிரச்சினை; அவர்களையே காத்துக் கொள்வதுதான்! வெளியே குற்றச் செயல்கள் நடைபெறுவதாகவும், காரணமானவர்களைப் பிடித்துச் சென்று அவர்களைத் திருத்தும் இடமாகச் சிறைச்சாலைகள் அமைகின்றனவென்றும் முன்பு யாராவது எண்ணியிருக்கக் கூடும். குட்டிமணி, தங்கத்துரை, பிறகு களுத்துறையில் டக்ளஸ், இப்போது சோமரத்ன ராஜபக்ஷ என்று நம் சிறைச்சாலைக் கதைகளைக் கேட்டால் சிரிப்புத்தான் வரவேண்டும். வெளியே இருப்பவர்களுக்கல்ல, சிறைக்குள்ளே இருப்பவர்களுக்குப் பாதுகாப்பளிப்பதற்குத்தான் சிறை நிர்வாகம் கூடிய கவனத்தைச் செலவிட வேண்டியிருக்கிறது. ராஜபக்ஷ மேலதிக பாதுகாப்புக்காக கண்டிக்கு மாற்றப்பட்டிருக்கிறார். சிறைக் கைதிகளைப் பாதுகாப்பதற்கென உள்ளேயே கடும் பாதுகாப்புடன் கூடிய தாய் சிறை அதிகாரிகளுக்கு இன்னொரு சிறைச்சாலை வைத்துக் கொள்வது நல்லதென்று, தொடர்ந்து பேப்பர் செய்திகளைப் பார்த்துச் சலித்துப்போன ஒருவர் சொன்னார்.



## நல்ல குருவாக மண்டேலா...?

நாடு பிரியும்வரை அடிப்பேன் என்கிறார் தம்பி பிரபா. அடிமேல் அடியடித்தால் அம்மியும் நகருமென்கிறார் அக்கா சந்திரிகா. ஓரே பள்ளியில் அடிபடும் மாணவர்கள்போல். இருவருக்குமே வலி...! பள்ளிக்கூடத் தளபாடங்கள், சுவர்கள், கூரைகள் பெயர்ந்து விழுகின்றன. இடையே தரும அடி வாங்குவது மக்கள்.

ஆசான்கள் மட்டுமல்ல பிறின்சிப்பலே இல்லாத எங்கள் அரசியல் பள்ளியை ஒழுங்குபடுத்தி யாவரையும் இணங்கி நடக்கச் செய்யக்கூடிய ஒருவர் **மண்டேலா**தான். அவருக்கென்ன தகுதியென்று பார்க்கிறீர்களா? ஒன்றல்ல இரண்டு தகுதியும் அவருக்குண்டு. ஆயுதப் போராட்டம் நடத்திய அனுபவமும் மறுபுறம் ஆட்சி நடத்துகின்ற அனுபவமும் ஒருங்கே உண்டு. சரி, நம்ம மாணாக்கர்களுக்கு அவர் சரிப்பட்டு வருவாரா...? ஏன் சந்திரிகா அண்மையில் அவரைச் சந்தித்துவிட்டு வந்திருக்கிறார். பிரபாவும் கடிதம் போட்டிருக்கிறார். இருவருக்குமே பிடித்தமானவர் அவர். ஆனால் பிறின்சிப்பலின் சொல்வழி கேட்காவிட்டால் இருவருக்குமே குட்டுப் போடுவாரா அவர்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் அரங்கம்

# விக்ரமசிங்கவின் வியூகம்

குருசேஷத்திரன்

முன்னாள் பிரதமரும் இந்நாள் எதிர்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க ஒரு புதிய அரசியல் வியுகத்தை அண்மைக் காலங்களில் வகுத்து வருகின்றார். 1977 முதல் 94வரை ஆட்சி செய்த தனது ஐ.தே.கவை மீண்டும் அடுத்த தேர்தலில் ஆளும் கட்சியாக்கும் நோக்கத்துடன் இந்த அரசியல் வியூகத்தை விக்கிரமசிங்க உருவாக்கி வருகிறார்.

பதினேழு ஆண்டுகாலம் ஐ.தே.க. ஆண்டபோதுதான் இந்நாட்டின் இனப்பிரச்சினை கூர்மையடைந்தது. விரல் விட்டு எண்ணக்கூடிய தமிழ் இளைஞர்கள் முன்னெடுத்த ஆயுதப் போராட்டம் விஸ்வரூபமெடுத்து இன்று இலங்கை அரசியலையே ஆட்டிவைக்கும் சக்தியைப் பெற்றுள்ளது. ஐ.தே.க. ஆட்சியின் இறுதியாண்டில் டி.பி. விஜயதுங்க ஜனாதிபதியாகவும் ரணில் விக்கிரமசிங்க பிரதமராகவும் இருந்தபோதுதான் விஜயதுங்க **பெரும்பான்மை இனத்தை மரமாகவும் சிறுபான்மை இனங்களை மரத்தைச் சுற்றிப் படரும் கொடிகளாகவும்** வர்ணித்தார். சிறுபான்மை சமூகங்களைப் பாதித்த அக்கூற்றினை பிரதமர் விக்கிரமசிங்க மறுக்கவுமில்லை, ஏற்கவுமில்லை. மௌனமே சாதித்தார்.

சந்திரிகா குமாரதுங்க தலைமையில் பொதுசன ஐக்கிய முன்னணி அரசு ஏற்பட்டு இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சில முன்முயற்சிகளை மேற்கொண்டது. அவைபற்றித் திட்டவட்டமான கருத்தெதனையும் தெரிவிக்காமல் தட்டிக்கழித்து வந்தார் விக்கிரமசிங்க. ஆனால் அண்மைக் காலங்களில் பல கருத்துக்களைப் பட்டவர்த்தனமாகத் தெரிவித்து வருகிறார் ரணில். இவ்வாறு கருத்துத் தெரிவிப்பதன் மூலம் விக்கிரமசிங்க ஒரு புதிய வியூகத்தை வகுத்து வருகிறார். **1994 ஜனாதிபதித் தேர்தலில் ஐ. தே. க. வை விட்டு விலகிய தமிழ், முஸ்லீம் மக்களை மீண்டும் ஐ. தே. க. வின் ஆதரவாளர்களாக மாற்றுவதே விக்கிரமசிங்கவின் வியூகத்தின் நோக்கமாகும்.**



***தற்போதைய அரசு இனப்பிரச்சினைக்கான தீர்வு என சில அரசியல் யாப்புத் திருத்தங்களை உருவாக்கவுள்ளது. பாராளுமன்றத்தில் அவற்றை நிறைவேற்ற மூன்றிலிரண்டு பெரும்பான்மை தேவை.*** அது இவ் அரசியல் கட்சிக்குக் கிடையாது. பிரதான எதிர்க்கட்சியான ஐ. தே. க. கொஞ்சம் ஒத்துழைத்தால் அந்தப் பெரும்பான்மை கிடைத்துவிடும். ஆனால் விக்கிரமசிங்க தலைமையிலான ஐ.தே.க. அவ்வாறு ஒத்துழைக்க மறுத்து வருகிறது. எங்கே அரசாங்கம் பிரச்சினையைத் தீர்த்து அரசியல் லாபம் பெற்றுவிடுமோ என்ற போட்டியுணர்வே அந்நிலைப்பாட்டிற்குக் காரணம் என்பது அவதானிகள் அபிப்பிராயம். ஆனால் விக்கிரமசிங்க இவ்வாறு இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இணங்க மறுப்பது இலங்கைத் தமிழ் மக்கள் மத்தியில் அவருக்குக் கெட்ட பெயர் உருவாக்கிவிடும் அபாயம் உண்டு. தமிழர் தீர்வுக்கு தடைக்கல் ஐ. தே. க. தான் என்ற எண்ணம் மேலோங்குவது அக்கட்சிக்கு நல்லதல்ல. எனவேதான் விக்கிரமசிங்க வகுத்துவரும் புதிய வியூகம் சந்திரிகா அரசின் தீர்வுத் திட்டத்திற்கு எதிர்ப்பினை ஒருபுறம் தெரிவித்துக் கொண்டு மறுபுறத்தில் தமிழர் பிரச்சினைக்குப் புதிய தீர்வொன்றினை முன்வைக்கும் விதத்தில் அமைந்துள்ளது.

விக்கிரமசிங்க முன்வைக்கும் தீர்வுத் திட்டத்தின் சில அம்சங்கள் தற்போது வெளியாகியுள்ளன. ***தற்போதைய அரசியல் திட்டத்திற்கு மாற்றம் எதனையும் கொண்டுவராத முன்னைய ஒற்றையாட்சி அமைப்புக்குட்பட்ட நிலையில் அதிகாரப்பரவல் செய்ய ரணில் உத்தேசித்திருக்கிறார்.*** மாகாண சபைகளுக்கு கூடிய அதிகாரங்களை வழங்கி வலுவூட்ட விரும்புகிறார். மாகாண சபைகளில் உறுப்பினர்களில் பாதிப் பேர் உள்ளூராட்சி சபைப் பிரதிநிதிகள். மீதிப் பேர் நேரடியாகத் தெரிவுசெய்யப்படப் போகிறார்கள். **மாகாண சபைக்கு கூடிய அதிகாரம் வழங்க முன்வந்தபோதிலும் முக்கிய துறைகளான நிதி, காணி, சட்டஒழுங்கு போன்ற விடயங்களில் மத்திய அரசின் கரமே மேலோங்க வேண்டுமென்பது ரணிலின் கருத்து.** வடக்கு - கிழக்கு மாகாண இணைப்பைப் பொறுத்தவரை தற்போதைய தற்காலிகப் பிணைப்புத் தொடர்ந்தும் நீடிக்கலாம் என்பது ரணிலின் எண்ணம். மாகாண எல்லைகள் மாற்றியமைக்கப்படக் கூடாது என்கிறார் ரணில். முஸ்லிம் பெரும்பான்மை கொண்ட தென்கிழக்கு மாகாண சபை உருவாகுவதை அவர் எதிர்க்கிறார்.

அதிகாரப் பகிர்வு தவிர மத்தியிலும் கூடுதல் அதிகாரம் சிறுபான்மையினருக்குக் கிடைக்க வேண்டும் என்பது ஐக்கிய தேசியக் கட்சியின் கருத்து. சிறுபான்மைச் சமூகத்துக்கும் இரு அதிகாரமுள்ள துணை ஜனாதிபதி பதவிகள். அமைச்சர் அவையில் 30 சதவீதத்துக்குக் குறையாமல் சிறுபான்மைச் சமூகங்களுக்கு இடம். சிறுபான்மைச் சமூகங்களை கூடுதலாக பிரதிநிதித்துவம் செய்யும் அதிகாரம் வாய்ந்த மேல் சபை போன்ற யோசனைகளும் ஐ.தே.கட்சியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இன்றைய யதார்த்தபூர்வமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரச்சினை தமிழ் மக்களைப் பொறுத்தவரை போரும் போர் விளைவிக்கும் பாதிப்பும்தான். தற்போதைய போரின் காரணமாக தமிழ் மக்கள் மனம் நொந்து உளம் வெந்து வாடுகின்றனர் என்பதை நன்குணர்ந்த விக்கிரமசிங்க வாடிய பயிருக்கு வான் மழை போல் சமாதான வார்த்தை மழை பொழிகிறார். தான் ஆட்சிக்கு வந்தால் அனைத்துக் கட்சி மகாநாடு ஒன்றைக் கூட்டிய பின்னர் விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் ஒரு போர் நிறுத்தத்தை மேற்கொண்டு நிபந்தனைகளற்ற பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பேன் என்கிறார் ரணில்.

அண்மைக்கால நிகழ்வுகளால் அந்நியப்பட்டுப் போயிருக்கும் தமிழ் மக்களுக்கு ஒரு நம்பிக்கை ஒளியைக் காட்டக்கூடிய புதிய வியூகத்தை வகுத்துள்ளார் ரணில் விக்கிரமசிங்க. இவ்வியூகம் ஏராளமான தமிழ் வாக்குகளை அவரது கட்சிக்கு தாராளமாக வழங்கும் என்பதே அவரது கணிப்பு. அவரது இவ்வெதிர்பார்ப்பு வெற்றியளிக்குமுன் மக்கள் மத்தியில் அது பற்றி எழுந்துள்ள நியாயமான கேள்விகளுக்கு விடை கிடைப்பது அவசியம். புரையோடிக் கிடக்கும் இனப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு வழங்க முடியும் என எண்ணும் சந்திரிகா அரசின் திட்டத்திற்கு ஆதரவு தர மறுப்பதற்கான ஆணித்தரமான நியாயங்களை அவர் தர வேண்டும். காரணங்களைக் கூற வேண்டும்.

**அவரது கட்சிக்கு உள்ளேயும் வெளியேயும் உள்ள பேரினவாத சக்திகள் எதிர்ப்பைத் தாண்டி வாக்குறுதிகளை நிறைவேற்றும் ஆற்றல் உண்டென்று நிரூபிக்க வேண்டும். விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு காண்பதற்கான முன்முயற்சிகளுக்கு முப்படையினர் முழுமையான ஆதரவு தருவார்களா என்பதை அவர் விளக்க வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக விடுதலைப் புலிகள் விக்கிரமசிங்கவின் குறிக்கோள்களுடன் ஆத்மார்த்தமாக ஒத்துழைப்பார்களா என்பதை அவர் தெளிவுபடுத்த வேண்டும். ஐ.தே.க. வழங்கக்கூடிய அதிகாரங்களை விட அதிகமாக வழங்கும் சந்திரிகா அரசு தீர்வுப் பொதியையே நிராகரித்த விடுதலைப் புலிகள் ரணில் தரும் ஒற்றையாட்சிக்குட்பட்ட அதிகாரப் பகிர்வினை ஏற்றுக்கொள்வார்களா? அத்துடன் "இயல்பு நிலை" முதலில் வேண்டும் எனக் கூறி படைத் தரப்பின் நிலைகளை பின்வாங்கிக் கொள்ளும்படி புலிகள் கோரினால் விக்கிரமசிங்க நிலை என்ன?**

இக் கேள்விகளுக்குச் சரியான தெளிவான பதில்களை நம்பத் தகுந்த விதத்தில் அளிப்பதில் மாத்திரமே விக்கிரமசிங்கவின் வியூகம் வெற்றி பெறுவது தங்கியுள்ளது.



# செல்லுபடியாகாத சட்டங்கள்

சட்டமா அதிபரே செல்லிவிட்டார். சங்கடங்கள் தீர்ந்த மாதிரித்தான். நிம்மதிப் பெருமூச்சு விடலாமென்று பார்த்தால் அவரே 'அம்போ'வென்று கைவிரிச்சிட்டாரே! எல்லாம் **பொலிஸ் றிப்போட்** பற்றித்தான். வீதிச் சோதனைகளில் அதைக் காட்டும்படி சட்டமில்லையென்றும், ஒரு முறை பதிந்தால் மாற்றமேதும் இருந்தாலேயன்றிப் புதுப்பிக்கத் தேவையில்லையென்றும் ரூபவாஹினி ***'கேள்விகளால் ஒரு வேள்வி'***யில் காதுகளில் தேன் வார்த்தார் **சட்டமா அதிபர்.** "ஆனால் வீதிச் சோதனைகளில் அதைக் கோருகிறார்களே, சில பொலிஸ் நிலையங்களில் மாதாமாதம் வந்து புதுப்பிக்கச் சொல்கிறார்களே" யென்று ஆவல் மிகுதியில் ஒருவர் எழும்பிக் கேட்டுவிட்டார். சட்டமா அதிபர் புன்னகையுடன் சொன்ன பதில்: "சட்டத்தை நடைமுறைப்படுத்துவது எனது பொறுப்பல்ல, அது பொலிஸார் வேலை".



**....ஆண்டவன் வரம் தந்தாலும் தூங்கும் அருணாச்சலங்களை யார் எழுப்புவது...?**

*தங்கள் சொந்தப் பொய்களைத் தாமே விழுங்க நேர்வதனாலேயே சகல அரசியற் கட்சிகளும் இறுதியில் மரணிக்கின்றன.*

**- ஜோன் ஆர்புதொன்ட்**

. . . . .

*அரசியல்வாதி அடுத்த தேர்தலைப் பற்றிச் சிந்திப்பான். ஆனால் ஒரு நாட்டுத் தலைவன் அடுத்த தலைமுறை யைப் பற்றியே சிந்திப்பான்.*

**- ஜேம்ஸ் ஃப்ரீமன் கிளார்க்**

. . . . .

*ஜனநாயகமென்பது **'நான் உன்னளவுக்கு வசதியுடையவனாக வேண்டும்'** என்பதல்ல, **'நீ என்னைப்போல் வசதியுடையவனாக வேண்டும்'** என்பதேயாகும்.*

**- தியடோர் பாக்கர்**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# யாழ்ப்பாணம்: உறையாத குருதி

**அமுதசாகரன்**

தொடர்ந்து இடிகளையே தாங்கிக் கொண்டிருக்கிறார்கள் யாழ்ப் பாண மக்கள். *"இத்தனை இடிக ளுக்குள்ளும்தான் வாழ வேண்டுமென்றால் வெடியோ, குண்டோ விழுந்து வெள்ளெனச் செத்துப் போனாலும் பரவாயில்லை...."* என்று சலிப்போடு சொன்னார் ரிட்டயரான ஆசிரியர் ஒருவர்.

ஒன்றன் மேல் ஒன்றாக எல்லாப் பக்கமிருந்தும் சுமத்தப்படும் கஷ்டங்களினால் நிலைகுலைந்து போயுள்ளனர் யாழ். மக்கள்.

சாதாரண வாழ்க்கை ஒன்றுக்குத் திரும்பிவிட முடியும் என்ற நம்பிக்கைகள் சிதறடிக்கப்படும் போதெல்லாம் யாரை நோவதென்றே அவர்கள் தடுமாறுகிறார்கள்.

முன்னாள் யாழ்ப்பாண மேயர் சரோஜினி யோகேஸ்வரனின் தகனக் கிரியைகள் முடிந்து, பதினோராம் நாள் கேட்கப்பட்ட கேள்வியொன் றுக்கு--

***"சரோஜினி கொல்லப்பட்டுவிட்டார் என்பதைக் கேட்டு அதிர்ச்சி யடைந்தேன். மக்களுக்கு இயல்பான ஒரு வாழ்க்கையை ஏற்படுத்த முன்வந்தார் என்பதைத் தவிர அவர் புரிந்த குற்றம் என்ன என்பதை விளங்கிக்கொள்ள முடியவில்லை. இவ்வளவு நாகரிகம் வளர்ந்துவிட்ட பிறகும் இத்தகைய கொலைகளுக்கு மத்தியில்தான் நாம் வாழ வேண்டியிருக்கிறது என்பது கவலை தருகிறது...."*** என்று பதில் சொல்லியிருந்த யாழ்ப்பாணத்தின் அடுத்த மேயர் சிவபாலனும் கொல் லப்பட்டிருக்கிறார், அதைவிடப் பயங்கரமானதும் வினைத்திறன் மிக்க துமான முறையில்...

முன்னாள் மேயரின் கொலைக்காக கவலை கொண்ட மேயரும் கொலையுண்டுவிட்டார். யாழ் மக்கள் பெருந்திரளாகத் திரண்டு அஞ் சலி செலுத்திவிட்டுப் போயிருக்கிறார்கள்.

*"எப்போதும் அகால மரணங்களுடன்தான் எங்கள் வாழ்க்கையா?"* என்ற பயத்தை முகங்களில் எழுதி ஒட்டியிருந்ததைத் தவிர வேறு வகை தெரியாக் கிலேசமுடன் மக்கள்....

***"அகிம்சையே எங்கள் வழி"*** என்று இப்போது சொல்லிக்கொள்ளும் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியினர், தமது செயல்பாட்டிலும் அத்தகைய உறுதியைக் கடைப்பிடித்திருப்பதை யாழ் மேயர் விவகா ரங்களில் காண முடிகிறது.

போட்டியிட மாட்டார்கள், போட்டியிட்டாலும் யாழ்ப்பாண நிர்வாகத் திற்கு தலைமையேற்க மாட்டார்கள் என்ற ஊகங்களை சரோஜினி யின் பதவியேற்பின் மூலம் பொய்யாக்கினார்கள்.

பின்னர் சரோஜினியின் படுகொலையோடு அந்த இடத்திற்கு யாரும் முன்வரமாட்டார்கள் என்று நிலவிய அபிப்பிராயங்களையும் பொன். சிவபாலனின் நியமனம் தவிடுபொடியாக்கியது.

*"மக்களுக்கு சில ஆறுதல்களைப் பெற்றுத்தர முயல்வதற்காக வந்திருக்கும் நான் யாருக்கும் பகைவனல்ல"* என்று கூறிச் செயலாற் றிய சிவபாலன் படுகொலையானது கூட்டணிக்கும் சரி, மக்களுக்கும் சரி அதிர்ச்சியேதான்.

**இத்தோடு இந்த ஆட்டம் முடிவுபெற்றுவிடும், யாழ் மேயராவதற்கு யாரும் முன்வரப் போவதில்லை என்ற கொலையாளிகளதும் சில பத்திரிகையாளர்களதும் எதிர்பார்ப்பை உடைக்கும்வகையில் கொலை நடந்த அன்றைய இரவு பி.பி.சி தமிழோசையில் ஒலித்தது ஒரு குரல்:**



வெடித்த கணத்தில் உறைந்த நேரம்.........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***'கொலைகள் மூலம் ஜனநாயகத்திற்கு முடிவு கட்டிவிடலாமென்று யாராவது எண்ணினால் விரைவில் அதை அவர்கள் நிறுத்தவேண்டி வரும்'*** என்று முழங்கினார் ஆவரங்காலைச் சேர்ந்த கூட்டணி உறுப்பினர் ஒருவர். உண்மையிலேயே யாழ் மக்களுக்கு மட்டு மல்ல ஜனநாயகத்திற்கும் கூட தெம்பைத் தரும் வார்த்தைகள் அவை.

## யாழ்ப்பாண மக்களின் நிலை என்ன?

ஒன்றரைத் தசாப்தங்களுக்கு மேலாக துப்பாக்கி நிழல்களுக்குக் கீழேயே வாழ்ந்துவிட்டார்கள் யாழ் மக்கள். சிறிலங்கா ராணுவமும் இந்திய ராணுவமும் புலிகளின் ராணுவமும் மாறி மாறி இந்த மக்களைத் தமது ஆளுகைக்குட்படுத்தியுள்ளன. இதனால் சிவில் நடைமுறைகளையே தெரிந்துகொள்ளாத ஒரு தலைமுறையும் இங்கு உருவாகிக் கொண்டிருக்கிறது.

ஒரு சாரார் யுத்தம் நடைபெறும் வரை சிவில் நிர்வாகம் பற்றிப் பேசுவது ஏமாற்று என்கிறார்கள். ஆனால் அதுவரைக்கும் கொடுக் கல் வாங்கல்களுக்காக இராணுவத்தினரிடமே மக்கள் சென்றுவர வேண்டியிருப்பது உசிதமல்ல என்பது மற்றொரு சாரார் கருத்து.

பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவர் சொன்னார்:

*"உண்ண உணவு, குந்த இடம் போன்ற அடிப்படைத் தேவை கள், சுதந்திரமான நடமாட்டம், இந்த மண்ணுக்குரிய பிரஜை என்கிற கௌரவம்.... இவையே எல்லா மனிதர்களும் அவாவி நிற்கின்ற விடயங்களாகும். எத்தகைய ஒரு சூழலிலும் இவற்றை மக்கள் வேண்டி நிற்பார்கள். இதற்குப் பங்கம் நேருகிற விதமான நடவடிக்கைகள் மீது இயல்பாகவே மக்கள் எதிர்ப்புணர்வு கொள்*



*கிறார்கள். அடிப்படைத் தேவைக்குரிய பொருட்கள் கிடைப்பதில் இருக்கும் தடங்கல், "செக் பொயின்ற்"றுகளை நின்று நின்று தாண்டும் பயணம் ஆகியவற்றில் சில தளர்வுகளைக் கண்டுவந்த மக்களுக்கு மீண்டும் மீண்டும் அவை குழப்பப்படும்போது சலிப் புண்டாகிறது. அதனால்தான் மேயர்களின் கொலைக்கு மக்கள் இந்தளவு எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள்"* என்றார் அவர்.

குண்டு வெடிப்புகளினாலும் கொலைகளினாலும் அதிர்ந்து அதிர்ந்துபோய், குருதி உறையா நிலையில் இன்று விறைத்துப் போயிருக்கிறது யாழ்ப்பாணம்.



### சங்கரியின் சவால்!

யாழ். மாநகரசபையை த.வி.கூட் டணி கைப்பற்றியபின் எதிர்நோக் கும் பாரிய சவால் எப்படி இங்கு விரிக்கப் பட்ட கொலை வலைக்கு மேல் நின்று நிர்வாகத்தை மேற் கொள்வது என்பதே. எடுத்த எடுப்பிலேயே அதன் முதல் மேயர் சரோஜினி கொல்லப் பட்டார். இக் கொலை ஏற்படுத்திய அதிர்ச் சியில் யாழ். மாநகர சபை கூட்டணி உறு ப்பினர் பலர் ராஜினா மாச் செய்தனர். ஆயி னும் கூட்டணி சமாளி த்துக்கொண்டு புதிய உறுப்பினர்கள் மூலம் அவ்வெற்றிடங்களை நிரப்பிக் கொண்டது. அடுத்த மேயர் பதவி க்கு யார் முன்வருவார் என்ற அச்ச த்தையும், யாரும் பதவி ஏற்கக் கூடா தென அக் கட்சிக்குள்ளேயே ஒரு தரப்பினர் மேற்கொண்ட அழுத்தத் தையும் முறியடித்து புதிய மேயராக சிவபாலன் பதவியேற்றார். இப்போது அவரும் கொல்லப்பட்டுவிட்ட நிலை யில் கூட்டணி ஆடிப் போய்விடுமென எதிர்பார்த்தவர்களை ஏமாறச்செய்து துணிவுடன் சவாலை எதிர் கொண்டுள்ளனர். அனுபவம் முதிர்ந்த கூட்டணித் தலைவர் கள். முன்னர் போலப் பயந்து எவரும் உடன டியாக ராஜினாமாச் செய்யதுவிடவில்லை யென்பதுடன் கூட்டணி உபதலைவர் ஆனந்த சங்கரியின் தெம்பான வார்த்தைகள் இக்கட் டான ஒரு காலகட்டத் தில் தலைமைத்துவப் பண்பிற்கு ஓர் எடுத்துக் காட்டாகும்.



ஆனந்த சங்கரி

***"கொலைகளுக்குப் பயந்து யாழ். மண்ணைவிட்டு நாம் ஒருபோதும் ஓடிவிடப் போவதில்லை"*** என்றவர் மேலும் சொன்னார்: ***"யாரும் மேயராகத் துணியாவிட்டால் நானாவது மேயராவேன்!"***

யாழ். மேயர் சரோஜினி யோகேஸ்வரனின் படுகொலை ஜனநாயகத்துக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல். இன்று நேற்றல்ல, 1948ல் மகாத்மா காந்தி கொலை செய்யப்பட்டது முதல் ஆரம்பமாகிவிட்ட இக் கொலைக் கலாசாரம், இலங்கையில் பண்டாரநாயக்கா காலம் முதல் சரோஜினி வரை தொடர்ந்து கொண்டிருக்கிறது. மக்களின் துன்பத்தை நீக்கி நல்லதே செய்வதற்கு முன்வந்த நாங்கள் இக் கொலைகளைக் கண்டு அஞ்சி ஓடினால் அது நாம் அரசியலை சொந்த நலனுக்காகச் செய்வதாக அமையும். எமது தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் அமிர்தலிங்கம் கொல்லப்பட்ட பின்னரும் நாம் எமது அரசி யலை மக்களுக்காக தொடர்ந்து முன்னெ டுத்துச் சென்றோம். சரோஜினி கொல்பட்ட தையடுத்து நான் பொறுப்பெடுக்காவிடில் அவரைக் கொலைக்களத்தில் தள்ளிவிட்டு நான்மட்டும் தப்பிவிட்ட குற்றச்சாட்டு என்மேல் விழும். இறைவன்மீது நம்பிக்கை கொண்டு இப் பதவியை ஏற்றேன்.



**மேயர் சிவபாலனின் இறுதிப் பேட்டியிலிருந்து...**

(நூருல் அயின் நஜ்முல் ஹுசைனுக்கு செப்டம்பர் 7, 1998ல் வழங்கியது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# என்னைக் கொல்லுவதே திட்டம்...

## டக்ளஸ் தேவானந்தா 'அமுது'க்கு பிரத்தியேக பேட்டி

சந்திப்பு: பாஸ்கரன்

## நேருக்கு நேர்

**கேள்வி:- களுத்துறை ஜெயிலுக்கு ஏன் போனீர்கள்?**

டக்ளஸ்:- கைதிகள் வரும்படி கடிதம் போட்டிருந்தார்கள். இல்லா விட்டாலும் போயிருப்பேன். அக்கைதிகள் எல்லாத் தமிழ்த் தலைவர்களுக்குமே தாம் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கப் போவதாகக் கடிதம் போட்டிருந்தார்கள். ஆனால் எவருமே போக வில்லை. இந்நிலையில்தான் நான் போகத் தீர்மானித்தேன். சட்ட மா அதிபரையும் அழைத்துச் செல்லவே ஏற்பாடு செய்திருந்தேன். தவிர்க்க முடியாத காரணத்தினால் தனது பிரதிநிதியை அனுப்புவ தாகச் சொல்லியிருந்தார். காலம் கடந்து செல்வதைக் கருத்திற் கொண்டு நான் மட்டும் போக முடிவு செய்தேன். களுத்துறை சிறைச்சாலை க்குச் சென்றபோது எனது பாதுகாவலர்களையும் ஆயுதங்களையும் சிறைச்சாலைக்குள்ளே அனுமதிக்க முடியாதெனச் சிறை அதிகாரிகள் சொன்னார்கள். நான் வழமையாக இவ்வாறான கெடுபிடிகளுக்கு இணங்க மாட்டேன். திரும்பி வந்துவிடுவேன். இக்கட்டான நிலையிலிருந்த உண்ணாவிரதிகள் பாதிப்புக்குள்ளாகிவிட நேரிடுமென்பதால் இதனைப் பெரிதுபடுத்தாது பாதுகாப்பின்றி உள்ளே சென்றேன்.



**கேள்வி:- சிறைப் பாதுகாப்பு விதிகளின்படி சிறை அதிகாரிகள் அவ்வாறு நடந்தது சரிதானே?**

டக்ளஸ்:- பாதுகாப்பு விதிகளின்படி அவர்கள் கேட்டுக் கொண்டது சரியாக இருக்கலாம். அப்படியானால் எனக்குரிய பாதுகாப்பை அவர்கள் வழங்கியிருந்திருக்க வேண்டும். அதைச்செய்யவில்லை? நான் எனது பாதுகாப்புடன் சென்றிருந்தால், எது நிகழ்ந்தாலும் என்னால் சமாளித்திருக்க முடியும்.

**கேள்வி:- சரி., பின்னர்.....?**

டக்ளஸ்:- உண்ணாவிரதிகளைச் சந்தித்து அவர்களிடம் பேசினேன். 'உங்கள் கோரிக்கைக்கு நான் தீர்வு தரக்கூடியவனல்ல. நான் அரசாங்கத்தின் பிரதிநிதியல்ல. ஆனால், உங்கள் இக்கட்டான நிலையில் என்னால் செய்யக் கூடிய எதையாவது செய்யவேண்டுமென்றே வந்தேன். உங்கள் கோரிக்கைகளில் நியாயமிருக்கு மானால் அதற்கு நியாயங் கிடைக்க அரசாங்கத்திடம் வாதிட்டு வழியேற்படுத்துவேன். உங்களுக்கு என்மேல் நம்பிக்கையிருந்தால் எனக்கு ஒரு மாதம் அவகாசம் தாருங்கள். அதற்குள் முடியா விட்டால் உங்கள் விருப்பப்படி செய்யுங்கள். நான் கூறுவதற்கு உடன்படுவதோ விடுவதோ உங்கள் இஷ்டம். நான் வற்புறுத்த இங்கு வரவில்லை' என்றேன். அவர்கள் என்னில் நம்பிக்கை யிருப்பதாகக் கூறி உண்ணாவிரதத்தைக் கைவிட முன்வந்தார்கள். அவர்களுக்கு குளுக்கோஸ் கொடுத்து முடித்து வைத்தேன். திரும்பி வரும்போது இன்னோரிடத்திற்கும் சென்று கைதிகளைப் பார்வையிட்டுவிட்டு வரும்படி பிரதம ஜெயிலர் கூறினார்.

**கேள்வி:- அவர் அங்கு புலிகளின் அதிதீவிர உறுப்பினர் எனச் சந்தேகிக்கப்படுபவர்கள் உள்ளார் களென்று எச்சரிக்கவில்லையா?**

டக்ளஸ்:- இல்லை. அந்த விபரம் எனக்குச் சொல்லப்படவில்லை.

**கேள்வி:- இது ஒரு திட்டமிட்ட பொறியாக இருக்கலாமெனச் சந்தேகிக்கிறீர்களா?**

டக்ளஸ்:- ஆம்.! அப்படித்தான் நினைக்கிறேன்.

**கேள்வி:- அந்த செல்லில் (Cell) என்ன நடந்தது?**

டக்ளஸ்:- அங்கு சுமார் 250 பேர் மட்டில் இருந்தனர். அவர்களை இருக்கச் சொல்லி கதைத்துவிட்டு அவர்களது உண்ணாவிரதத்தையும் முடித்து தண்ணீர் கொடுத்து விட்டுத் திரும்பிய போது திடீரென ஒருவன் என்னைப் பின்புறமாகக் கட்டிப்பிடித்தான். உடனே அவனை அலாக்காகத் தூக்கித் தலைகீழாக அடித்து விட்டேன். ஆனால் சுமார் 10, 15பேர் சூழ்ந்துகொண்டு எனது இரு கைகளையும் இழுத்துப் பிடித்தனர். இன்னும் சிலர் கூரான கம்பிகளால் உடல் எங்கும் குத்தினர். பெரும்பாலான கைதி கள் எழுந்து ஓடிவிட்டனர். இருள் கவ்விய நேரமாகையால் என்னால் தெளிவாகப் பார்க்க முடியவில்லை. தாக்குதலை ஒருவாறு சமாளித்தபடியிருக்க, சிலர் சிறிய கற்களைப் பொட்டணியாக கட்டிய சாரத்தால் தலையில் பலமாகத் தாக்கினர். கண்கள் இருண்டு நினைவிழந்து விழுந்து விட்டேன். இப்போது எண்ணிப் பார்க்கையில் என்னைத் தாக்கியவர்கள் தவிர அங்கி ருந்த ஏனையவர்களது முகத்தில் ஒரு பீதி படர்ந்திருந்ததை உணரமுடிகிறது. அவர்களுக்கு இப்படியொரு கொலை முயற்சி நிகழவிருப்பது தெரிந்திருக்க வேண்டும். பயத்தால் சொல்லமுடியவில்லை. ஆயினும் பின்னர் அவர்கள் எழுதிய கடிதங்களில் இச்சம்பவத்தையிட்டு மனவருத்தம் தெரிவித்திருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கேள்வி:- உங்களுக்கு நினைவு திரும்பியபோது என்ன உணர்ந்தீர்கள்?**

**டக்ளஸ்:-** டொக்டர்கள் 48 மணித்தியாலத்திற்குள் நினைவு திரும்பாவிடில் ஆபத்தெனத் தெரிவித்திருந்தார்கள். ஆனால் நான் 36 மணித்தியாலத்திலேயே எழும்பி விட்டேன். நினைவு மீண்ட போது சிறைச்சாலைத் தாக்குதல் எண்ணமே இருந்திருக்க வேண்டும். நான் திருப்பித் தாக்கும் நினைப்பில் கையை, காலை வீசியதாகச் சொன்னார்கள். முதலில் சொன்ன வார்த்தை தண்ணீர். நான் கதைப்பதைக் கேள்விப்பட்டு டொக்டர் ஓடி வந்து என்ன என்று கேட்டதும் Water என்றிருக்கிறேன். எனக்கு நினைவு பிசகிவிடவில்லை என்று தெளிவாகிவிட்டது. எமது உறுப்பினர்களிடம் தமிழில் கதைக்கும்படி கேட்டிருந்தார். நான் முதலில் கேட்ட விடயம் கிழக்கு மாகாண வேலையில்லாப் பட்டதாரிகள் பிரச்சினை எப்படியிருக்கிறதென்று. நான் அந்த நிலையிலும் இதைக் கேட்டுள்ளதாக அறிந்த ஜனாதிபதியின் செயலாளர் பாலபட்டபெந்தி உடனடியாக அதனைத் தீர்க்க நடவடிக்கை எடுத்து, எனக்கு அதை அறிவிக்கும்படி கூறியிருந்தார். அடுத்ததாகத் திருகோணமலை அகதிகளின் கப்பல் பிரச்சினையைக் கேட்டிருக்கிறேன். இது இரண்டும்தான் எனக்கு இப்போது ஞாபகமாக இருக்கிறது.

**கேள்வி:- இத் தாக்குதலால் இறந்து விடுவீர்கள் என எதிர்பார்க்கப்பட்டும் இவ்வளவு விரைவில் தேறியது எவ்வாறெனக் கருதுகிறீர்கள்?**

**டக்ளஸ்:-** சிலர் இறைவனின் செயல் என்கிறார்கள். தன்னம்பிக்கை என்கிறார்கள். நான் செய்த கொடை-அதாவது உதவிகள் என்னைக் காத்தன என்கிறார்கள். எனக்கு சுகம் வர வேண்டுமென பலர் கோயில்களுக்கும், பள்ளிவாசல்களுக்கும் சென்றுள்ளார்கள். சில பிக்குகள் அண்மையில் கூட என் நலத்திற்காக பிரித் ஓதினார்கள்.

**கேள்வி:- உங்களுக்கு இத் தாக்குதலால் ஏற்பட்டுள்ள உடற் குறைபாடுகளையிட்டு வருத்தமில்லையா?**

**டக்ளஸ்:-** அவற்றை நான் பெரிதுபடுத்தவில்லை. இவை போராட்டத்தில் சகஜமான விடயங்கள். என்னிடம் எப்படியிருக்கிறீர்கள் என்று கேட்கும் எனது ஆதரவாளர்களிடம் **'கண் மோஷே தயான் போலவும், வாய் எம்.ஜி.ஆரைப் போலவும்'** என்று தமாஷாகச் சொல்லிக் கொள்கிறேன். எனது உழைப்பு, கட்சிக்காகவும், மக்களுக்காகவும் தொடரும். அதில் நான் பின்னிற்கப் போவதில்லை.

**கேள்வி:- உங்கள் மீதான இக் கொலை முயற்சிக்கு சிறைக்கு வெளியிலிருந்து ஏதும் உத்தரவு வந்திருக்கக் கூடுமெனக் கருதுகிறீர்களா?**

**டக்ளஸ்:-** நான் கொல்லப்பட வேண்டும் என்ற நோக்கில்தான் இது நடந்திருக்கிறது. அதில் எவ்வித சந்தேகமுமில்லை. தன்னிச்சையாக, தெரியாத்தனமாக நடந்திருக்குமென நான் கருதவில்லை. ஆனால் இதில் நான் உரிய பாதுகாப்பு எடுத்துக் கொள்ளாமையையே பிரதானமான தவறாக நான் பார்க்கிறேன். எதிரி எப்போதும் தாக்கத்தான் முனைவான். எமது கவலையீனங்கள்தான் அவனுக்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்து விடுகின்றன.

**கேள்வி:- புலிகள் உங்களைத் தமிழினத் துரோகி என்று அறிவித்திருக்கிறார்கள், உங்களைக் கொலை செய்வதற்கும் முயன்றிருக்கிறார்கள். நீங்கள் தமிழ் மக்களின் துரோகியா? இல்லையெனில் எப்படி அதை உங்களால் நிரூபிக்க முடியும்?**


தாக்குதலின்பின் டக்ளஸ்

**டக்ளஸ்:-** புலிகளின் அபிப்பிராயத்தை நான் பொருட்படுத்துவதில்லை. அவர்களின் தீர்ப்பிற்கெல்லாம் நாம் பதிலளிக்கக் கடமைப்பட்டவர்கள் அல்ல. நாம் சரியான இலக்கை நோக்கி நடந்தால் சரி.

**கேள்வி:- தமிழ்மக்களுக்குத் தீர்வு தனிநாடுதான் என்பது தொடர்பான இன்றைய உங்கள் கருத்து என்ன?**

**டக்ளஸ்:-** இன்று தனிநாடு சாத்தியமுமில்லை. அது ஒரு சாதகமான தீர்வுமல்ல. ஐக்கிய இலங்கைக்குள்ளே தமிழ் பேசும் மக்கள் தங்களது தனித்துவங்களைப் பேணக்கூடிய வகையில அமைந்த சரியான ஒரு ஏற்பாட்டிற்கு இணங்கிப் போவதைத்தான் நாங்கள் சாத்தியமான தீர்வாகக் கருதுகிறோம்.

**கேள்வி:- ஆனால் நீங்களும் முன்னர் தனிநாட்டிற்காக ஆயுதப் போராட்டம் நடத்தியவர்தானே?**

***என்னை மாடியிலிருந்து வீசினாலும் பூனையைப் போலக் கரணமடித்து கால் பதியத்தான் விழுவேன். திரும்ப ஏறி வருவேன். - டக்ளஸ்***

பாலஸ்தீன விடுதலை இயக்கத்தில் ஆயுதப் பயிற்சி பெற்ற, கராட்டே கறுப்புப்பட்டிக்காரரான டக்ளஸ் தேவானந்தாவின் உடல் மட்டுமல்ல உயிரும் மிகக் கெட்டியானது என்றும் ஒரு கருத்துண்டு.
அவருக்கு நேர்ந்த மரண அபாயங்கள் பல.



- எண்பதுகளில் திருக்கோயில் வங்கிக் கொள்ளையின் போது பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டிலிருந்து டக்ளஸ் மயிரிழையில் தப்பித்தார்.
- 83ல் வெலிக்கடைப் படுகொலைச் சம்பவத்தின் போதும் எதிர்த்துப் போராடி உயிர் தப்பினார்.
- 86ல் யாழப்பாணத்திலிருந்து இந்தியா செல்லும் கடற்பயணத்தில் படகு கவிழ்ந்த சம்பவத்திலும் டக்ளஸ் 2 மைல் தூரம் நீந்திக் கரைசேர்ந்தார் என்று சொல்லப்படுகிறது.
- 95ல் டக்ளஸினது கொழும்பு ஹவ்லொக் றோட் இல்லத்திற்கு புலிகள் மேற்கொண்ட திடீர்த் தாக்குதலில் சாமர்த்தியமாகத் தப்பினார்.
- 95ல் டக்ளஸை நஞ்சூட்டிக் கொல்லச் சதி செய்த புலி ஒருவரை இரகசியப் பொலிஸார் கைது செய்தனர்.
- இறுதியாக 98ல் களுத்துறை சிறைச்சாலையில் புலிச் சந்தேக நபர்களால் மேற்கொள்ளப்பட்ட அண்மைய தாக்குதலில் இருந்தும் தப்பியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**டக்ளஸ்:-** முன்னர் அதற்கு வாய்ப்பிருந்தது. ஆனால் அதைக் கெடுத்துக் கொண்டோம்.

**கேள்வி:- இந்தியாவை புலிகள் பகைத்துக் கொண்டதையா கருதுகிறீர்கள்?**

**டக்ளஸ்:-** இந்தியா ஒரு முக்கிய காரணமல்ல. இந்தியாவோ இலங்கை அரசோ எப்போதும் தமது நலன்களிலிருந்துதான் இப் பிரச்சினையை அணுகுவார்கள். அதையிட்டு அவர்கள் மீது பழிபோட ஒன்றுமில்லை. நாம் சரியாக நடந்திருக்க வேண்டும். நாம் ஒற்று மைப்பட்டு உறுதியாக நின்றிருந்தால் இந்தியா எமது கோரிக்கை களை ஆதரித்திருக்கலாம். ஆனால் பிரச்சினைகள் ஏற்பட்டது இயக்கங்களுக்கிடையேயும் இயக்கங்களுக்கு உள்ளேயும்தான். எமது பலவீனம்தான் எமது பின்னடைவிற்குக் காரணமேயன்றி மற்ற வர்களல்ல.



Pix. by Priyantha Fernando

**கேள்வி:- புலிகளோடு பேசாமல் இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஏற்பட முடியுமா?**

**டக்ளஸ்:-** தீர்வை ஏற்படுத்துவதற்கான சாதகமான வழி பற்றி நான் கருதுவது இது தான். தீர்வு ஏற்படுவதானால் இன்றைய சூழ்நிலையில் யு.என்.பி.க்கும் இந்த அரசுக்கும் ஒரு இணக்கம் ஏற்பட வேண்டும். அவ்வாறு இருவரும் இணங்கக்கூடிய ஒரு பொது இடம் எதுவென்றால் அது 13வது திருத்தச் சட்டமூலமாகவே (மாகாணசபைச் சட்டமூலம்) இருக்கிறது. யு.என்.பி. அதை உரு வாக்கியது. இன்றைய ஜனாதிபதி முன்னர் மேல்மாகாண முதலமைச்சராகவும் இயங்கி இருக் கிறார். எனவே அதனை ஏற்பது முதற்கட்டம். அடுத்து இன்றைய அரசு முன்வைத்துள்ள தீர்வுப் பொதியில் 70 சத வீதமானவை சகல தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டவை. அதனால் அவற்றை மட்டும் உடனடியாக அமுலுக்குக் கொண்டுவரக் கூடியதாக பாராளுமன்றத்தினூடாக சட்ட மூலம் நிறைவேற்றலாம். இதனால் மாகாண சபையுடன் இந்த 70 சதவீதமான விடய ங்களும் சேர்ந்து கிடைக்கும். இது இரண்டாவது கட்டம். மூன்றாவது கட்டமாக ஏனைய விடயங்கள் தொடர்பான பேச்சுவார்த்தையை நடத்துவது. அதில் புலிகளுடன் பேசலாம். ஆனால் அதை ஒரு முயற் சியாக மட்டுமே கருத வேண்டும். மாறாக புலிகள் உடன்படவில்லையெனக் கூறி தீர்வைத் தள்ளிப்போடுவதற்கு அதனைச் சாட்டாகப் பயன்படுத்தக்கூடாது.

**கேள்வி:- புலிகள் தரப்பில் நீங்கள் எதை எதிர்பார்க்கிறீர்கள்?**

**டக்ளஸ்:-** மாற்றமொன்று தேவை. இவ்வளவு கால ஆயுதப் போராட்டத்தால் கிடைத்தது என்ன, அழிவுகளைத் தவிர. எங்கேயோ நாம் தவறு செய்துவிட்டோம். ஆயுதப் போராட்டமே தவறென்று நான் கூறவில்லை. அப்போராட்டத்தை நடத்திய விதத்தில்தான் தவறு நிகழ்ந்திருக்கிறது. இந்நிலையில் எமக்கு மாற்றமொன்று அவசியம். மாற்றங்கள் தவறல்ல. வெள்ளையனே வெளி யேறு என்று கோஷித்த தென்னாபிரிக்கப் போராட்டம் இன்று வெள்ளையரையும் ஏற்று ஒரு தீர்வுக்கு இணங்கிப் போகவில்லையா? இஸ்ரேல் என்ற ஒரு நாட்டையே அங்கீகரிக்க மறுத்த பாலஸ்தீன விடுதலைப்போராட்டம் இன்று இஸ்ரேலில் அமைந்த ஒரு சுயாட்சித் தீர்வை ஏற்கவில்லையா? பிரிவினை கோரி எழுந்த வடஅயர்லாந்துப் போராட்டம் இன்று பிரித்தானி யாவுடன் ஒரு இணக்கத் தீர்விற்கு இறங்கி வரவில்லையா? புலிகள் தங்களை மாற்றிக் கொள்ள வேண்டும். மாறாவிட்டால் மற்றவர்கள் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். ●




'மோஷே தயானாக' டக்ளஸ்
எமது காட்டூனிஸ்டின் கற்பனை

**டக்ளசுக்கு வந்த சிறைக் கடிதங்கள்:**

14.6.1998


திரு. டக்ளஸ் தேவானந்தா எம்.பி....... பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் விசாரணையின்றி தடுத்துவைக்கப்பட்டிருக்கும் கைதிகள் 24.6.98முதல் சாகும்வரை உண்ணாவிரதத்தை ஆரம்பிக்கின்றோம். எமது கோரிக்கைகளுக்கு ஆதரவாக உண்ணாவிரத நேரத்தில் உங்களது வருகையையும் பத்திரிகை அறிக்கையையும் எதிர்பார்க்கிறோம்....

உண்ணாவிரதிகள் சார்பாக .........



98.7.30

கௌரவ பா.உ. திரு. டக்ளஸ் தேவானந்தா அவர்கட்கு..... ஐயா, அன்று நடந்த சம்பவம் எமக்கெல்லாம் ஆழமான. புண்படக்கூடிய, கவலை தரக்கூடிய, தவறான வேலை. பிழையானதென்றும் தெரியும. அரசை வெளிப்படையாக ஏசலாம். ஆனால் சிறையிலிருந்து கொண்டு எந்த இயக்கத்தையும் நாம் விமர்சனம், செய்தால் மீள அது எம்மைப் பாதித்தேவிடும். தங்களின் அன்றைய சம்பவம் கைதிகளின் 90 வீதமானவர்களுக்கு கவலையும் வெட்கமும்தான்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# Oh! Butterfly butterfly!

**அற்ப ஆயுளில் சிறகினை உதிர்க்கும் வண்ணத்துப் பூச்சியரே! ஓ! வண்ணத்துப் பூச்சியரே!**

- ஹிஷாம்

பூவுக்கும் பூவுக்கும் காதல் தூது செல்லும் வண்ணத்துப் பூச்சிகள், காதல்சோடிகளுக்கும் சாமரம் வீசத் தாமாக வந்து சேர்ந்துவிடும் சின்ன தேவதைகள். வண்ணச் சிறகடிக்கும் இவற்றைக் கண்டால் எம் சின்னஞ் சிறு மழலைகள் கன்னங் குழிவிழ என்ன ஆனந்தமாய்க் குதூகலித்துப் போகின்றனர்.



வசந்தகாலத்தின் இந்தக் கட்டியக் காரர்கள் கூட்டமாய் வான்வலம் வரும்போது, என்ன இது!... பூவுக்குச் சிறகு முளைத்து விட்டதோ என்றொரு பூரிப் எம் இதயமெல்லாம் பரவும். ஆனால் பூவுக்கும் நோகாது அமர்கின்ற, யாருக்கும் கெடுதியற்ற, இந்தப் பூமியின் புன்னகை முத்துக்கள் இன்று கண்ணீர் சொரிவதைப்பற்றி யார் கவலைப்படுகிறார்கள்?

பட்டுத் தேவதைகளாய் உலாவரும் இந்த வண்ணத்துப் பூச்சிகளை வலைவீசிப் பிடித்து, கொன்று, அதைஅப்படியே பூவுடன் இணைத்துத் தம் காதற்பரிசாகப் பரிமாறிக்கொள்ளுகின்ற மானுடரின் குரூர ரசனையை அன்பின் அடையாளச் சின்னமாக வன்றோ நாம் பாராட்டிக் கொள்கிறோம். என்ன, திகைப்பாக இருக்கிறதா? ஆம், உண்மை என்னவென்றால் இன்று, வேகமாக அருகி வரும் ஒரு இனமாக வண்ணத்துப் பூச்சிகள் மாறி வருகின்றன. பல்வேறு சூழல் காரணிகளும் நகரமயமாக்கல் திட்டங்களும் மட்டுமின்றி, மனிதர்களின் நடவடிக்கைகளாலுமே இவை அழிகின்றன.

இலங்கை, உலகின் சிறந்த வண்ணத்துப் பூச்சிகளின் உறைவிடமாகத் திகழ்ந்த ஓர் இயற்கைப் பெட்டகம். இங்கே 50 வருடங்களுக்கு முன் 9 கணங்களைச் சேர்ந்த 242 வகையான வண்ணத்துப் பூச்சிகள் இருந்ததாகவும் அதில் 41 அரிதான வகைகள் காணப்பட்டதாகவும் பிரித்தானிய ஆய்வாளர் **'வுட் ஹவுஸ்'** என்பவர் குறிப்பிட்டிருந்தார். ஆனால், தற்போது 101 வகைகளே எஞ்சியுள்ளன. அவற்றிலும் அரிய வகைகள் 25 மட்டுமே உள்ளன. இருப்பவற்றிலும் 34 வகைகள் அழியும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளன. உலகில் வேறெங்கும் காணப்படாத, இலங்கைக்கே உரித்தான 11 வகை வண்ணத்துப்பூச்சிகள் இப்போது அறவே இல்லை. இவ்வகையான 10 வகைகள் மட்டுமே இன்னும் இருக்கின்றன. வண்ணத்துப் பூச்சிகள் வெவ்வேறு வாழிடங்களில் வாழ்வன. அடர் காடுகளிலும், இருட் பற்றைகளிலும் வாழும் இனங்கள் பல காடழித்தலால் அழிந்து போகின்றன. விவசாய இரசாயனப் பொருட்கள் வண்ணத்துப் பூச்சிகளின் முட்டைகளை அழித்துவிடுகின்றன. இதைவிட வண்ணத்துப் பூச்சிகளை ஏற்றுமதி செய்யும் திருட்டு வியாபாரத்தில் இவை பலிக்கடாவாகி வருகின்றன.

ஆனால் வண்ணத்துப்பூச்சிகள் வெறுமனே சூழலை அழகுபடுத்தி எம் கண்களுக்குக் குளிர்ச்சியூட்டுபவை மட்டுமல்ல, அவை இயற்கைச் சமநிலையைப் பேணும் சூழல்வட்டத்தின் இன்றியமையாத பங்காளிகள். •

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புலம் பெயர்ந்த பதிவுகள்

"**திரைகடலோடியும் திரவியம் தேடு**" என்ற தமிழர் முதுமொழி எம்மவர்களின் மத்தியில் உள்ள "நாடோடும" வாஞ்சையை நன்கு சித்தரிக்கின்றது. தற்காலச் சூழ்நிலையில் "தமிழ் கூறும் நல்லுலகு" என்பது தமிழகம், இலங்கைக்கு அப்பால் விரிந்து பரந்து விட்டது. 83 கலவரங்களின் பின் தோன்றிய போர்ச் சூழல் பெரும்பாலான தமிழரை இலங்கையை விட்டு இரவல் நாடுகளுக்கு அரவணைப்புத் தேடி ஓட வைத்தது. 1983ன் பின் சுமார் ஏழரை இலட்சம் தமிழ் மக்கள் இல்ங்கையை விட்டகன்றுவிட்டனர் என்றொரு புள்ளிவிபரக் கணக்கு கூறுகிறது. இலங்கையில் இறுதியாக எடுக்கப்பட்ட 1981 குடித்தொகை மதிப்பீடு இலங்கைத் தமிழர் எண்ணிக்கை 16 இலட்சம் என்று கூறுகிறது. இவ்விரு எண்ணிக்கையையும் நோக்கும்போது பிரச்சினையின் பாரதூர தன்மை புலப்படுகின்றது.

இன்று உலகின் பல நாடுகளிலும் ***"டயஸ்பொரா"*** எனப்படும் புலம் பெயர்ந்த தமிழர்கள் வாழ்கின்றனர். பல இடங்களில் ஐதாகவும் சில இடங்களில் செறிந்தும் வாழ்கின்றனர். முயற்சியால் முன்னேறி குபேரரானவர்களும் உண்டு. வறுமைக் கோட்டெல்லையின் கீழ் குசேலர்களாக இருப்பவர்களும் உண்டு.

**இவ்வாறு வாழ்பவரில் கணிசமானோர் உடலால் புலம் பெயர்ந்தும் உணர்வால் பிறந்த மண்ணிலும் வாழ்பவர்களே. என்றோ ஒரு நாள் பிரச்சினை தீரும். அப்போது நாம் ஊர் போய்ச் சேரலாம் என்ற நம்பிக்கையைப் பற்றுக் கோடாக வைத்து வாழ்பவரே அதிகம்.**

வந்து குடியேறிய நாடுகளில் சிக்கல்கள் வாட்டும் போது பிறந்த மண் நினைவு இவர்களை ஆட்டிப் படைக்கின்றது. *"நிலவுக்கு அஞ்சிப் பரதேசம் போனோமே"* என்று அங்கலாய்க்கின்றனர். மொழியை அடிப்படையாகக் கொண்டு மூண்டெழுந்த இனப்பிரச்சினையால் வெளியேறிய இவர்கள் தம் வருங்காலச் சந்ததி புலம் பெயர்ந்த மண்ணில் தாய்மொழி தமிழை மறந்து துறந்து வாழ்வதைப் பார்த்துத் தவிக்கின்றனர். இன்னொரு புறத்தில் தமிழர் ஓரளவு அடர்த்தியாக உள்ள இடங்களில் தமக்கென்றொரு உலகை இவர்கள் படைத்துள்ளனர். சிகையலங்காரம் முதல் வாகனம் பழுது பார்ப்பது வரை வாழ்வின் அன்றாட அலுவல்கள் முழுவதனையும் தமிழர்கள் மூலம் ஒரு தமிழ் மயமான உணர்வுடனேயே செய்யும் வாய்ப்பு இத்தகையோர்க்குண்டு.

**ஆனாலும் வந்தேறிய நாட்டுப் பண்பாடுகளும் சொந்த நாட்டுப் பண்பாட்டு மூலக்கூறுகளும் பல தடவைகளில் முரண்பாடு காண்கின்றன. இந்த முரண்பாடுகளுக்கிடையில் ஓர் உடன்பாடு காண முற்படுவதிலேயே இவர்கள் வாழ்க்கைச் சமன்பாடு அடங்கி விடுகிறது.** புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் சுக துக்கங்கள், நன்மை தீமைகள் மிகப் பல. அந்த அனுபவங்களை அனைத்துத் தமிழ் வாசகர்களுடனும் பகிர்ந்து கொள்ள ***"அமுது"*** களம் தருகிறது. **வேருக்கும் விரிந்து பரந்திருக்கும் விழுதுகளுக்கும் இடையில் ஒரு புரிந்துணர்வை அனுபவப் பகிர்வை ஏற்படுத்துவதே இக்கட்டுரைத் தொடரின் நோக்கம். தொப்புள் கொடி உணர்வுகளை நினைவு கூரும் வகையில் புலம்பெயர்ந்த பரிமாணங்கள் இனிக் கிரமமான பதிவுகளாகும்.**



**எழுதப்போவது : டி.பி.எஸ். ஜெயராஜ்**

---

## ஸ்ரோபரி

***ஆமாம்..!*** *மங்கையருக்கான விசேட பகுதி அமுது நவம்பர் இதழிலிருந்து ஆரம்பம்! பெண்கள் சமூகத்தின் சரி பாதி. எண்ணிக்கையில் மட்டுமல்ல, செயற்பாட்டிலும்தான். அழகை அழகாகவன்றி ஆபாசமாகப் பார்க்கும் சாராரால் அழகை வெளிப்படுத்தவே அஞ்சும் நிலைதான் அடிமை மனப்பாங்காக எங்கள் ஆரணங்குகளின் அடிமனதில் பதிக்கப்பட்டுள்ளது. சுதந்திரமான சிட்டுக் குருவிகளாக, எம் பாரதி கண்ட புதுமைப் பெண்களாக உங்கள் வெளிப்பாடுகளை இங்கே அள்ளித் தெளித்து இப் புதிய பூமியில் நீங்கள் பவனி வாருங்கள். எங்கே ஸ்ரோபரிகளை அனுப்ப ஆரம்பியுங்கள் பார்க்கலாம். உங்களது சொந்தப் பூங்காவில் நீங்களாகவே விதைத்து விளைந்த வளர்த்தவைகளாக சுவை குன்றாதவையாக இருக்குமாறு பார்த்துக் கொள்ளுங்கள். அப்போதுதான் ரசிப்பவர்களின் மேலான மதிப்பை நீங்கள் நியாயமாகச் சம்பாதித்து பெண்ணினத்துக்கும் அதை மதிக்கும் எமக்கும் பெருமை தேடித்தருவீர்கள்.*



ஆசிரியர்:- பிள்ளைகளே ''கந்தன் வள்ளியை மணந்தான்'' என்பது இறந்தகால வாக்கியம். எங்கே அதை எதிர்காலத்தில் சொல்லுங்கள்....

மாணவன்:- கந்தன் வள்ளியை விட்டுவிட்டு கனடா போய்விடுவான்.....!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த நூற்றாண்டுப் புரட்சிகள்

## எழுச்சியும் வீழ்ச்சியும்





புரட்சி என்னும் சொல் இந்த நூற்றாண்டின் தாரக மந்திரம். அதன் ஆரம்பம் முதல் இன்று முடியும் தறுவாய் வரை இந் நூற்றாண்டில் எழுந்த, வீழ்ந்த புரட்சிகளினதும் எழுச்சிகளினதும் தாக்கம் இன்னும் எம்மிடையே அதிர்வலைகளை எழுப்பிக் கொண்டேயிருக்கிறது. புரட்சியினால் தோன்றி மக்களின் மனதிலே நீங்காத இடத்தைப் பெற்றுவிட்ட தலைவர்கள் பலர். அதுமட்டுமல்ல, மக்களுக்காகவே புரட்சிகளைச் செய்து பின்பு மக்களையே அவலங்களுக்குள் தள்ளிய புரட்சியின் நாயகர்களையும் இந்த நூற்றாண்டிலேயே நாம் கண்டோம்.

மார்க்ஸியம் என்னும் விஞ்ஞான தத்துவத்தை சமூகம் என்னும் பரிசோதனைக் கூடத்திலே சோத னை செய்யப் போய் வெற்றி கண்டோர் சில பேர், கையைச் சுட்டுக் கொண்டோர் பல பேர். புரட்சியின்மூலம் எழுந்து நின்றவர்கள் வீழ்ந்து விட்டதும், மார்க்ஸிய விஞ்ஞானமே இன்று சோதனைக்குள்ளாகியிருப்பதும் வரலாறு. புரட்சியாளர்கள் எல்லாம் கொள்ளைக்காரர்கள் கொலைகாரர்கள் என்று கொக்கரிக்கும் முதலாளித்துவ சிந்தனையாளர்கள். புரட்சியில் மறைக்கப்பட்ட சம்பவங்களை உலகுக்குக் காட்டுகிறோம் எனக் கூறி சினிமாப் படங்களாக எடுத்துக் கதையளந்து கொண்டிருக்கிறார்கள். என்ன செய்வது, புரட்சிகளை நேரடியாகப் பார்க்காத மக்கள் இந்தக் கதைகளை எல்லாம் நம்பவேண்டி இருக்கிறது.

**இந்த நூற்றாண்டுப் புரட்சிகளின் ஐந்தொகைக் கணக்கு என்ன?**
**எதிர்பாருங்கள்!**

**அமுது அடுத்த இதழிலிருந்து....** **எழுதுவது: *புரட்சிதாஸ்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தயாரிப்பில் ஈடுபட்ட தொழிலாளர் 15,000

## 11 ஒஸ்கார் விருதுகள் - உலக சாதனை!



கப்பல்கள் கடலிலே மூழ்குவதையும் விமானங்கள் இயந்திரக் கோளாறினால் வீழ்ந்து நொருங்குவதையும் வைத்துப் படம் பண்ணுவதில் அமெரிக்க ஹொலிவூட்காரர்கள் வல்லவர்கள். ஆனால் டைட்டானிக்கைப் போல் ஒரு படத்தை இதுவரை பார்க்கவே இல்லை என்று பலரும் சொல்லும் அளவிற்கு மிகப் பிரமாண்டமான தயாரிப்பு அது.

1912ம் ஆண்டு இங்கிலாந்தில் இருந்து அமெரிக்காவுக்குப் புறப்பட்ட பிரமாண்டமான ஒரு பயணிகள் கப்பல். அது எதிர்பாரா விதமாக ஆழ நடு அத்லாந்திக் கடலில் பனிப்பாறையொன்றில் மோதிக் கொள்வதால் மூழ்கி விடுகிறது. அதிலிருந்த பயணிகள் 1500 பேர் மாண்டு போகிறார்கள். இதுதான் டைட்டானிக்கின் கதை.

வெறும் கப்பல் மூழ்கும் கதையை மட்டும் வைத்து மூன்று மணிநேரம் பார்வையாளர்களை பிரமிக்க வைக்க முடியாது என்று எண்ணியோ என்னவோ, இயக்குனர் கமரூன் கதைக்குள் மற்றுமொரு கதை (Story with in the story) என்ற டெக்னிக்கை பாவித்துள்ளார். டைட்டானிக் வசூலிலே பெரும் சாதனை செய்துள்ளது என்னமோ உண்மைதான்.

அது கோடி கோடியாகப் பணத்தை மட்டுமல்ல மக்களின் மனங்களையும், உணர்ச்சிகளையும் கூடக் கொள்ளை கொண்டு விட்டது.

இப்போது உலகெங்கும் தொலைக்காட்சிகளில் டைட்டானிக் திரைப்படத்தின் தலைப்புப் பாடல் ( Title song) மிக பரபரப்பாக ஒளிபரப்பப்படுகின்றது. பாடசாலைப் பிள்ளைகள், சிறுவர்கள் அந்தப் பாடலின் இசையைக் கேட்டதுமே 'அதோ டைட்டானிக் பாடல்' என்று பூரித்துப் போகின்றனர்.

இப்போது இலங்கையிலும் டைட்டானிக் தொப்பி, டைட்டானிக் காதலர்களின் படம் போட்ட டீ சேர்ட்டுக்கள் என கொழும்புத் தலைநகர் உட்பட இன்னும் பல நகரங்களிலும் டைட்டானிக் காய்ச்சல் அகோரமாக அடித்துக் கொண்டிருக்கிறது. வீடியோப் பிரதிகளை வாடகைக்கு விடும் வியாபாரிகள் டைட்டானிக் பிரதிக்கு பத்து ரூபாய் அதிகமாகவே வாங்குகிறார்கள். கேட்டால் '∴பாஸ்ட் மூவிங்' என்கின்றனர்.

டைட்டானிக் கப்பல் மூழ்கும் கதையை விட கப்பலின் முதலாம் வகுப்பில் உள்ள வசதி படைத்த பயணிகளுக்கிடையே இருக்கும் ரோஸ் என்னும் பெண்ணுக்கும் மூன்றாம் வகுப்பில் உள்ள வசதி குறைந்த ஜாக் என்னும் இளைஞனுக்கும் இடையேயான காதல் கதையே மக்களை அதிகம் கவர்கிறது எனலாம். (அம்பிகாபதி அமராவதியை விட ஒரு படிமேல்)

உண்மையான டைட்டானிக் விபத்தில் கப்பலின் முதல் வகுப்பில் இருந்த வசதி படைத்தோர் 700 பேரும் உயிர் தப்ப, மூன்றாம் வகுப்பில் இருந்த 1500 வசதிகுறைந்தோர் நீரில் மூழ்கி மடிகின்றனர். ஆனால் கமரூனின் டைட்டானிக்கில் அந்த சோகம் காதல் சோகமாக்கப்படுகிறது. கப்பல் மூழ்கும் காட்சியை பார்த்து உஸ்! ஐயோ! கடவுளே! என உருகுவதை விட டைட்டானிக் காதலர்கள் ஜாக், ரோஸ் இருவருக்கும் ஏற்படும் இடைஞ்சல்களே பார்வையாளர்களை அதிகம் சங்கடப்பட வைக்கின்றது.

ரோஸின் பணக்காரக் கணவனால் விலங்கு போடப்பட்டு சிறை வைக்கப்படும் காதலன் ஜாக்கை காதலி ரோஸ் காப்பாற்ற இறுதியில் மூழ்கிக் கொண்டிருக்கும் கப்பலில் இருந்து காதலியுடன் கடலில் குதித்த ஜாக் ரோஸைக் காப்பாற்றி தான் இறந்து போவது பார்வையாளர்களை பெரும் சோகக் கடலில் மூழ்கடிக்கிறது.

இப்படத்தைத் தயாரிப்பதற்கான மொத்தச் செலவு கிட்டத்தட்ட 1500 கோடிக்கும் மேல் போய்விட்டது. டைட்டானிக் கப்பலையும் அதனை மிதக்க விட ஒரு செயற்கைக் கடலையும் கட்டியமைக்க 15,000 தொழிலாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். படத்தைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டைட்டானிக் பிரமாண்டம்

செலவு பருமட்டாக 1500 கோடி... !



# டைட்டானிக் காய்ச்சல்

பார்க்கும்போதும் அதற்கு வழங்கப்பட்டுள்ள விருதுகளைப் பார்க்கும் போதும் அதன் பிரமாண்டத்தை இலகுவாகப் புரிந்து கொள்ளலாம். இப்படத்திற்கு 11 ஒஸ்கார் விருதுகள் வழங் கப்பட்டுள்ளன.

இதன்மூலம் இதுவரை அதிகூடிய விருதுகளை 60களில் 'பென்ஹர்' படம் பெற்ற உலக சாதனையை இப்படம் நீண்ட காலத்தின் பின் சமன் செய்துள்ளது.

படம் ஆரம்பிக்கும் போது 100 வயதையும் தாண்டிய ஒரு மூதாட்டி கடல் நடுவே மூழ்கிய டைட்டானிக்கை மீள வெளியே எடுக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் நிபுணர் குழுவினர் இருக்கும் கப்பலுக்குள் வருகிறாள்.

அம்மூதாட்டிதான் உயிர்தப்பிய காதலி ரோஸ். தனது அனுபவத்தை அவர் அந்நிபுணர்களிடம் பகிர்ந்து கொள்வது போல் ஆரம்பித்தே கதை நகர்ந்து செல்கின்றது.

தென்னிலங்கையில் இப்போது பாடசாலை மாணவர்க ளுக்கும் சினிமாப் பிரியர்களுக்கும் வீடியோ புரொஜக்டர் மூலம் பெருப்பித்துக் காட்டும் திரைகளில் டைட்டானிக் காண் பிக்கப்படுகின்றது. அதோடு கூடவே டைட்டானிக் காதலர் களின் (கப்பல் அல்ல) படங்கள் போடப்பட்ட போஸ்டர்களும், தொப்பிகளும், டீ சேர்ட்டுகளும் அமோகமாக விற்கப்படு கின்றன. இனிமேல் இளங் காதலர்கள் தமது உறுதியான காதலுக்கு "டைட்டானிக் காதல்" எனப் பெயரிட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. •

**வசூலில் இதுவரை காணாத வெற்றி!**

## ஜே.வி.பி.யின் டைட்டானிக்


இந்த வருட மேதினத்தன்று ஜே.வி.பி. கட்சியினர் தமது மேதின ஊர் வலத்தில் கொண்டு செல்ல ஒரு கப்பல் வடிவிலான ஊர்தியை அமைத் திருந்தனர். அந்தக் கப்பல் 1917 அக்டோபரில் வி.இ. லெனின் தலைமையில் ருசியாவில் நடந்த சோசலிசப் புரட்சியின்போது புரட்சியாளர்கள் கைப்பற்றிய ஹரோரா என்னும் கப்பலாகும். ஆனால் மேதின ஊர்வலத்தில் சென்ற ஜே.வி.பி. இனரின் கப்பல் ஊர்தியைக் கண்ட இளசுகள் என்ன சொன்னார்கள் தெரியுமா? "அதோ டைட்டானிக்.... டைட்டானிக்....." பார்க்க வேண்டியதுதானே டைட்டானிக் காய்ச்சலை.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாகூரின் ஒருகவிதை



## வழிகாட்டும் வெளிச்சம்

உன் குரலுக்கு யாரும்
செவிசாய்க்கவில்லையெனில்
தனியாகப் பயணப்படு!
அச்சத்தில் ஊமையாகி
அவர்கள் முகந்திருப்பிக் கொண்டால்
ஓ! உதவியற்ற உயிரே
தனிமையில் நீ
உன் மனம் திறந்து பேசு!
நீ பாலைவனத்தில் பயணப்படும்போது
அவர்கள் கானகத்தே உனைக்
கைவிட்டு விட்டால்
ஓ! உதவியற்ற உயிரே
ரத்தக்கோடு பதித்த பாதையில்
அந்த உறுத்தும் முட்களின் மேலே
உறுதியாய் அடியெடுத்து வை!
தனியாய் பயணப்படு!
புயல் பயமுறுத்தும் இரவுகளில்
அவர்கள் உனக்கு வேண்டிய
வெளிச்சத்தை உயர்த்தவில்லையென்றால்
ஓ! உதவியற்ற உயிரே
அந்த மின்னலிலும் ரணங்களிலும்
உன் இதயத்தைப் பற்றவைத்து
தீபமாய் ஏற்றிக்கொள்!
பிறகு.... நீயே
வழிகாட்டும் வெளிச்சமாக வாழ்வாய்...!

# பாலஸ்தீனக் கவிதை

கவிதை: மஹ்மூத் தார்வீஷ்
தமிழில்: யமுனா ராஜேந்திரன்

## கவிதை பற்றி

நேற்று
மேகத்திற்குப் பின்னாலிருந்த நட்சத்திரம்
பற்றிப் பாடினோம் பிற்பாடு
என் கண்ணீரில் குளித்தோம்

நேற்று திராட்சை செடிகளோடு
இரவு நிலவோடு
தலைவிதியோடு கலகம் செய்தோம்
பிற்பாடு
பெண்களோடு காதல் புரிந்தோம்

நேரம் தடைப்பட்டது
கையாம் மது அருந்தினான்
அவனது போதைப் பாடல்களின் கீழ்
நாங்கள்
என்றென்றும் ஏழைகளாக இருக்கிறோம்

கவிகளே நண்பர்களே
நாங்கள்
ஒரு புதிய உலகத்தில் இருக்கிறோம்

சாவுதான் கடந்து போனது
இந்த அணு மற்றும் காற்றின் யுகத்தில்
எவரெல்லாம்
கவிதை எழுதினார்களோ அவரெல்லாம்
தீர்க்கதரிசிகளை உருவாக்கினார்கள்

எம் பாடல்கள் நிறமற்றது
ஸப்தமற்றது
சுவையற்றது

கவிதை வீட்டுக்கு வீடு
ஒரு விளக்கை எடுத்துச் செல்லவில்லையானால்
ஏழைகளுக்கு அதன் 'அர்த்தம்'
என்னவென்று விளங்கவில்லையானால்
அதை விட்டொழிப்பது
உத்தமம்.
நிரந்தரமான மௌனத்தை
வேண்டுவது மிக நன்று

உழைப்பாளி கைச் சிற்றுளிபோல
கவிதை வேண்டும்
தீவிரவாதியின் கை வெடிகுண்டாக
விவசாயிகளின் கைகளுக்கிடையில்
கலப்பையாக
ஒரு சட்டையாக கதவாக
ஒரு சாவியாக

கவிதை ஆகவேண்டும்

யாரோ ஒருவர் சொன்னார்
என்னை நேசிப்பவரை என் கவிதை
மகிழ்ச்சியிலாழ்த்த வேண்டும்
என் எதிரிகளை கோபமூட்டவேண்டும்

அதன் பின்பே நானொரு கவிஞன்...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரமுகவுடன் கணக்கை ஆரம்பியுங்கள்

**14%**

**சேமிப்புச் சான்றிதழ்களுக்கு**

**தினமும்**
**வங்கி அலுவலக நேரம்**

காலை 9.00 மணி முதல்
இரவு 8.00மணி வரை
சனிக்கிழமைகளில்
காலை 9.00மணி முதல்
1.00 மணி வரை

**ATM &**
**டெலிபேங்கிங்**
வசதிகளும் உண்டு

**11%**

**செமிப்பு கணக்குகளுக்கு**

தொடர்பு கொள்ளுங்கள்: 565418, 075-331101, 565998 அல்லது 565624

PRAMUKA BANK

**பிரமுக**
சேமிப்பு மற்றும் அபிவிருத்தி
**வங்கி**
லி மி ட ட்

*வளமிக்க எதிர்காலத்திற்கு வழிகாட்டி*

316, காலி வீதி, கொழும்பு – 3 பிரதான நகரக் கிளை தொலைபேசி : 565220 – 3
பெக்ஸ் : 565224 தலைமை அலுவலகம் தொலைபேசி : 565411 – 16

NETWORK


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்.எச்.எம். ஷம்ஸ்

# விலை மாதரின் அவர் கவிதைகள்



**தன்னைத் தவிக்கவிட்டுப் போன அந்தக் காதலனை எண்ணி......**

அலரி மரத்தின் இலையளவு
அன்பே உனக்கு மடல் வரைந்தேன்
உலர்ந்த கடலின் மண்ணளவு
உன்னுடன் நானும் பயணித்தேன்
களனி ஆற்றின் நீரளவு
கண்ணீர் வடித்தேன் உன்னாலே
உலகில் அந்தோ நான் தவிக்க
உதறிப் போனான் என் தலைவன்!

**ஏமாற்றியவனையும் மனமார வாழ்த்தி.....**

வாழ்வுந்தன் எதிர்காலம்
மல்லிகையாய் மலரட்டும்
தாழ்வென்பதில்லாமல்
துயரின்றிச் செழிக்கட்டும்
முப்பத்து முக்கோடி
தெய்வங்கள் காக்கட்டும்
என்னவனின் புதுவாழ்வு
இனிதாக அமையட்டும்.

**புனர்வாழ்வு முகாம் வாழ்வைப் பற்றி.....**

தேங்காய்ச் சம்பல் தின்று தின்று
வாயும் பாழாய்ப் போச்சு
புல்லும் செடியும் பிடுங்கிப் பிடுங்கி
கையும் பாழாய்ப் போச்சு
மூட்டைக் கடிக்கு இரையாகி இந்த
முதுகும் பாழாய்ப் போச்சு
சிறையில் துன்பப் பட்டுப் பட்டு
நானும் பாழாய்ப் போனேன்.

**ஒரு தத்துவ விசாரம் இப்படி........**

பணத்தில் புரண்ட
தேவிகள் கூட
பஞ்சணை விட்டு
வந்துள்ளனர்
வினையின் பயனை
அனுபவிக்க
வந்தவர் துயரப்பட்டாலும்
அனைவர் முடிவும்
இறுதியில் அந்த
ஆறடி நிலம்தான்
அறிவாரா?

**கைவிட்டுச் சென்ற காதலன் நினைவாக....**

சிறையில் நாலு சுவருக்குள்ளே
தனித்துப் போனேன் துடிக்கின்றேன்
சணலின் சாக்கு சூழ்ந்துள்ள
தனித்த அறையின் மூலையிலே
நினைப்பில் 'உந்தன்' முகம் காட்டி
நெருப்பில் வாழும் வாழ்க்கை இது.

சமுதாயம் விபசாரிகளை ஒருவகை அசிங்கமான மனம் படைத்தவர்களாக முத்திரை குத்திவிடுகின்ற வேளையில் அவர்களின் அந்தத் தனிமையான உள்ளத்தில் அடங்கியுள்ள, உறங்குகின்ற உணர்வுகள் எவ்வளவு மென்மையானவை என்பதைக் கண்டுகொள்ள எமக்கு நேரமோ சந்தர்ப்பமோ கிடைப்பதில்லை.
இலங்கையில் விபசாரிகளின் புனர்வாழ்வு விடுதியொன்றிற் குள்ளே அதன் சுவர்களில் வடிக்கப்பட்டிருந்த அந்தக் கவிதைகள் அம் மென்மையான இதயங்களில் தேங்கியிருக்கும் ஈரத்தை எமக்கு உணர்த்திவிடுகின்றன. கவிதை எழுதும் அளவுக்கு கனிந்துவிட்ட அவ்வுள்ளங்களுக்கு, அவர்களை வழிமறித்து நிற்கும் அந்த விடுதிச் சுவர்களாவது தம்மைப் புரிந்துகொள்ள மாட்டாதா என்ற ஏக்கம்..!

இன்று உலகில் மாறி வரும் புதிய சிந்தனைகளின் கண்ணோட்டத்தில் **'விபசாரிகள்' (Prostitute), 'விலைமாதர்'** (Call Girls) என்ற பதங்கள் அவர்களை இழிவுபடுத்துகின்றன என அவை நிராகரிக்கப்பட்டு, அதற்குப் பதிலாக **Sex Workers (பாலியல் தொழிலாளர்கள்)** என்ற பதங்களே உபயோகிக்கப்பட வேண்டுமென வலியுறுத்தப்படுகிறது. இலங்கையில் பாலியல் தொழிலாளர்கள் என்ற கருத்தை மனப்பூர்வமாக ஏற்கும் போக்கு சமூகத்தில் இன்னும் தோன்றாவிடினும் அதற்கான நியாயங்களைப் பரிசீலிக்கும் வாதப் பிரதிவாதங்கள் முளைவிடத் தொடங்கிவிட்டன. எனினும் இன்னொரு உண்மை நிலையை எம்மில் பலர் அறிந்திருக்க வாய்ப்பில்லை. அதாவது இலங்கையில் வயதுவந்த, ஒரு பெண்ணின் சுயவிருப்பத்துடனான சமூகத்தைப் பாதிக்காத தனிப்பட்ட 'சுயவிபசாரம்' தடை செய்யப்பட்டதல்ல. ஆனால் பாலியல் தொழிலாளர்களை யாராவது கூலிக்கு அமர்த்தி 'விபசாரத்' தொழிலை மேற்கொள்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

தகவல்: கங்கொடவில யுவதிகள் புனர்வாழ்வு முகாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியன் அஸ்தமிக்காத சாம்ராஜ்யத்தைக் கொண்டிருந்த பிரித்தானிய மக்களின் விளையாட்டே கிரிக்கெட். தமது ஆளுகைக்குள்ளிருந்த பெரும்பாலான நாடுகளில் கிரிக்கெட் ஆட்டத்தை அறிமுகப்படுத்திய பிரிட்டிஷார், அந்த விளையாட்டிலும் தமது ஆதிபத்தியத்தை நிலைநாட்டியிருந்தனர். எனினும் இந்த நிலை நீண்ட காலத்துக்கு நிலைத்திருக்கவில்லை. சாம்ராஜ்யத்திற்கு அடிமைப்பட்டிருந்த நாடுகள் சுதந்திர நாடுகளாகப் பரிணமித்த பின், பிரிட்டிஷாரின் பிரதான ஆட்டமான கிரிக்கெட் அந்தந்த நாட்டு மக்களிடையே செல்வாக்குப் பெற்று, அங்கு திறமை மிக்க வீரர்களைத் தோற்றுவித்தது. கிரிக்கெட் பாடத்தைப் போதித்த இங்கிலாந்துக்கே அந்த வீரர்க்ள் இன்று சவாலாக உருவெடுத்துள்ளனர். இங்கிலாந்திடமிருந்து சுதந்திரம் பெற்ற இந்தியா, இலங்கை போன்ற நாடுகள் கிரிக்கெட் ஆட்டத்தில் இங்கிலாந்தை விட முன்னணியிலிருக்கின்றன.

அண்மையில் ஓவல் அரங்கில் நிறைவுபெற்ற இலங்கை இங்கிலாந்து டெஸ்ட் ஆட்டமும் இதனைத்தான் நிரூபித்தது. கிரிக்கட்டில் இதுதான் இங்கிலாந்தின் கதி என முழு உலகமும் அறியச் செய்துள்ளது. இதில் இலங்கை வீரர்கள் துடுப்பாட்டம், பந்துவீச்சு, பந்து தடுப்பு ஆகிய மும்முனையிலும் சிறப்புற்று விளங்கினர். **சனத் ஜயசூரிய, அரவிந்த டி சில்வா** ஆகியோர் துடுப்பாட்டத்தில் அபாரத் திறமை காட்டினர். **முத்தையா முரளிதரன்** தனது மாயப் பந்துவீச்சு மூலம் இங்கிலாந்து வீரர்களைத் திணறடித்தார். இந்த டெஸ்ட் ஆட்டத்தில் இலங்கை கிரிக்கெட் அணி ஈட்டிய 10 விக்கட் வெற்றியின் பிரதான துரும்புச் சீட்டாக **முத்தையா முரளிதரன்** கணிக்கப்படுகிறார்.




## சோதனையிலும் நிலைகுலையா முரளி

முரளி பந்தை வீசியெறிவதாக **1995**ல் இடம்பெற்ற நியூஸிலாந்து தொடரின் போது முதன்முதலாகக் குற்றம் சுமத்தப்பட்டது. அதன்பின் **1995**ல் அவுஸ்திரேலிய சுற்றுலாவின் போது அந்நாட்டு நடுவர் **டெரல் ஹெயாரின்** கூற்றுடன் இது வலுப்பெற்றது.

சர்வதேச கிரிக்கெட் சம்மேளனத்திடமும் முறையீடு செய்யப்பட்டது. பல்வேறு கோணங்களிலிருந்து பெறப்பட்ட முரளியின் பந்து வீச்சுக்களை துல்லியமாக உற்று நோக்கிய கிரிக்கெட் அவதானிகள் முரளி குற்றமற்றவர் எனத் தீர்ப்பளித்தனர்.

இத்துடன் முரளி பந்தை வீசியெறிகிறாரென்ற ஒருசில நடுவர்களின் கூற்றுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

எனினும், ஓவல் டெஸ்டில் இங்கிலாந்து பயிற்சியாளர் **டேவிட் லொயிட்ஸ்,** முரளி பந்தை வீசியெறிவதாக மீண்டும் ஒரு போடு போட்டுள்ளார். எனினும் தோல்வியைத் தாங்கமுடியாமல் அவர் வெளியிட்ட இக் கருத்துக்கு பெரும் வரவேற்பு கிடைக்கவில்லை. மாறாக கண்டனக் குரல்களே அவர் மேல் விழுந்தன. சர்வதேச கிரிக்கெட் சம்மேளனம் முரளியை இச் சந்தேகத்திலிருந்து விடுவித்திருக்கையில் டேவிட் லொய்ட்ஸ் மீண்டும் சந்தேகத்தைக் கிளப்பியிருப்பதனால் இங்கிலாந்து கிரிக்கெட் சம்மேளனம் அவரை எச்சரித்துள்ளது. இங்கிலாந்து அணித் தலைவர் **அலெட் ஸ்டுவர்ட்,** அவுஸ்திரேலிய பயிற்சியாளர் **செப் பொய்கொட்** உட்பட பல மேற்கத்திய கிரிக்கெட் ஆய்வாளர்கள் முரளிக்கு ஆதரவாகக் குரல் கொடுத்துள்ளனர்.

முரளியினுடைய பந்துவீச்சு சரியானது, அதில் தவறுகளில்லை என்பது தெட்டத் தெளிவாகியுள்ளது.

***"அவ்வப்போது என் மீது விழும் குற்றச்சாட்டுகள் குறித்து நான் கவலைப்படுவதேயில்லை. இவ்வாறான சந்தர்ப்பங்களிலெல்லாம் நான் உத்வேகம் பெறுவேன். எனது திறமைகள் அதிகரிக்கும். அதிக விக்கெட்டுகளைக் கைப்பற்றி தாய்நாட்டுக்குப் பெருமை சேர்ப்பதே எனது குறிக்கோள். எதிர் அணியினர் தோல்விகளைத் தழுவும் போதுதான் என்மீது குற்றச்சாட்டுக்களை அடுக்குகின்றனர். வெற்றியீட்டும்போது எனது பந்துவீச்சைப் பற்றி அலட்டிக் கொள்ளவே மாட்டார்கள்"*** என முரளி ஆதங்கப்படுகிறார்.

இலங்கைக் கிரிக்கெட் அணியின் பிரதான துரும்புச் சீட்டும் எமது அணியின் பிரிக்க முடியாத முக்கிய அங்கமும் முரளியே. தனக்கு அடிக்கடி சோதனைகள் தோன்றுகையில் அதனைச் சவாலாக எதிர்கொண்டு வெற்றிக்கொடி நாட்டிய முரளியின் மனோதிடம் நமக்கும்கூட ஓர் எடுத்துக்காட்டாகும்.

எஸ். எம். சாஜஹான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகப் பந்து வீச்சாளர் வரிசையில் முரளி

ஒவல் டெஸ்ட்டின் பின் முத்தையா முரளிதரன் டெஸ்ட் போட்டியொன்றில் 16 டெஸ்ட் விக்கெட்டுக்களை வீழ்த்தியதன் மூலம் உலகப் பிரசித்தி பெற்றுள்ளார். டெஸ்ட் போட்டியொன்றில் கூடிய விக்கெட்டுக்களை வீழ்த்திய வரிசையில் முரளி ஐந்தாவது வீரராக மாறியிருக்கிறார். அதுதவிர, 'சியெட்' வரிசைப்படுத்தலில் முதலாமிடத்தையும் பிடித்திருக்கிறார்.




**நாடுகளுக்கெதிரான முரளியின் பந்து வீச்சு விபரம்**

| நாடு | போட்டி | ஓவர் | ஓட்டமற்ற ஓவர் | ஓட்டம் | விக்கெட் |
|---|---|---|---|---|---|
| இந்தியா | 9 | 459.3 | 103 | 1236 | 28 |
| பாகிஸ்தான் | 5 | 237.4 | 51 | 673 | 22 |
| மேற்கிந்தியா | 3 | 113.5 | 36 | 29 | 20 |
| அவுஸ்திரேலியா | 4 | 165.1 | 22 | 573 | 7 |
| நியூஸிலாந்து | 8 | 369.1 | 100 | 914 | 39 |
| தென்னாபிரிக்கா | 5 | 314 | 77 | 756 | 32 |
| சிம்பாப்வே | 6 | 334.1 | 105 | 625 | 34 |
| இங்கிலாந்து | 2 | 174.5 | 56 | 393 | 21 |
| | 42 | 2157 | 550 | 5474 | 203 |

# உலகப் புகழை இலங்கைக்குத் தந்த முரளி

## மாயப் பந்து வீச்சாளன்

இலங்கை கிரிக்கெட் வரலாற்றில் ஆகக் கூடிய விக்கெட்டுக்களை வீழ்த்தியோர் வரிசையில் முரளீதரன் அதி உயர் ஸ்தானத்தை எட்டியிருக்கிறார். இது அவர் குறைந்த டெஸ்ட் போட்டிகளில் பெற்றுள்ள அதிகூடிய விக்கெட்டுக்களாகும். 42 டெஸ்ட் போட்டிகள் மூலம் முரளி இதுவரை 203 விக்கெட்டுக்களை சாய்த்துள்ளார். அவுஸ்திரேலிய சுழல் பந்து வீச்சாளர் **ஷேன் வோன்** 70 டெஸ்ட் போட்டிகள் மூலம் 300 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். இந்த எண்ணிக்கையை எட்டுவதற்கு முரளிக்கு மேலும் 38 டெஸ்ட் போட்டிகள் இருப்பினும் அதைவிடக் குறைந்த டெஸ்ட் போட்டிகளில் அவர் ஷேன் வோனின் எண்ணிக்கைகயைத் தாண்டிச் செல்வார் என்பதே அவதானிகளின் கருத்தாகும். முரளிதரன் இதுவரை 42 டெஸ்ட் போட்டிகளில் கலந்து கொண்டு 2157 ஓவர் பந்து வீசி, 5474 ஓட்டங்களைக் கொடுத்து 203 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளர். **முரளி** ஒரு இன்னிங்ஸில் 5 விக்கெட்டுகளுக்கு மேல் கைப்பற்றிய 16 சந்தர்ப்பங்கள் உள்ளன.



**டெஸ்ட் போட்டி வரிசையில் பந்து வீச்சுச் சாதனைகள்**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. ஜிம் லேகர் | - 19-90 | இங்கிலாந்து - அவுஸ்திரேலியா | மன்செஸ்டா | 1956 |
| 2. ஸிட்னி பார்ன்ஸ் | - 17-159 | இங்கிலாந்து - தென்னாபிரிக்கா | ஜொஹன்னஸ்பேர்க் | 1913-14 |
| 3. நரேந்திரன ஹிர்வானி | - 16-136 | இந்தியா - மேற்கிந்தியா | சென்னை | 1987-88 |
| 4. பொப்மஸிங் | - 16-137 | அவுஸ்திரேலியா - இங்கிலாந்து | லோர்ட்ஸில் | 1972 |
| 5. முத்தையா முரளிதரன் | - 16-220 | இலங்கை - இங்கிலாந்து | ஓவலில | 1998 |

**ஒரு இனிங்ஸில் சிறந்த ஏழு வீரர்கள்**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. ஜிம் லேகா | 10-53 | இங்கிலாந்து - அவுஸ்திரேலியா | மன்செஸ்டர் | 1953 |
| 2. ஜோர்ஜ் லுஹ்மான் | 9-28 | இங்கிலாந்து - தென்னாபிரிக்கா | ஜொஹன்னஸ்பெர்க் | 1896 |
| 3. ஜிம்லேகர் | 9-37 | இங்கிலாந்து - தென்னாபிரிக்கா | மன்செஸ்டர் | 1956 |
| 4. ரிசட் ஹட்லி | 9-52 | நியூஸிலாந்து - அவுஸ்திரேலியா | பிரிஸ்பேர்ன | 1985 |
| 5. அப்துல் காதிர் | 9-56 | பாகிஸ்தான் - இங்கிலாந்து | லாஹூரில | 1987 |
| 6. டெவன் மல்கம் | 9-57 | இங்கிலாந்து - தென்னாபிரிக்கா | ஓவலில் | 1994 |
| 7. முத்தையா முரளீதரன் | 9-65 | இலங்கை - இங்கிலாந்து | ஓவலில | 1998 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### மேஷம்



அடடா... பொறுமை, கவனம் இரண்டையும் கைவிட்டு விடாதீர்கள். பணம் என்ன வரும் - போகும் தளர்ந்துவிடாதீர்கள். உடல் நலமாயிருந்தால் சற்று ரிலாக்ஸ் பணணலாம். நோயேதுமிருப்பின் கைவசம் மருந்து மாத்திரை இருப்பது உசிதம். வியாபரம் அது இதுவென கண்டபடி திட்டங்களைத் தீட்டாதீர்கள். சற்று மெல்ல அணுகுங்கள். தொழில் செய்வோர் நேரத்துக்கு அலுவலகம் போய் ஒழுங்காக வேலையைப் பாருங்கள். பெண்களுக்கும் இதே கவனம் தேவை. அதிர்ஸ்டம் அது இதுவென எங்கெங்கேயோ தேடி வீண்பொழுது போக்காதீர்கள். அது கொஞ்சம் ரெஸ்ட் எடுத்து விட்டுதான் வரும். மாணவர்கள் அவதானமாக நடக்க வேண்டும். அதிக பயன்கள் தரும் அறிகுறிகள் இல்லை. ஆனால் கற்பதில் உற்சாகம் குன்றாது. *All the Best.*

### ரிஷபம்



என்ன... கிரகங்கள் அங்குமிங்கும் பாய்ந்து பாய்ந்து ரெண்டுமில்லாத நிலை வரப்பார்க்கிறது. அசந்து விடாதீர்கள். தொழிலில் அதிக கவனம் தேவை. உடல் நிலையையிட்டு கவலைப்பட வேண்டாம். அதற்காக இரண்டு கப் ஐஸ்கிரீமை ஸ்வஹா பண்ணிவிட்டு தொண்டை வலி, இருமல் என்றால் யாரென்ன பண்ண முடியும்? குடும்ப நிலவரம் சீராக இருக்கும். பணவரவும் சுமார். அதற்காக கடன் வாங்கி விடாதீர்கள். பெண்களுக்கென்றால் உற்சாகமான உழைக்கக் கூடிய மனநிலை கிட்டும். குடும்பத்தில் தொழில் புரியும் இருபாலாருக்கும் சுமாரான - உற்சாகமான மாதம். உங்கள் பிள்ளைகளை அதிகமாகச் சாட வேண்டாம். அவர்கள் பாட்டில் கொஞ்சம் போக விடுங்கள். உயர்கல்வி கற்போர் - தோல்விகளைக் கண்டு சோர்ந்து விடாது - முயற்சிக்க வேண்டிய நேரம். *Early bird catches the worm.*

### மிதுனம்

மற்ற விஷயங்கள் சுமாராக இருந்தாலும்... உடல் நலத்தில்தான்



மிகவும் அவதானம் வேண்டும். இரத்த சம்பந்தமான நோயிருப்போர் - வைத்தியரின் அறிவுரைகளை தவறாமல் கவனத்தில் கொள்ளுங்கள். காயங்கள் ஏற்படலாம். குடும்ப விவகாரங்களில் அதிக உணர்ச்சி வசப்படுவதை தவிர்க்கவும். அமைதி காலக்கிரமத்தில் நிச்சயமாகக் கிடைக்கும். பண வரவு, வியாபாரம் முதலுக்கேற்ப பலனைத் தரும். பெண்கள் தங்களைப் பற்றி கவனம் கொள்வது அவசியம். யாவும் கிடைத்தாலும் அதற்கென கடின முயற்சியை முதலிட வேண்டிவரும். பிள்ளைகளுக்கு அவதானமான அறிவுரைகள் மிக அவசியம். மாணவர்களுக்கு மிக சிறப்பான காலம். கவனம் தேவை. சோர்ந்தால் படிப்பையே நிறுத்த நேரிடும். *Health is welth.*

### கடகம்



உங்களுக்கான கிரகங்களும் பாய்ச்சலில் சளைக்க மாட்டார்கள் போலிருக்கிறது. அட பாய்ந்து போய் நல்ல இடங்களில் இருந்தால்தான் என்ன வேண்டாம் என்றா சொல்லப் போகிறீர்கள்? சரி... எது எப்படியோ.... சர்க்கரை வியாதி, சாப்பாட்டுக் கோளாறு போன்ற நோய்கள் இருப்பவர்கள் பரிகாரங்களில் கவனமாக இருங்கள். குடும்ப நிலவரங்கள் சுமார். செலவுகளுக்குக் காசு கிடைக்குமே தவிர வியாபாரமென்று வந்தால் தம்பிடி கூட மிஞ்சாது. பொறுமை அவசியம். பெண்களுக்கு கொஞ்சம் கஷ்டமான மாதம். கையில் பணம் கிடைப்பதே அரிது. தொழில் புரியும் பெண்களுக்கும் வேலைக்கேற்ப பலன் அவ்வளவாக இல்லை. விடுமுறை அதிகம் எடுக்காதீர்கள். குழந்தைகளுக்கு சுமாரான பலன் கிட்டும். மாணவர்கள் நல்ல பெறுபேறுகள் பெற்றாலும் அதிக நேரத்தை கல்வியில் செலவிடுங்கள். *Behind every cloud there's a silver line.*

### சிம்மம்

"அதீத கவனம்" - என்று கேள்விப்பட்டிருப்பீர்களே... அதுதான் உங்களுக்குத் தேவை. அமைதியாகவும், தியான வழிபாடுகளும் மிகவும் உதவக்கூடிய பரிகாரங்கள். நீங்கள் உண்டு உங்கள் பாடு உண்டு என்று பொறுமையாக கருமங்களைச் செய்யுங்கள். வாயைத் தேவைக்கதிகமாக பிரயோகிக்காமல் மூளைக்கு வேலை கொடுங்கள். பொதுவான உங்கள் குறைபாடுகள் அதிகரிக்க வாய்ப்புண்டு. தொற்று நோய் ஏற்படக்கூடிய வாய்ப்புகளைத் தவிர்க்கப் பாருங்கள். பண விடயங்களில் கொடுக்கல், வாங்கல், முதலீடு யாவற்றையும் கொஞ்சம் பின்போடுங்கள். பிரயாணங்கள் சில நன்மைகளைத் தரலாம். மற்றபடி விசேடமாக வேறேதும் இல்லை. பெண்கள் மிக அவதானமாக



இருக்க வேண்டியது அவசியம். கவலைக்கிடமான விடயங்கள் ஏற்படும் அறிகுறிகள் தெரிகிறது. பிள்ளைகளும் சோர்வும் தளர்வும் அடைவார்கள். அவர்களை நல்லபடி பாதுகாப்பது பெரியவர்களான உங்கள் கையில்தான் இருக்கிறது. மாணவர்களுக்கு ஏமாற்றங்கள் நிறைந்த மாதம். எனினும் முயற்சியை விடலாகாது. *Every thing happens for good.*

### கன்னி

தண்ணீரில் விழுந்தாலும் தலை மட்டும் வெளியே இருந்தால் அதுவே பெரிய பாக்கியம் இல்லையா? அப்படித்தான் உங்கள் நிலை. என்னவென்று தெரியாமலே நலக் குறைவு ஏற்படலாம். உடன் வைத்தியரை நாடுவது பின்விளைவுகளைத் தவிர்க்கும். குடும்ப நிலை என்றும் போல அமைதியாக இருக்கும். கவலை வேண்டாம். தேவையான பொருளாதாரம் கிடைப்பது குதிரைக் கொம்பு. ஏதோ இம் மாதம் சமாளியுங்கள். எப்படியோ தொழில் செய்வோருக்கு - நல்லதோர் காலம் - வரவுள்ளது. அதற்கான அத்திவாரத்தை ஆரம்பித்தால் நலலது. பெண்களுக்கு சுமாரான மாதம். பிள்ளைகளின் முன்னேற்றம் மிகுந்த சிரமங்களுக்கிடையில்தான் கிட்டும். கைகொடுங்கள். மாணவர்களுக்கு மறதி வந்து கணக்குப் பாடத்தில், சரித்திரம் படிப்பீர்கள். *Known devil is better than the unknown Angle!*



## கணித்துச் சொல்பவர்:



ஒருவர் கூட நனையாதபடி அந்த எட்டுப் பேரும் எப்படி ஒரு குடையுடன் வந்தார்கள்?
அதுதானே, எப்படி...?
இது தெரியாதா, மழை பெய்யாததால்!



ஆசிரியர்:- நாலுகால் விலங்கிற்கா இரண்டு கால் மனிதனுக்கா மூளை அதிகம்.
மாணவன்:- சேர் ..... விலங்கிற்குத்தான்...
ஆசிரியர்:- ..! .... ஆ?
மாணவன்:- நாலு 1/4 சேர்ந்தா ஒன்று. ரெண்டு 1/4 சேர்ந்தா அரை தானே ...
ஆசிரியர்:- .... ! ....?



நித்திரையிலிருந்த கணவனைத் தட்டி எழுப்பினாள் மனைவி: 'உங்களத்தான், எழும்புங்கோ. நித்திரை மருந்தைக் குடிக்காமல் படுத்துட்டீங்க...'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### துலாம்



நடப்பதுதான் நடக்குமென மனதை ஈசியாக வைத்துக் கொள்ளப் பழகுவது, தோல்விகளை - சவால்களாக முகம்கொடுப்பதற்கு ஒரு தொடக்கப் பயிற்சி என்பார்கள். அது போலத்தான் துலா ராசிக்காரரான உங்களுக்கும் இந்த மாதம். சகலதும் சவால்களாக மாறக்கூடும். உடல் நலம் சுமாராக இருந்தாலும் சிறப்பாக இருக்காது. அவதானமாக இருங்கள். பண நிலவரம், வியாபாரம், அப்பாடா.... கவலைப்பட அவசியமில்லை. இருந்தாலும் கைவீசி செலவழிக்க காலம் இருக்கிறது. கடின உழைப்பே இப்போதைய அவசியம். பெண்கள் பிரத்தியேக விடயங்களில் அதிக கவனத்தைக் காட்ட வேண்டும். பெற்றோர்கள் பிள்ளைகளைக் கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்கள். மாணவர்களே... திறமைகளையெல்லாம் வெளிப்படுத்தும் சகல வழிகளையும் இம்மாதம் செய்ய ஆரம்பியுங்கள். *If there's a will... there's a way.*

### விருச்சிகம்



ஆமாம்! கொஞ்சம் புன்னகைக்கலாம். பரவாயில்லை. அதற்காக பார்ட்டி, பயணம் என்று கிளம்பி விடாதீர்கள். எப்படியோ விருச்சிகம் ராசிக்காரர்கள் காட்டில் கொஞ்சம் மழை... உடல்நிலை நன்றாக இருக்கும். ஏற்கனவே டாக்டரோடு நண்பராக இருப்பவர்கள் வழக்கமான மாத்திரைகளை விழுங்கிக் கொள்ளுங்கள். பணவருவாய்... மூக்கால் அழவேண்டியிருக்காது. தொழில், வியாபாரம் போன்றவைகள் தகுந்த பலனைத் தரும். அவதானமாக இருங்கள். பெண்களுக்கு கொஞ்சம் சுமார்தான். கடின உழைப்பு தேவை. சிறார்களுக்கு சிறப்பான மாதம். மாணவர்கள் மனதை அலைய விடாதீர்கள். கவனமாகப் படியுங்கள். *Saving for the rainy days is not a crime.*

### தனுசு



காலையிலேயே எழுந்து கொஞ்சம் உடற் பயிற்சி, தியானம், நேரத்திற்கு சாப்பிடுவது போன்ற, மறந்து போயிருந்தவற்றை மீண்டும் ஆரம்பியுங்கள். சுமாரான மாதம். நாளைய பணிகளை இன்றே தீர்மானியுங்கள். உடல் நிலை சுமார். ஆயினும் குடும்ப அமைதி, சந்தோஷம் போன்றவைக்கு உங்கள் அணுகுமுறை அவசியம். பண நெருக்கடி ஏற்படாவிட்டாலும் வியாபாரம், முதலீடு என்று வந்தால் - விழி பிதுங்கி விடும். தவிர்த்து..... பொறுங்கள். பெண்களுக்கு அவ்வளவான நற்பலன்கள் கிட்டாது. பகுத்தறிவைப் பாவியுங்கள். தொழில் புரிவோர் கொஞ்சம் பல்லைக் கடித்துக்கொண்டு, பொறுமையாக இருங்கள்- தலைக்கு வந்தது ரிப்பனோடு போய்விடும். பர்ஸை கூடுமானவரை திறக்காதீர்கள். சிறுவர்களுக்கு நற்பலனுண்டு. மாணவர்கள்... முயற்சி செய்தாலும் பயன் கிடைக்காது. இருப்பினும் முயலுங்கள்..... *Nothing is impossible.*

~ கிரஹாச்சாரி ~


### மகரம்



நெருப்பை அணைக்க வேண்டுமென்றால், எண்ணெயால் முடியாதல்லவா? நீங்கள் நீராக மாறிவிட வேண்டும். மற்றவர்கள் செய்வதையே நீங்களும் திருப்பிச் செய்யாது "கம்"மென்று இருங்கள். மன அமைதியற்றவர்கள், நரம்பு சம்பந்தமான நோயுள்ளவர்கள் விசேட கவனம் எடுப்பது அவசியம். குடும்ப குழப்பங்கள் நிறையவே இருக்கும். பணப் பற்றாக்குறை இருந்துகொண்டேதானே இருக்கிறது. சமாளியுங்கள். கையிலுள்ளதை கரைக்காதீர்கள். தொழில், வியாபாரம் சுமுகமாக இருக்கும். பெண்களுக்கு அனுபவம் நிறையவே துணை புரியும் மாதம் இது. சிறுவர்கள் - சோர்வடையலாம்- விசேட அவதானிப்பு அவசியம். மாணவர்களுக்கு பொன்னான நேரம். துடிக்கும் திறமைகளுக்கு வாசலைத் திறவுங்கள். *Bring the best out of you.*

### கும்பம்

நல்ல நண்பர்களின், பெரியவர்களின், நலன் விரும்பிகளின் சகவாசம் இருந்தால் தப்பித்துக் கொள்ளலாம். தீயவர்களை விட்டு விலகுங்கள். கிரகநிலைப்படி, உங்களுக்கு இந்த விடயத்தில் மிக அவதானம் தேவை. மார்பு சம்பந்தமான நோயுள்ளவர்கள், பலவீனமான உடலுள்ளவர்கள் கவனமாக இருப்பது அவசியம். குடும்பத்தில் சிறு குழப்பங்கள் உருவாகி மறையும். இப்போது பணம் புரட்ட புறப்பட வேண்டாம். கிடைப்பதும் மிகவும் கடினம். ஏதோ சமாளியுங்கள். வியாபாரத்தில் சமநிலை தென்படும். பெண்களுக்குத் தற்போது



எல்லாம் சுமாரென்றாலும் முற்பகல் செய்வது பிற்பகல் விளையும், கவனம். சிறார்களுக்கு நல்ல பலன் உண்டு. மாணவர்கள் கல்வியின் அவசியம் பற்றி புரிந்துகொள்ள எத்தனியுங்கள். பரீட்சையில் ஜமாய்க்கலாம். *Work hard for a better tommorow.*

### மீனம்



இதோ பாருங்கள்..... உங்களை யாரும் உடனடியாக உங்கள் முடிவைச் சொல்ல வேண்டும் என்று வற்புறுத்தப் போவதில்லை. முந்திக்கொண்டு முந்திரிக் கொட்டைபோல் மூக்கை நுழைக்காதீர்கள். புன்சிரிப்போடு இவ்வாறான சந்தர்ப்பங்களைத் தவிருங்கள். இரத்த, இருதய, வயிற்று நோய் இருந்தால் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். குடும்ப சூழல் அவ்வளவு சிறப்பாக இருக்காது. எதற்கும் பொறுமையை முதலீடு செய்யுங்கள். பண கொடுக்கல், வாங்கல்கள் தகராறில் முடிவடையும் வாய்ப்புண்டு. தொழில் ரீதியான முன்னேற்றம் காணப்படாவிடினும் வியாபாரிகள் ஏதோ சுமாராக இருப்பார்கள். பெண்கள் கடைசியில் கொஞ்சம் மனதுக்கு மகிழ்ச்சியான சந்தர்ப்பங்களை எதிர்நோக்கலாம். ஆனால் அதற்காக உங்கள் சுய மரியாதையை பணயம் வைக்க வேண்டாம். ஆபத்து! தொழில் செய்கின்றீர்களா? - சுமாரான பலன்கள்தான் கிடைக்கும். சிறுவர்களுக்கு அவ்வளவான சிறப்புப் பலன்கள் இம்மாதம் கிட்டாது. மாணவர்களுக்கு கடின உழைப்புக்கான பயன்கள் நிச்சயம் கிட்டக்கூடிய நிலை இருக்கின்றது. *Time is a great healer*

## பயமின்றிப் புகைபிடிக்கலாம் நீங்கள்!



புகைப்பவர்களை **முதுமை அண்டாது.** அவர்களின் **வீட்டில் திருடர்கள் நுழைய மாட்டார்கள்.** புகைப்பவர்களை **நாய் கடிக்காது.** இது ஒரு இலங்கை விஞ்ஞானியின் கண்டுபிடிப்பு. என்ன...! ஆச்சரியப்படுகிறீர்களா?

ஆம்! புகைப்பவர்கள் இளம் வயதிலேயே இறந்துவிடுவார்களே! அவர்களை எப்படி முதுமை அண்டும்? புகைப்பவர்கள்தான் விடிய விடிய லொக்கு...லொக்கு என்று இருமுவார்களே...! வீட்டுக்காரர் விழித்திருக்கிறார் என்று தெரிந்து திருடன் நுழைவானா என்ன? புகைப்பவர்களை நோய் பிடித்துவிடும் என்பதால் ஒட்டியுலர்ந்து நடப்பதற்குப் பொல்லுத் தேவைப்படும் அல்லவா? பொல்லுடன் நடப்பவர்களை நாய் எங்கே நெருங்கும்?





கண்டக்டர்: நீர் மட்டும்தானே வாறீர், ஏன் ரெண்டு டிக்கெட் வாங்கினீர்?

பயணி: ஒண்டு தொலைஞ்சால், மற்றது....

கண்டக்டர்: ஓஹோ! அப்போ, ரெண்டும் தொலைஞ்சால்...?

பயணி :- அதுக்குத்தான் நான் ஸீசன் டிக்கட் வைச்சிருக்கிறனே!

கண்டக்டர்:- ..............?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**'டாக்டர் ஆப்பரேஷநாதர்'** தமிழ் எழுத்துக்களைக் கண்டால் அவைகளைத் தனித்தனியாக அறுத்து வேறு வேறு அறைகளில் போட்டுப் பூட்டிவிடுவார். அதுபோதாதென்று ஆஸ்பத்திரியை விட்டு வேறெங்காவது போயும்விடுவதுண்டு. சில எழுத்துக்கள் அவ்வப்போது அதிக சேதமின்றித் தப்பித்துக் கொள்வதுமுண்டு. இந்தப் பரிதாப நிலையிலுள்ள எழுத்துக்களின் பகுதிகளைச் சரியாகப் பொருத்தி, அவைகளுக்குரிய சரியான அறைகளில் வைத்தீர்களென்றால்.....அநேக புண்ணியம் உங்களுக்கு!

அவ்வாறு எழுத்தின் பகுதிகளைச் சரியான அறைகளில் வைக்கும்போது, மறைந்துள்ள ஒரு வார்த்தையையும் கண்டு கொள்வீர்கள்.

எங்கே ஆரம்பியுங்கள் உங்கள் முதலுதவியை.....

கண்டுபிடித்த அந்த வார்த்தையை இங்குள்ள கட்டங்களுக்குள் எழுதி, கூப்பனை ஒரு தபாலட்டையில் ஒட்டி எமக்கு அனுப்பி வையுங்கள்.

முகவரி: 'அமுது'
டாக்டர் ஒப்பரேஷநாதர் -1
இல: 35 டி.ஆர். விஜயவர்த்தன மாவத்தை
கொழும்பு 10.

Copy Rights Reserved

| | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ை | ை | ா | ன | ள | ெ | · | ா | ற | ா | ா | ▷ | | | | | |
| · | ๅ | ா | ை | ெ | ா | ை | ஞ | ெ | ா | | ▷ | | | | | |
| ற | ா | ம | ா | பு | · | ற | ா | ை | · | | ▷ | | | | | |
| ா | · | ன | · | ெ | ற | ா | ந | ம | | | ▷ | | | | | |








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுகதை




மழை இலேசாகத் தூறிக் கொண்டிருந்தது. மின் விளக்கு ஒளியில் அந்தத் தூமியல் பொட்டுப் பொட்டாய் சிதறினாற் போல் கண்கள் உணர்ந்தன. வாகனப் பரபரப்பு இன்னமும் தணியவில்லை. எதிரே வரும் வாகனங்களின் ஒளித் தெறிப்பையே பார்த்துக்கொண்டு நின்றான் சாந்தகுமாரன். மனம் பரபரத்து அமைதியை இழந்து இனந்தெரியாத அச்சத்தை அவனுள்ளே விதைகளாய்த் தூவிக் கொண்டிருந்தது.

ஒரு சின்ன மடத்தனத்தால் இந்த நிலைமை வந்தது எனச் சலித்துக் கொண்டது மனம். 'ஒமார் முக்தார்' திரைப்படத்தைப் பற்றி ஏற்கனவே படித்திருந்தான். அதைப் பார்க்க விரும்பிய பல சந்தர்ப்பங்கள் சின்னக் காரணங்களினாலே தவறிப் போய்விட்டன. பொரளையிலுள்ள தியேட்டரில் 'ஒமார் முக்தார்' நடப்பதாகப் பத்திரிகையில் பார்த்ததும் சனிக்கிழமை ஆறரை மணிக்குத் தவறாமல் பார்ப்பதென்று முடிவு செய்துவிட்டான். சென்றான்.

திரையரங்கில் சில பேரே இருந்தனர். படம் தொடங்கி சில நிமிஷங்களிலேயே அந்த அற்புதமான திரைப்படம் அவனை மிகவும் வசீகரித்தது. ஒரு விடுதலைப் போராட்ட வீரனின் உண்மையான கதை. நடிகர் அந்தனி குயின், ஒமார் முக்தாராகவே திரையில் வாழ்ந்தார். படம் முடிந்ததும் அவனையறியாமலேயே மனம் கனத்தது. அந்த உணர்விலிருந்து உடனேயே விடுபட முடியவில்லை. வெளியே வந்தான். மணியைப் பார்த்தான். எட்டு இருபது. வானம் தெளிந்து கிடந்தது.

முன்னர் வந்திறங்கிய இடத்திற்கே பஸ்ஸிற்காக வந்தான். மழை சோனாவாரியாகப் பெய்திருக்க வேண்டும். நிலமெல்லாம் சேறாய்க் கசகசத்தது. வேகமாகப் போன பஸ்கள் குண்டு குழிகளில் நிறைந்திருந்த கலங்கல் நீரை அள்ளித் தெளித்தன. ஒதுங்கிக் கொண்டவன் அருகே வந்த பஸ்ஸைப் பார்த்தான். 154. சட்டென்று தொற்றி ஏறினான்.

வீதி குழிகள் தோண்டி, புதிய அமைப்பாய்க் கட்டப்பட்டுக் கொண்டிருந்ததால் பொரளைச் சந்தியின் அமைப்பே தலைகீழாய் மாறிப்போயிருந்தது. பஸ் குலுங்கி குலுங்கி, எகிறிப் போய்க் கொண்டிருந்தது. சாந்தகுமாரனுக்கு ஒரு வயதான பெண்ணின் அருகே இருக்கை கிடைத்து விட்டது. நிம்மதியாக உட்கார்ந்தவன் வெளியே பார்க்காமல் பஸ்ஸினுள் பார்வையினைத் தரித்திருந்தான். அவ்வளவு சனமில்லை.

பஸ் நடத்துநர் அருகே வந்து மௌனமாகக் கையை நீட்ட, இவன் 'கல்கிஸ்ஸை' என்றான். அவன் இவனை ஏற இறங்கப் பார்த்தான்.

அருகிலிருந்த கிழவி "தெய்யனே பவ்" என்றாள் பரிவான குரலிலே.

பஸ் நடத்துநர் இவன் கையிலிருந்த இரண்டு ரூபாய் நாணயமொன்றை எடுத்துக்கொண்டு, இது கல்கிஸ்ஸையிலிருந்து வருகிற பஸ். இறங்கி எதிரே போய் பொரளைக்குப் போகும் பஸ்ஸில் ஏறி அங்கிருந்து கல்கிஸ்ஸைக்குப் போகும்படி களைத்த குரலிலே எரிச்சலுடன் கூறினான்.

சாந்தகுமாரன் இருளான அந்த இடத்தில், தெமட்டகொடையிலிருந்து அரை மணி நேரத்தின் பின் பஸ் பிடித்து பொரளைக்கு வந்தபோது மணி ஒன்பது. கல்கிஸ்ஸைக்குப் பஸ் போகும் இடத்திலேயே நின்றான். சில ஓட்டோக்களும், கொஞ்ச ஆட்களுமே நின்றனர்.

சாந்தகுமாரனுக்கு தன் மேலேயே எரிச்சல் உண்டாயிற்று. பஸ் வராவிட்டால் என்ன செய்வது? வீதியில் நின்றால் வரும் சிக்கல் அப்படி இப்படியானதல்ல. அதை நினைக்கவே மனதுள் அச்சம் ஊர்ந்தது. இருபத்தியெட்டு வயதான தமிழ் இளைஞன் அகால நேரத்தில் வீதியில் நிற்பதென்றால் அதில் யாருக்குத்தான் சந்தேகம் வராது. சட்டைப் பைக்குள் கையை விட்டுப் பார்த்தான். திரைப்படம் பார்த்ததற்கான டிக்கட்டையும் காணவில்லை. தலையில் அடித்துக்கொள்ள வேண்டும் போலத் தோன்றியது.

வானத்தைப் பார்த்தான். நிர்மலமான வானத்திலே தூவிவிட்ட நட்சத்திரங்கள். ஒற்றையாய் வெள்ளை வெளேரென்ற முகிற் சேலை, ஆடாமல் அசையாமல்.எதிரே வாட்டசாட்டமான நடுத்தர வயதான ஆளொருவர் சிகரட் பிடித்தபடி அமைதியற்றவராய் பஸ் வரும் திக்கையே பார்த்துக்கொண்டு நின்றார்.

சாந்தகுமாரன் அவரின் அருகே சென்றான். வழுவழுவென்ற முகம், இன அடையாளம் தெரியாதது. ஆங்கிலத்திலேயே கேட்டான்: "சேர், 154 வருமா?"

அவர் அவனை உற்றுப் பார்த்தார்.

"8.30க்குத்தான் கடைசி பஸ். அதுவும் வரவில்லை. சில வேளை அதுவும் வரலாம். ஆனால் நம்பிக்கையில்லை..."

சுத்தமான ஆங்கிலத்தில் சொன்னார்.

திடீரென்று பஸ் ஒன்று.

"நாரேன்பிட்டி பஸ்..... அதுதான் நிறைய வருகிறது..."

ஏமாற்றமும் வெறுப்பும் அவரது குரலில் கனத்தன. மணியைப் பார்த்தவாறே, "நேரம் ஒன்பதரை மணி" என்றார்.

மீண்டும் ஒரு பஸ், நாரேன்பிட்டி.

அவர்கள் இருவரும் நின்ற இடத்திற்கு ஓட்டோக்காரன் ஒருவன் வந்தான். கரகரத்த குரலில், சிங்களத்திலே, "எங்கே போக வேண்டும்?" என்று கேட்டான். அவன் பின்னாலே இன்னொருவன் சிவந்த கண்களோடு.

நடுத்தர வயதுக்காரர் சிங்களத்தில், ஒற்றை வார்த்தையில் "வேண்டாம்" என்றவாறு இன்னொரு சிகரட்டைப் பற்ற வைத்தார். புகையாய் ஊதினார்.

மீண்டும் ஜனச் சுமைத் திணறலோடு இன்னொரு பஸ். அதுவும் நாரேன்பிட்டி பஸ். சாந்தகுமாரன் மனக் குழப்பத்தோடு அவரைப் பார்த்தான்: "நீங்கள் எங்கே போக வேண்டும்?"

"வெள்ளவத்தை". சாந்தகுமாரனின் மனம் லேசாயிற்று. அவரை உற்றுப் பார்த்தபடி கேட்டான்: "அப்படியானால் இரண்டு பேரும் ஓட்டோவில் போய்விடலாமே... நான் என் தூரத்திற்கு வரக்கூடிய தொகையைக் கொடுக்கிறேன்..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒருவர்:– பதினைஞ்சு இடியாப்பம் என்ன விலை?
கடைக்காரர்:– 30 ரூபா!
ஒருவர்:– சம்பல்...?
கடைக்காரர்:– சம்பல் இலவசம்.
ஒருவர்:– அப்ப, ஒரு கட்டுச் சம்பல் பார்சல் பண்ணுங்க.
கடைக்காரர்:– ...... !

• • • • •



ரிப்போட்டர்:– தேர்தலில உங்க அமோக வெற்றிக்கு காரணமென்ன?

அரசியல்வாதி:– அதுவா...! அவரைப் பற்றி நல்லாத் தெரிஞ்சவங்க எனக்கும் என்னைத் தெரிஞ்சவங்க அவருக்கும் வாக்கு போட்டுட்டாங்க போல..

• • • • •

அவர் சிகரெட்டை நிலத்தில் போட்டு காலால் மிதித்தவாறே, "பணம் ஒரு விஷயமாயில்லை. மணி பத்து. ஓட்டோவில் போனால் சிக்கல் வரலாம்..." என்றவர் சட்டென்று நிறுத்திவிட்டுப் பின்னர், "உங்கள் கூட வந்தால்...." என்றார்.

சாந்தகுமாரன் திகைத்துப் போனான். மனதுள் கவலை ரேகை யிட்டது. பேசாமலே எதிரே வரும் பஸ்ஸைப் பார்த்தான். அதுவும் நாராஹேன்பிட்டி. முஷ்டியைப் பிசைந்தான் வெறுப்போடு. அவர் அவனைப் பரிவோடு பார்த்தார்.

"நான் இப்பொழுதுள்ள இயல்பான நிலைமையைத்தான் சொன்



னேன். பாதுகாப்பு நிலையைக் கருதி நிறைய இடங்களில் 'செக்கிங் பொயிண்டு'கள் உள்ளன. ஓட்டோக்களில் நிச்சயம் 'செக்கிங்' இருக்கும். எனக்கும் உங்களைப் பற்றி ஒன்றுமே தெரியாது. அதனால்தான் சொன்னேன். நமக்கு வரும் சிக்கல்களை புத்தியோடு எதிர்கொள்ள வேண்டும்..."

சாந்தகுமாரன் மௌனமாக நின்றான். மனம் தளர்வுற்றது. எல்லாமே குழப்பம், என்ன செய்வது? இந்த ஆள் சிங்களவராயிருந்தும் தன்னோடு வரத் தயங்குவது அவனுக்கு கவலையோடு இனந்தெரியாத அச்சத்தையும் உண்டாக்கிற்று. வயதான தாயையும் சகோதரியையும் எண்ணிய போதிலே இன்னமும் மனம் நடுங்கிற்று. வேர்த்தது.

அவர் சட்டென கேட்டார்.

"நாரேன்பிட்டியில் உங்களுக்குத் தெரிந்த யாராவது இருக்கிறார்களா?"

"இல்லை.."

"என்ன செய்கிறீர்கள்?"

"கொம்ப்யூட்டர் எஞ்சினியர்"

அவர் சாந்தகுமாரனை தன்னையறியாத ஆச்சரியத்தோடு பார்த்தார். மறுகணமே முகபாவத்தை மாற்றியவாறே, "நான் தனியார் நிறுவனமொன்றில் உள்ளேன். பம்பலப்பிட்டியில் அது உள்ளது.." என்றார். பிறகு நெற்றியைச் சுரண்டியவாறு கூறினார்:

"பத்து நாற்பதுக்கு பாமன்கடை வழியாகப்போகிற ஒரு பஸ் வரும். அதில் நாம் போகலாம். பாமன்கடையில் இறங்கி குறுக்கு வழியால் போனால் காலி வீதி. அங்கு உங்களுக்கு நிறையவே பஸ் வரும். இதுதான் கடைசி நம்பிக்கை.."

அவ்விடமெல்லாம் மெல்லிய தென்றல் வீசுகின்றாற் போல உணர்ந்தான் சாந்தகுமாரன். மனதின் அழுத்தம் மெல்லவே கரையத் தொடங்கிற்று.

அவரின் அருகே நின்ற இன்னொருவர் சிங்களத்தில் என்னவோ கேட்க இவரும் பொறுமையாக பதிலளித்தார். "மாத்தையா பொஹமஸ்துதி" என்றார் மற்றவர் மரியாதையாக. முகம் மலர சாந்தகுமாரைப் பார்த்தவாறே.

"அதோ பஸ்" என்றார் ஆங்கிலத்தில்.

பஸ்ஸில் ஏறிக் கொண்டனர்.

இருவரும் அருகருகே இருக்கையில் அமர்ந்தனர். சாந்தகுமாரன் உடனேயே "நீங்கள் இன்றைக்கு செய்த உதவியை நான் என்றைக்குமே மறக்க மாட்டேன்..." என்றான்.

அவர், "அடுத்த பஸ் தரிப்பில் இறங்க வேண்டும்" என்றபடியே எழுந்தார்.

பஸ்ஸிலிருந்து இறங்கி, அரைகுறையாய் ஒளியுமிழும் வீதி வழியாக அவனோடு அவர் நடந்தார். முன்னும் பின்னுமாகப் பார்த்தார். யாருமே இல்லை.

ஆங்கிலத்திலேயே "யாழ்ப்பாணத்தில் எந்த இடம்?" என்றார் மெல்லிய குரலில்.

அவன் சொன்னான்.

"நல்லூர் கந்தசாமி கோயிலுக்கு அருகேயா?" அவர் கேட்டார்.

ஆச்சரியத்தோடு அவரைப் பார்த்தான் அவன்.

"நீங்கள் யாழ்ப்பாணத்துக்கு வந்திருக்கிறீர்களா?"

இப்போது அவரின் முகத்தில் வெளிச்சம். தமிழிலே சொன்னார்:

"நான் உம்முடைய இடத்திற்கு அருகிலைதான் இருக்கிறனான், கோப்பாய். பேர் சந்திரசேகரம். நீர் நேர போம். ஒரு ஆஸ்பத்திரி வரும். அப்படியே இந்த றோட்டு காலி றோட்டில் போய் ஏறும்... நான் வாறன்... இந்த ஒழுங்கைக்குள்ளதான நான் இருக்கிறனான்... அப்ப வரட்டோ?"

சட்டென்று அவர் ஒழுங்கைப் பக்கம் திரும்பினார்.

"மாத்தையா எங்க போக நிக்கிறீங்க?" என்று சிங்களக் கிழவர் ஒருவர் சாந்தகுமாரனைக் கேட்கும் வரை அங்கே திடுக்கிட்டுப் போய் நின்றான் அவன். •

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குங் ஃபூ ஒரு வாழ்க்கை முறை

ஜப்பானிய கராட்டே, கொரியாவின் தாய்கொண்டோ போல சீனாவின் குங்.ஃ.பூவும் ஒரு தற்காப்புக் கலை தான் என்றாலும் இதன் பயனும் பணிகளும் தற்காப்புக் கலை என்றமட்டுடன் நிறைவு பெற்றுவிடுவதில்லை.

குங்.ஃ.பூவிலிருந்து வாழ்க்கையும் வாழ்க்கையிலிருந்து குங்.ஃ.பூவும் தொடர்ந்து பரிமாற்றிக் கொள்ள அனேகம் விஷயங்கள் உண்டு. குங்.ஃ.பூவுக்குள் வாழ்க்கையைக் கற்றுக்கொள்ள முடியும். வாழ்க்கையின் ஒவ்வொரு துளியிலும் குங்.ஃ.பூ இருக்கிறது.

**எளிமை, நேரடித் தன்மை, எதிலும் முழுமையை வெளிப்படுத்துதல்** என்பதை சீன தாவோயிசத்திலிருந்து குங்.ஃ.பூ பெற்றுக் கொண்டிருக்கிறது.

வெறுமனே அடித்து வீழ்த்தும் கலை அல்ல குங்.ஃ.பூ. *தன்னம்பிக்கை, உறுதி, விடாமுயற்சி* என்பவற்றோடு மனிதனை முழுமைப்படுத்தும் கலையாகவும் இருக்கிறது.

எனவேதான் குங்.ஃ.பூ ஒரு வாழ்க்கை முறை என்று வலியுறுத்துகிறார் பில்லி வொங் (Billy wong)

குங்.ஃ.பூ கலை பற்றி பில்லி எழுதும் தொடர் அடுத்த இதழில் ஆரம்பம்!



பில்லி-தன் குருவுடன்



# TAO OF KUNG FU

道功夫

Dragon versus dragon படத்தின் சாகசக் காட்சிகளுக்காக 'சர்வதேச குங்.ஃ.பூ நட்சத்திரம்' என்னும் பட்டத்தினைப் பெற்றுக் கொண்டவர் பில்லி. இப் படத்தில் மாடியிலிருந்து மாடி பாயும் சாகசத்தில் கால் முறிந்து ஆறு மாத காலம் ஆஸ்பத்திரியில் இருந்தார். இவர் யாருடைய கல்லூரியிலிருந்து வந்தவர் என்பதைச் சொன்னால் இந்த அபாய சாகசம் அதிக வியப்பைத் தராது.

'Hong Kong - Chinies martial arts Association' என்ற தற்காப்புக் கலைப் பள்ளியில் பயின்ற பில்லிக்கு ஏழுவருடம் சீனியர் மாணவர் **ஜாக்கி சான்.** அதுமட்டுமல்ல, பில்லி ஜாக்கி சானின் நண்பரும் நம்பிக்கைக்குரிய சீடருமாவார்.

ஜாக்கிசானை அறிமுகப்படுத்தியGolden Harvest பட நிறுவனம்தான் பில்லி வொங்கையும் திரையுலகில் அறிமுகப்படுத்தியது. ஜாக்கி சானுடன் இணைந்து 30 சீன மொழிப் படங்களிலும் இரண்டு ஆங்கிலப் படங்களிலும் நடித்துள்ள பில்லி, தற்போது சொந்தமாகப் படமொன்றைத் தயாரித்திருக்கிறார். இவரது நடிப்பிலும் இயக்கத்திலும் உருவாகி யிருக்கும் ' A man from Bankok' இலங்கை, இந்தியா, தாய்லாந்து, ஹொங்கொங் ஆகிய நாடுகளில் படமாக்கப்பட்டுள்ளது.



A man from Bangkok திரைப்படத்தில் இலங்கை நடிகையுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குங்.:.பூ என்றால் 'நிறைவான திறமை' என்றும் ஓர் அர்த்தமுண்டு. இதன் பயிற்சிகள் உடலுக்கு மாத்திரமல்ல, மனதுக்கும்தான். குங்.:.பூவின் பார்வை எதிலும் தேங்கியிருப்பதுமில்லை, மையப்படுவதும் இல்லை. ஓடும் தண்ணீர் போல சூழலின் முழுமையை கிரகித்தபடி தொடர்ந்து செயல்படுதல். ஓடும் நீருக்கு அடிக்கலாம் வெட்டலாம். உதைக்கலாம். அது தன் பாதிப்பைத் தக்கவைத்துக் கொள்வதில்லை. தடயம் ஏற்படுவதில்லை. தன் முழுமையில் எந்த பங்கமுமில்லாது தொடர்ந்து ஓடுகிறது. தொடர்ந்த பாய்ச்சலினால் பாறையைத் தகர்க்கும் வலிமையைப் பெறுகிறது. இது போலவே குங்.:.பூவும்.

குங்.:.பூ பார்வை என்பதும் ஒரே திசைக்குரியதல்ல. வெவ்வேறு சாத்தியங்களைப் பரிசீலித்தபடி அசைந்து கொண்டிருப்பது அது.

இவ்வாறு குங்.:.பூ கலை குறித்த விளக்கங்களைத் தரும் பில்லி 1961ம் ஆண்டில் தாய்லாந்தில் பிறந்தவர். ஐந்து வயதிலேயே ஹொங்கொங் சென்று 30 ஆண்டுகளுக்கு மேலாக குங்.:.பூ பயிற்சிகளை முறைப்படி பயின்றவர்.

**முக்கியமான ஒரு செய்தி. இவர் திருமணம் செய்து கொண்டிருப்பது யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழ்ப் பெண்மணி ஒருவரை. மற்றுமொரு மகிழ்ச்சி தரும் செய்தி. குங்.:.பூ கலை பற்றிய பல்வேறு விளக்கங்களைத் தொடர்ந்து வரும் அமுது இதழ்களில் பில்லி வொங் தரப் போகிறார் என்பது!**



ஜாக்கி சானுடன்



சிவாஜி கணேசன், பொம்மை ஆசிரியர் வீரபத்திரன் குடும்பத்தினருடன் பில்லி

தமிழ் சினிமாவிலும் தன் கைவரிசையை இப்போது காட்ட ஆரம்பித்திருக்கிறார் பில்லி. சில படங்களுக்கு ஸ்டண்ட் மாஸ்டராகவும், நடிகர்களுக்கு குங்.:.பூ பயிற்சி சொல்லித் தருபவராகவும் இருக்கிறார். தனது தமிழ்த் திரையுலகப் பிரவேசத்திற்குக் காரணம் பொம்மை வீரபத்திரன் என்கிறார் பில்லி.



சுகன்யாவுக்கு பயிற்சி

# மனிதனை வேட்டையாடிய பிராணிகள்



ஆதர் கொஸ்பி என்பவர் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த ஒரு விலங்குப் பண்ணையாளர். ஒருநாள் இவர் வேட்டைக்குப் போகும்போது காயங்களுக்குள்ளான நிலையில் வீழ்ந்து கிடந்த கங்காரு ஒன்றைக் கண்டு அதன் அருகில் சென்றார். அவரைக் கண்ட கங்காரு பயந்து தடுமாறி ஆதரின் கையிலிருந்து கைத்துப்பாக்கியைப் பிடித்துக் கொண்டதில் துப்பாக்கி வெடித்து அவரின் இடது காலில் வெடிபட்டு காயத்துக்குள்ளானார்.

சிறிய 'குருமிணிய' வண்டு ஒன்று மனிதனைக் கொலைசெய்த சம்பவமொன்று நேபாளத்தில் நடந்துள்ளது. பறந்த சென்று கொண்டிருந்த குருமிணிய வண்டு ஒரு மெழுகுதிரியில் பட்டு விழுந்த அது, மேசையிலுள்ள கைத்துப்பாக்கியின் பொறியில் பட, அது வெடித்து முன்னாலுள்ள ஒரு பெண் இறக்க நேரிட்டது.

அமெரிக்காவின் உட்டா பிரதேசத்தைச் சேர்ந்த வேட்டைக்காரனுக்கு நடந்தது இது. வேட்டைக்குச் சென்ற அவர் மரை ஒன்றை நோக்கிச் சுட்டார். சூடுபட்டு விழுந்து கிடந்த மரைக்கு அருகில் சென்றார். மரை இறந்துவிட்டதா எனப் பார்ப்பதற்கு குனிந்தபொழுது சாகாமலிருந்த அம் மரை உதைத்ததில் வேட்டைக்காரனுக்கு பலத்த காயம் ஏற்பட்டது.





பறந்து சென்ற கொக்கு ஒன்றுக்கு சுட்ட கலிபோர்னியாவின் வேட்டைக்காரன் ஒருவனுக்கு ஒரு வித்தியாசமான நிகழ்வு நடந்தது. சுட்ட கொக்கு வீழ்ந்ததில் தலையில் பலத்த காயம் ஏற்பட்டதுடன் அவன் நிலை தடுமாறி கீழே வீழ்ந்ததில் கால் ஒன்றும் உடைய நேரிட்டது.

பிரான்ஸில் வேட்டைக்குச் சென்ற ஒரு வேட்டைக்காரனுக்கும் மேற்போன்ற ஒரு சம்பவம் நிகழ்ந்தது. தாரா ஒன்றை நோக்கி சுட முற்பட்ட பொழுது ஓடி வந்த தாரா மோதுண்டதில் துப்பாக்கி வெடித்து அருகிலுள்ள குழவிக் கூடொன்றில் பட்டு அதிலிருந்து குழவிகள் வேட்டைக்காரனைக் கொட்டித்தீத்தன.

எஸ். டீன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரத்தினபுரி:
# இரட்டைக் கொலையும் இனக் கலவரமும்




தொழிற்சாலை அகதிமுகாமாக....

- ரஞ்சிதன் சிவக்கொழுந்து

செப்டெம்பர் 9. இரவு 11 மணியிருக்கும். இரத்தினபுரியிலிருந்து 28 கி.மீ. தொலைவிலுள்ள வேல்லவத்த, அளுபொல ஆகிய தோட்ட மக்களிடையே உள்ளூர ஒரு கிலி பரவியது. காதோடு காது வைத்தாற்போல் லயத்துக்கு லயம் அந்தப் பயங்கரச் செய்தி பரவியது. ***'பந்துசேன தலைவரையும் அசித்தவையும் வெட்டிப்புட்டானுகளாம்...'.***

யாருக்கும் என்ன பிரச்சினையென்பது புரியவில்லை. கொல்லப்பட்ட இருவரில் பந்துசேன என்பவர் சிங்களவராயினும் வேல்லவத்த தோட்டத்தில் தமிழ் தோட்டத் தொழிலாளர்களின் தொழிற்சங்கமொன்றின் தலைவர். மற்றவரான அசித்த, அப்பகுதியிலிருக்கும் சிங்களக் கிராமத்தில் கசிப்பு வியாபாரம் செய்யும் குடும்பத்தைச் சேர்ந்த இளைஞன். இவர்கள் இருவரும் அன்றைய தினம் ஏன் வேல்லவத்த தோட்டத்தின் லயன்களிருக்கும் பகுதிக்கு வந்தார்கள், ஏன் கொலை செய்யப்பட்டார்கள் என்ற உண்மை தெரியாமலேயே அவ்விரு தோட்ட லயன்கள் அத்தனையும் மறுதினமே காடையர்களால் தீ மூட்டிக் கொழுத்தப்பட்டன.

இவ்வாறான தாக்குதலை எதிர்பார்த்திருந்த அத்தோட்ட மக்கள் காடையர்கள் வருவதற்கு முன்னரே லயன்களை விட்டு வெளியேறி அருகிலிருந்த பற்றைக் காடுகளுக்குள் தஞ்சம் புகுந்துவிட்டனர். சிதறி ஓடுகையில் தொலைந்து போன சிறார்கள் சிலர் இன்னும் கண்டுபிடிக்கப்படவேயில்லை. காலம் காலமாக அத் தொழிலாளர்கள் பிடுங்கிய கொழுந்துகளை அரைத்த அலுபொல தோட்டத்தின் தொழிற்சாலை இன்று அகதி முகாமாக மாற்றியுள்ளது. கூட்டம் கூட்டமாக காடையர்கள் **திடீரென எங்கிருந்து வந்தார்கள், அவர்கள் கைகளிலே பொல்லுகளும் இரும்பு வாள்களும் எப்படி வந்தன, லீற்றர் கணக்கில் மண்ணெண்ணெய் எப்படி வந்தது என்ற கேள்விகளைத் தோண்டிய போது பிரதேச சபை மட்டத்திலான சில அரசியல்வாதிகளின் கை பின்னாலிருந்தது புலனாகியது.**

கொலையோடு நேரடியாகத் தொடர்புள்ள தோட்டத்து இளைஞர்கள் 11 பேர் இப்போது தலைமறைவாகிவிட்டனர். அவர்களின் பெயர் விபரங்களை விலாவாரியாக தமிழ் தொழிலாளர்கள் பொலிஸாரிடமும் இராணுவத்தினரிடமும் கொடுத்துள்ளனர். *'அவனுக சரியான கொலைகாரனுக... இதுக்கு முன்னயும் தோட்டத்துல ஒரு தமிழ்ப் பையன வெட்டிக் கொன்னுருக்கானுக. அவனுகள வச்சுத்தான் கசிப்பு காச்சுற நாட்டுச் சிங்களவனுக தோட்டத்துள்ளுக்கு கசிப்ப விக்கிறானுக... இப்ப ஏதோ யாவாரப் பெணக்குல சிங்களவனுகள வெட்டி கொன்னுப்புட்டானுக...'* என கொலை செய்துவிட்டு தலைமறைவாகியுள்ள அந்தத் தோட்டத்துத் தமிழ் இளைஞர்களைப் பற்றித் தமிழ்த் தொழிலாளர்களே கூறுகிறார்கள்.

இதற்கு முன்னரும் 1996 ஒக்டோபர் 10ம் திகதி இதே தோட்டத்தல் 16 காம்பறாக்களைக் கொண்ட ஒரு லயம் தீ வைத்துக் கொழுத்தப்பட்டு தொழிலாளர்கள் தாக்கப்பட்டனர். இம்முறை கொலைசெய்யப்பட்ட அசித்த எனும் இளைஞனின் தமையனுக்கும் ஒரு தோட்டத் தமிழ் இளைஞனுக்கும் ஏற்பட்ட கசிப்புக் கொடுக்கல் வாங்கல் பிரச்சினையாலேயே அன்றும் அது நடந்தது. இம்முறை கொலையுண்ட பந்துசேன அசித்த ஆகிய இருவரின் உடல்கள் ஒவ்வொன்றும் ஐம்பதுக்கு மேற்பட்ட வெட்டுக் காயங்களுடன் குதறப்பட்ட நிலையில் கண்டெடுக்கப்பட்டன. இந்த நிலையில் சடலங்களைப் பார்க்க நேர்ந்ததே இவ் இனக்கலவரத்துக்கு காரணமென்பது சில சிங்கள நபர்களின் வாதம். தோட்ட லயன்களை எரித்த குற்றச் செயலை மறைப்பதற்கு, அவர்கள் இன்னும் ஒருபடி மேலே போய் **'இப்படி மனிதர்களை கண்டதுண்டமாக வெட்டும் கலையில் தேர்ச்சி பெற்றவர்கள் புலிகளே, எனவே இக் கொலைகளைச் செய்த இளைஞர்களுக்கும் புலித் தொடர்பு இருக்கிறது'** என்கின்ற கட்டுக்கதையை அவிழ்த்து விட்டுள்ளனர்.

சிங்களவர் இருவர் கொலைசெய்யப்பட்டதை நியாயப்படுத்த விரும்புகின்ற சில தோட்டத்துத் தமிழர்கள் **'கொல்லப்பட்ட இருவரும் பெண்கள் விஷயத்தில் மோசமானவர்களென்றும் தோட்ட லயன்களுக்குள் நுழைந்து பெண்களைப் பலாத்காரப்படுத்தும் ஸ்திரிலோலர்களென்றும் இதனால் ஆத்திரப்பட்டே அவர்களைத் தோட்ட இளைஞர்கள் கொன்றுவிட்டார்கள்'** என்ற கதையை அவிழ்க்கின்றனர். இவ் விரண்டுமே பொய்கள் என்பதை அங்கு சென்று மக்களைச் சந்தித்ததில் புரிந்துகொள்ள முடிகிறது. பெரும்பாலான சிங்களவரும் தமிழரும் இவ்விரு கதைகளையுமே நிராகரிக்கின்றனர்.

இப்போது பாதுகாப்புக்காக அங்கு இராணுவம் நிறுத்தப்பட்டுள்ளது. தோட்ட லயன்களைத் திருத்தி தொழிலாளர்களை மீளக் குடியேற்றும்வரை இராணுவம் அங்கிருக்கப் போவதாகப் பேச்சு. *'ஆமிக்காரனுக வரேல்லன்னா நம்மள்ள ஐநூறு பேரையாவது கொன்னுபோட்டிருப்பானுக நல்ல நேரம்...!,* என்றார் ஒரு வயது முதிர்ந்த தொழிலாளி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றிவேந்தன்

# ஸ்பில்பேர்க்

## SPIELBERG



பிரபல அமெரிக்கத் திரைப்படகர்த்தா ஸ்டீபன் ஸ்பில்பேர்க்கின் புதிய படைப்புத்தான் **"சேவிங் பிரைவேட் ரயன்"** (*சிப்பாய் ரயனைக் காப்பாற்றுவது*) என்பதாகும். திரைப்பட வரலாற்றில் மிகஅதிக வருவாயை ஈட்டிக்கொடுத்த முதல் இருபது படங்களில் ஏழுடன் ஸ்பில்பேர்க் தொடர்புடையவர். ஆனால் அவரது இப்புதிய படம் விமர்சகர்கள் பாராட்டைப் பெற்றுவருகின்ற போதிலும் வசூலில் சாதனை படைக்கும் என்று கருதுவதற்கில்லை.

**ஸ்பில்பேர்க்** இதுவரை இயக்கியுள்ள 20 படங்களில் 6 இரண்டாம் உலகப் போர்ப் பின்னணியுடன் நேரடியாகவோ மறைமுகமாகவோ சம்பந்தம் கொண்டவை. புதிய படமான **"சேவிங் பிரைவேட் ரயன்"** முழுக்க அப்போரைப் பின்னணியாகக் கொண்டது. வரலாற்றுரீதியாக ஜெர்மனிக்கெதிரான பாரிய திருப்புமுனையாக அமைந்தது நேசநாடுகள் 1944ல் தொடுத்த எதிர்த்தாக்குதலாகும். பிரான்சு நாட்டின் நோர்மண்டிக் கரையோரம் குவிந்த நேசநாட்டுப் படையினர் ஈட்டிய வெற்றியே போரின் முடிவுக்கான முதல்படியாக விளங்கியது.

இந்த வெற்றி பற்றிக் குறிப்பாகவும் போர் பற்றிப் பொதுவாகவும் எத்தனையோ திரைப்படங்கள் வெளிவந்துள்ளன. இந்தப் போர்த் திரைப்படங்களிலெல்லாம் கதை சொல்லப்படும் விதம் மனோரதீய சாகசப் பாணியிலேயே அமைந்துள்ளன.

## திரையில் விரியும் உண்மைப் போர்

### "சேவிங் பிரைவேட் ரயன்"

கதாநாயகர்களான போர் வீரர்கள் எத்தனையோ இடர்களை எதிர்கொண்டு வீரதீர பராக்கிரமங்களைப் புரிவார்கள். போர்முனையில் இறப்பவர்கள்கூட சாகும் தறுவாயில் கவித்துவம் நிறைந்த கடைசி வார்த்தைகளை உதிர்த்து விடைபெறுவார்கள்.

இந்தப் போர்ப் படங்களிலெல்லாம் போரின் தொனிகள், காட்சிகள், நிகழ்வுகள் எல்லாம் கவர்ச்சியான முறையில் ஆர்வத்தைத் தூண்டும் விதத்திலேதான் காணப்படும். **"சுத்திகரிக்கப்பட்ட"** ஒரு போரைத்தான் நாம் காணுவோமேயொழிய உண்மையான, யதார்த்த பூர்வமான போரின் அவலங்களை, சோகங்களை, அதன் அருவருப்பான அர்த்தமற்ற தன்மையைக் காணமாட்டோம்.

ஆனால் ஸ்டீபன் ஸ்பில்பேர்க் இந்தப் படம் மூலம் போர்ப் படங்களின் வழமையான நியதியை உடைத்தெறிகிறார். போரை மையமாகக் கொண்டு எடுக்கப்படக்கூடிய எதிர்காலத் திரைப்படங்களை மாற்றியமைக்கும் முன்னோடித் திரைப்படமாக "சேவிங் பிரைவேட் ரயன்" விளங்குகிறது.

ரயன் குடும்பத்தைச் சேர்ந்த 4 சகோதரர்களும் அமெரிக்கப் படையில் சேர்ந்து போர்முனைக்குப் போக 3 பேர் உயிரிழக்கின்றனர். கடைசித் தம்பியைப் போர்முனையிலிருந்து மீட்டெடுத்துக் கொண்டுவந்து விதவைத் தாயிடம் சேர்ப்பிக்க வேண்டிய பொறுப்பு கப்டன் மில்லர் (**இரு தடவை ஒஸ்கார் விருது பெற்ற ரொம் ஹாங்ஸ்)** தலைமையிலான சிறு துருப்புக் குழுவுக்கு அளிக்கப்படுகிறது. பெரும் இழப்புக்கள் மத்தியில் நோர்மண்டிக் கடற்கரையில் இறங்கிய இவர்கள் மேலும் பல ஆபத்துக்களைக் கடந்து ரயன் இருக்குமிடத்தை அடைகின்றனர். மற்றொரு தாக்குதலை எதிர்நோக்கும் தனது சகாக்களை விட்டு வரமாட்டேன் என அவர் சொல்ல மீட்புக்குழு அந்த அணியுடன் நின்று போராடுகிறது. கப்டன் மில்லர் சாகிறார். ஆனால் ரயன் தப்புவிக்கப்பட்டு இறுதிக் காட்சியில் தன்னைக் காப்பாற்ற வந்தவர்கள் சமாதியில் அஞ்சலி செலுத்துகிறார், ஓர் வயோதிபராக.

**ஒரு திட்டவட்டமான போர்க்குறிக்கோளுக்காக அல்லாமல் வேறொரு காரணத்துக்காக நடத்தப்படும் யுத்த நடவடிக்கையின் தார்மீகத் தன்மையைக் கேள்விக்குறியாக்குவதன் மூலம் ஸ்பில்பேர்க் போரின் அர்த்தமற்ற தன்மையைப் புலப்படுத்துகிறார்.** போர் என்பதை உன்னதமாகச் சித்தரிக்காமல் அதேசமயம் அதை வலிந்து கண்டிக்காமலும் கதையை நகர்த்திச் செல்கிறார்.


ஆரம்பத்தில் கைகளில் வைத்து இயக்கப்படும் கமராக்கள் மூலம் போர்க் காட்சிகள் படம் பிடிக்கப்படுகின்றன. நோர்மண்டிக் கடற்கரையில் படையினர் வந்திறங்கும் காட்சிகள் பிரமிப்பூட்டும் வகையில் காண்பிக்கப்படுகின்றன. போர் வீரர் வாந்தி எடுப்பது, பயத்தில் அலறுவது, காயப்படுவது, மரணிப்பது என்று சங்கிலித் தொடர்போல காட்சிகள் மிக வேகமாக 22 நிமிடங்கள் உருண்டோடுகின்றன. நவீன தொழில்நுட்ப நுணுக்கங்களுடன் தத்ரூபமாக்கப்பட்டுள்ள இக் காட்சிகளைப் பார்க்கும்போது நாம் இதுவரை திரையில் கண்டவை எல்லாம் போரல்ல, ஸ்பில்பெர்க் காட்டுவதே போர் என்ற எண்ணம் நம்மைச் சூழ்ந்து கொள்கின்றது.

இதுவே ஸ்பில்பெர்க்கின் வெற்றி. போர் என்ற அவலத்தில் இறக்கின்ற போர்வீரர்கள் உண்மையில் இப்படித்தான் இறக்கிறார்களேயொழிய வழமையான திரைப்படங்கள் மனோரதீயமாக சித்தரிக்கும் விதத்தில் அல்ல என்ற உண்மையை எமக்கு உறைய வைக்கிறார் ஸ்பில்பெர்க்.

***- டி.பி.எஸ். ஜெயராஜ்***

---

*ஒருவர்:- நீங்கள் டைட்டானிக் படம் பார்த்தீங்களா?*
*மற்றவர்:- இல்லை*
*ஒருவர்:- அட ஒரு அருமையான படத்த இன்னும் பாக்காமல் இருக்கிறீங்களே. போகட்டும். ஜீன்ஸ் பாத்தீங்களா?*
*மற்றவர்:- இல்லையே.*
*ஒருவர்:- அதையும் விட்டிட்டீங்களா. அப்ப இந்தியனாவது பாத்தீங்களா?*
*மற்றவர்:- எங்க நேரம்? நீங்கள் இதெல்லாம் பாத்தாச்சோ?*
*ஒருவர்:- நான் பாத்திருந்தால் ஏன் உங்களிட்டக் கேக்கிறேன். நீங்களாவது பாத்திருப்பீங்கள். கதை கேக்கலாமெண்டுதான்...*



*ஒரு பாட்டி மற்றைய பாட்டியிடம்:- என்ன. நாங்க இவ்வளவு ஏசியும் பேரன் வெறுமனே சலசல, தகதக எண்டு முணுமுணுத்திட்டுப் போறான்?*
*மற்றைய பாட்டி:- நாங்கள் ரெட்டைக் கிழவிகளாம். ஜீன்ஸ் பாட்டுகேட்டிட்டு இப்பிடி சூச்சுமமாத் திட்டுறான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோயற்ற....



## அழகு தேமலுக்கு மலிவு வைத்தியம்

அழகு தேமல் எந்த வயதினரையும் பீடிக்கக் கூடியதாயினும் கட்டிளம் பருவத்தினரிடையேதான் அதிகம் காணப்படுவதுண்டு. முதுகு, தோள்பட்டை ஆகிய இடங்களில் மாத்திரமின்றிச் சிலருக்கு முகத்தில் கூடத் தோன்றுவதுண்டு. படை போல் சிறிது சுருக்கத்துடன் தோன்றும் தடிப்புக்களில் இரண்டுவகை உண்டு. வெளிர்நிறத்தில் தோன்றுவதையே **அழகு தேமல்** என்கிறோம். சற்று கடுமையான நிறத்தில் தோன்றுவது அழுக்குப் போல் அசிங்கமாகத் தெரியும். இதனை **அழுக்குத் தேமல்** என்றும் கூறுவார்கள்.

*"அழகு தேமல் ஒன்றும் செய்யாது"* எனப் பெரியவர்கள் அலட்சியப் படுத்திவிட்டாலும் அழகுக்கும் கவர்ச்சிக்கும் முக்கியத்துவம் கொடுக்கும் இளைஞர்களுக்கு இது பெருந்தொல்லையாக மாறி கவலையளிப்பதுண்டு. கோயில், நீச்சல், விளையாட்டு மைதானம் போன்றவற்றிற்கு வெற்றுடம்புடன் செல்வதற்கு பலர் தயங்குவதற்கு இந்நோயும் ஒரு முக்கிய காரணமாகும்.

இது ஒருவகை மதுவத்தினால்தான் ஏற்படுகிறது. **PITYROS PORUM ORBICULARE** என்பதுதான் அம் மதுவத்தின் பெயர். பலவகையான களிம்பு மருந்துகளும் மாத்திரைகளும் இந்நோயைக் குணமாக்கப் பயன்படுத்தப்படுகின்றன. ஆயினும் அவற்றில் பல மருந்துகள் அதிக விலையானவை. எங்கும் தாராளமாகக் கிடைப்பதில்லை.

விலை குறைவாக ஆனால் நிறை பலனைக் கொடுக்கக்கூடிய மருந்து ஒன்று பரவலாக உபயோகிக்கப்படுகிறது. இம்மருந்தை உலக சுகாதார ஸ்தாபனமும் சிபார்சு செய்கிறது.

**செல்சன்** (SELSUN) என்ற வியாபாரப் பெயரில் தலைப் பொடுகிற்கு மருந்தாகப் பயன்படுத்தப்படும் ஷாம்புதான் அதுவாகும். இதன் மருத்துவப் பெயர் 2.5% Selenium Sulphide என்பதாகும்.

**உபயோகிக்கும் முறை:**

(1) முதலில் உடலை ஈரப்படுத்துங்கள்.
(2) ஈரலிப்பான சருமம் முழுவதும் இம்மருந்தைப் பூச வேண்டும்.
(3) தேமலுக்கு மேல் மாத்திரமன்றி தேமல் உள்ள பகுதிகள் முழுவதும் பூசுவது நல்லது.
(4) 10 நிமிடங்கள் ஊறியபின் கழுவுங்கள்.
(5) இரண்டு வாரங்களுக்குத் தொடர்ச்சியாகத் தினமும் இவ்வாறு மருந்து போட வேண்டும்.

மேற்கூறியவாறு இரு வாரங்களுக்கு மருந்தைப் பூசிவர நோய் மறைந்துவிடும்.

## மருத்துவ ஆலோசனை

**ஜெஸீல், கல்முனை.**

**கேள்வி:** டொக்டர் எனக்கு வயது 20. சிறு வயதில் இருந்தே எனது உள்ளங்கை, உள்ளங்கால் என்பன எந்தநேரமும் கடுமையாக வியர்த்துக்கொண்டே இருக்கின்றன. இதனால் எனக்குக் கஷ்டமாக இருக்கின்றது. இதனை மருந்துகளால் சுகமாக்க முடியுமா? அவ்வாறாயின் எப்படி?

**பதில்:** உள்ளங்கை, உள்ளங்கால்களில் வியர்ப்பது பொதுவாக நாளமில்லாச் சுரப்பிகளின் கோளாறு காரணமாக ஏற்படுவதாகும். இது ஆபத்தான நோயல்ல. எனினும் எழுதுவது போன்ற வேலைகளைச் செய்யும்போது சிரமமாக இருக்கும். கைக்குட்டையின் மேல் கையை வைத்துக்கொண்டுதான் எழுதுவீர்கள் என்று நினைக்கிறேன்.

மனப் பதற்றம், மன இறுக்கம் போன்ற உணர்ச்சி நிலை மாற்றங்களின்போது இது அதிகரிக்கும். இவற்றைத் தவிர்க்க சில மருந்துகள் இருந்தபோதும் அவை சில இடைஞ்சல் கொடுக்கும் பக்கவிளைவுகளை ஏற்படுத்தக்கூடும் என்பதால் அதிகம் உபயோகிக்கப்படுவதில்லை. கேடயச் சுரப்பி நோய்களின் போதும் இத்தகைய அறிகுறிகள் ஏற்படலாம்.

எனவே ஒரு பொது வைத்திய நிபுணரை அணுகுங்கள். அவர் உங்கள் நோயின் தன்மையை ஆராய்ந்து பார்த்து தகுந்த மருந்து கொடுப்பார்.

**கரீடா - கண்டி**

**கேள்வி:** எனது அக்காவிற்கு வயது 27. திருமணமாகவில்லை. அவருக்கு மாதவிலக்கு ஏற்படுவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பாக இரண்டு மார்பகங்களிலும் வலி ஏற்படுகின்றது. சிறிது கை பட்டாலும் வலி அதிகமாக உள்ளது. இது ஏன்? ஆனால் மாதவிடாயும் ஒரு நாள்தான் செல்கிறது. இதன்பின் வலி இல்லை. இது புற்றுநோயின் அறிகுறியா?

**பதில்:** ஒரு பெண்ணிற்கு மாதவிடாய் ஏற்படும்போது அவளது உடலில் உள்ள ஹோர்மோன்களின் அளவுகளில் பல மாற்றங்கள் ஏற்படுகின்றன. இது காரணமாக அவளது உடலிலும் மனத்திலும் பல்வேறு மாற்றங்கள் தோன்றலாம். உதாரணமாக அடிக்கடி சிறுநீர் கழிக்க வேண்டும் என்ற உணர்வு ஏற்படலாம். முகப்பருக்கள் அதிகரிக்கலாம். களைப்பு, உடற்சோர்வு, தலையிடி, எளிதில் சினமடைதல், மனப்பதற்றம் போன்ற அறிகுறிகள் தோன்றலாம்.

இதேபோல் மாதவிடாய் நெருங்கிய நாட்களில் அவளது மார்பகங்களிலும் சில மாற்றங்கள் தோன்றலாம். அந்நேரத்தில் அவை வழமையைவிட சற்றுப் பெருத்துக் கனக்கலாம். அத்துடன் அந்நேரத்தில் அவை வழமையைவிட அதிக உணர்ச்சியை உடையவையாக இருக்கும். இதனால் சிறு தொடுகைகூட மார்பில் கடுமையான வலியை ஏற்படுத்தக் கூடும். இதுதான் உங்கள் சகோதரிக்கும் நடக்கிறது. பயப்பட வேண்டியது எதுவும் இல்லை. இவை சாதாரண உடலியல் தொழிற்பாடுதான். இதற்கும் புற்றுநோய்க்கும் எந்தவித தொடர்பும் கிடையாது. கவலையை விடுங்கள்.

மாதவிடாய் மிகக் குறைவாகப் படுவது பற்றி மகப்பேற்று, பெண் நோயியல் வைத்திய நிபுணரிடம் காட்டி ஆலோசனை பெறுங்கள். ●

. . . . . . . . . . .



*டாக்டர்:- எங்கே கனகாலமாய் காணேல்ல?*
*நோயாளி:- ஒரு மாறுதல் இருந்தால் உடம்புக்கு நல்லதெண்டீங்க ....*
*டாக்டர்:- அதுக்கு...?*
*நோயாளி:- அதுதான் டாக்டரையே மாத்திட்டேன்!*
*டாக்டர்:- .......!*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வெறுமனே "எவ்வளவு"
# "எவ்வளவு காலத்திற்கு?"
## என்பதல்லக் கேள்வி
## எப்படி, எவ்வளவு சிறப்பாக,
## நாம் உதவ முடியுமென்பதுதான் கேள்வி

வீடமைப்புத் தொடர்பான வழக்கமான மனப்பான்மை "எவ்வளவு" "எவ்வளவு காலத்திற்கு?" என்பதாகும்.

ஹற்றன் நஷனல் வங்கியின் ஷாந்தி கடன் திட்டம் இதற்கப்பாலும் செயற்படுகிறது.

உங்கள் கருத்து, உங்கள் தேவைகள், உங்கள் முன்னுரிமைகள் மற்றும் எவ்வளவு சிறப்பாக நாம் உதவமுடியும் என்பவற்றின் அடிப்படையிலேயே நாம் இந்த விஷயத்தை அணுகுகின்றோம்.

**வசதிகள்**- நாடு பூராவுமுள்ள எமது ஏதேனும் ஒரு கிளையூடாக நீங்கள் விரும்பும் கிளையில் சகல கொடுக்கல் வாங்கல்களையும் செய்யலாம்.

**வாய்ப்புகள்**-வெறும் காணியை வாங்குதல், வீடமைத்தல், பூர்த்தியான வீடொன்றைக் கொள்வனவு செய்தல் அல்லது புதுப்பித்தல், விரிவாக்கல் ஆகியவற்றுக்குக் கடன் கிடைக்கிறது.

**விரைவான சேவை**-வழமையான சூழ்நிலைகளில் கொடுக்கல் வாங்கல்களை 6-8 வாரங்களில் அல்லது அவசியமானால் இதற்கு முன்னரும் செய்து கொள்ளலாம்.

**செய்திறன்மிக்க சேவை**-உங்கள் தேவைகளைப்புரிந்து அவற்றுக்கு ஆத்த பூர்வமாகச் செயற்படும் அனுபவமும் சிறப்புத் திறமையும் பெற்ற அலுவலர்களை ஒவ்வொரு கிளையும் கொண்டிருக்கிறது.

**இசைவானது**-நீங்கள் பெறும் கடன் தொகைக்கு உச்சவரம்பு இல்லை. ஆகக் கூடியது 20 வருட காலத்திற்குள் கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டும்.

மேலும் விபரங்களுக்கு ஹ.ந.வங்கியின் ஏதேனும் ஒரு கிளையுடன் அல்லது தலைமை அலுவலகத்தின் சந்தைப்படுத்தும் பிரிவுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

**ஹற்றன்**
**நஷனல் வங்கி**
உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி
10, ஆர்.ஏ.டி.மெல் மாவத்தை,
கொழும்பு 03
தொ.பே: 421885-7 ஃபாக்ஸ்: 320745
ரெலெக்ஸ்: 22152 HATNBK CE,
http://www.hnb.net
Email: moreinfo@hnb.net

SOMA AHANGAMA ASSOCIATES (PVT) LTD. 10758

**ஹற்றன் நஷனல் ஷாந்தி** [illegible] அமைதியும் சாந்தியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வயக்ரா



## மேற்கத்தேய சந்தையைக் கலக்கும்

# காமக் குளிசை

*ரிஸ்கி ஷெரீப்*

ஆண்மைத் தளர்ச்சி, வயது ஏற்றம், உடல் உறவில் திருப்தியின்மை என்று தாம்பத்தியத்தில் மனச்சோர்வோடு இருக்கும் - இயங்கும் ஆண்(?)மகன்களை **விருட்டெனத் தூக்கி நிறுத்த வல்லது வயக்ரா!** கிளர்ந்தெழும் புத்துணர்ச்சியோடு தாம்பத்தியத்தில் மதன காமராசர்களாக வீறுநடை போடவைக்கவென்றே உருவாக்கப்பட்டு, வெற்றிகரமாக இன்றைய வெளிநாட்டுச் சந்தையில் வீறுநடை போட்டுக்கொண்டிருக்கிறது நீல வர்ண **வயக்ரா** மாத்திரை.

இதைச் சாப்பிட்ட உடனேயே 'நீலத்தனமான' ஆத்மார்த்த கிளுகிளுப்பு ஏற்படுகிறது என்கிறது விஞ்ஞானம். அப்படிப்பட்ட ஆண்மைக் கிளர்ச்சிக்கான இந்த மாத்திரை இன்றைய இங்கிலாந்தின் விற்பனைச் சந்தையை ஆக்கிரமித்து ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கிறது. வியாபாரம் மிக சூடு பிடித்து அனல் பறக் கிறது. வாடிக்கையாளர்களின் தேவைக்கேற்ப சப்ளை பண்ண முடியாமல் விற்பனையாளர்கள் தடுமாறுகிறார்கள்.

இது ஐக்கிய அமெரிக்காவின் தயாரிப்பு என்றாலும் முதன் முறையாக லண்டன் தனியார்துறை நிறுவனமொன்றின் மூலம்தான் விற்பனைக்கு விடப்பட்டது.

கவர்ச்சியான இந்த ஔடதம் இந்த வருடத்தின் இறுதிக்குள் வெளிநாடுகளின் பல தேசிய வைத்தியசாலைகளில் இடம்பிடிக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

MAGIC BULLET **(சாகசத் தோட்டா)** என்றழைக்கப்படும் இந்த வயக்ரா காமக் குளிசை அமெரிக்காவுக்குள் குறுகிய காலத்தில் விற்பனைச் சாகசம் புரிந்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இங்கிலாந்தில் இந்த அமிலவாயுவின் விலை எட்டுப் பவுண் களாக விலையிடப்பட்டிருக்கின்ற நிலையில் ஒரு நாளைக்கு 10,000க்கும் மேற்பட்டோர் இதைப் பாவிக்கும் நோக்கம் கருதி வைத்தியர்களை நாடிப் படையெடுத்தவண்ணமுள்ளனர்.

***வைத்தியரின் ஆலோசனையின்றி இந்த வயக்ரா மாத்திரை களை எவரும் பாவிக்கக் கூடாது*** என்று அறிவுறுத்தப்பட்டிருக் கின்றபோதும் இந்த மாத்திரையைப் பெற வேண்டிய ஆவேசத்தில் - 40 பவுண் விலையில் கூட ஒரு மாத்திரையைப் பெறுவதற்கென்று நாளொன்றுக்கு ஐயாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் விபரங்கள் தேடி இன்டர்நெட் மூலமாகத் தொடர்பு கொண்டு வருகிறார்கள்.

2000 ஆம் வருடம் பூர்த்தியாகும்போது 1000 கோடி வயக்ரா மாத்திரைகளை விற்பனை செய்ய இயலும் என எதிர்ப்பார்ப்பதாக வயக்ரா உற்பத்தியாளரான **பிஷர் லெப்ஸ்** நிறுவனம் கூறுகிறது.

கலிபோர்னியாவைச் சேர்ந்த 54 வயது டொல்டன் ஜோன்ஸ், *"நான் தினமும் உட்கொள்ளும் விட்டமின் மாதிரிதான் வயக்ராவும். சீரான மூச்சோடு குளிர்மையான சுவாசத்தையும் இது தருகின்றது. இதை உட்கொண்டவுடன் ஏதோ இனம் புரியாத உத்வேகத்தில் கிளர்ச்சியுறுவதையும் என்னால் நீண்ட நேரம் உறவுகொள்ள முடிவதையும் அறிகிறேன்"* என்கிறார்.

அவரது 49 வயது மனைவி ஜீல், *"நாம் மறுபடியும் ஒரு இனிமையான இளமைப் பருவத்துக்குள் பிரவேசித்ததாக உணர்கிறோம்"*, என்கிறார்.

இதேநேரம் 1992ல் அமெரிக்காவின் பிரபல ஔடத தயா ரிப்பு நிறுவனமான ஃபிஷரின், இருதய நோய் சம்பந்தமான மருந்து கண்டுபிடிப்பில் எதிர்பாராத சடுதி விளைவாக ஏற்பட்டதே வயக்ரா என்றும் சில செய்திகள் கூறுகின்றன.

3500 பேரளவில் இதற்கான பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு, அதில் மூன்றில் இரண்டு பேர் வயக்ரா பாவிப்பதில் சந்தோஷமும் திருப்தியும் இருப்பதாகக் கருத்து வெளியிட்டிருக்கிறார்கள். இதற்கு மாறாக 15 வீதமானோர், இதைப் பாவித்ததும் பக்க விளைவுகள் ஏற்படுவதாகவும் சொல்கின்றனர்.

வயக்ரா பாவிப்பதால் தீமைகளைவிடவும் நன்மைகளே அதி கம் என்பதும், தலைவலி, அஜீரணம் போன்ற பக்க விளைவுகள் இதனால் ஏற்பட்டாலும் அது பாரிய பிரச்சினையில்லை என்பதும் சில மருத்துவர்களின் கருத்து.


தினமும் மாத்திரைகளை உட்கொள்ள முடியாதவர்கள், உட லுறவில் ஈடுபடுவதற்கு ஒரு மணிநேரத்திற்கு முன்பு ஒரு மாத் திரையை உட்கொண்டாலே போதுமானதாம். தவிர, ஒரேயடியாக மாத்திரையை எண்ணிக்கையை அதிகரிக்காமல் படிப்படியாக அதிகரிக்க வேண்டுமாம். பாலியல் பிரச்சினைகள் சம்பந்தப்பட்ட அமைப்பொன்றின் பணிப்பாளரான **ஏர்ன் கிறெக்** *"இது நோயாளர்களுக்கான சிறந்ததொரு பரிகாரம்"* என்கிறார்.

பெண் வைத்தியநிபுணரான ஐரோப்பிய **ரோஸ்மேரி லெனார்ட் சன்** பத்திரிகை ஒன்றிற்கு அளித்த பேட்டியில், *"இந்த வயக்ரா - வாழ்க்கைக்கான மருந்து"* என்கிறார். இதுபற்றி இவர் 10,000க்கும் மேற்பட்ட தொலைபேசிஉரையாடல்களில் ஈடுபட்டதாகவும் தெரியவருகின்றது. இவரது ஆராய்ச்சியில் வெளிப்பட்ட பிரதான விடயம்தான் **வைத்திய ஆலோசனையின்றி வயக்ராவை எவரும் பாவிக்கக் கூடாது** என்பது.இதுதவிர, இன்னுமொரு அதிர்ச்சியான தகவலும் வயக்ரா தொடர்பாக வெளியாகியிருக்கின்றது. வயக்ரா மாத்திரை பாவிப்போரில் அதிகமானோர் தன்னினச் சேர்க்கையில் பிரியம் காட்டுகின்றனராம். அத்துடன் இவர்கள் இந்த வயக்ரா என்னும் காமக்குளிசையுடன் சேர்த்து வேறும்பல வீரிய மாத்திரைகளை உட்கொண்டதால் இதுவரை ஒரு இலட்சத்துக்கும் அதிகமான மரணங்கள் நிகழ்ந்துள்ளதாகவும் சர்வதேச புள்ளி விபரங்கள் கூறுகின்றன. •


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழக சினிமா: சவால்களும் சாதனைகளும்



"வயலுக்கு வந்தாயா, நாற்று நட்டாயா, களை பறித்தாயா, நம்குலப் பெண்டிருக்கு மஞ்சள் அரைத்தாயா...." என்றும், "வசந்த சேனை, வட்டமிடும் கழுகு, வாய் பிளந்து நிற்கும் ஓநாய், நம்மை வளைத்துவிட்ட மலைப்பாம்பு...." என்றும் பக்கம் பக்கமாய் வசனங்களை அள்ளி விட்டுக் கொண்டிருந்த தமிழ் சினிமா, காட்சிகளாலும் உணர்ச்சிகளாலும் சற்று நிதானத்துக்கு வந்தது ஸ்ரீதர், பாலச்சந்தர் போன்றோரின் வருகைக்குப் பின்பு. ஏவிஎம், வாஹினி, விஜயா தோட்டம் என்று ஸ்ரூடியோக்களுக் குள் செட் போட்டு ஆயிரமாயிரம் வாட்ஸ் மின்குமிழ்களின் ஒளி வெள்ளத் தில் ஜிகினாக்கள் காண்பித்துக் கொண்டிருந்த தமிழ்ப் படத்தை ஸ்ரூடி யோக்களுக்கு வெளியே, கிராமங்களுக்கு இழுத்துவந்து சூரிய ஒளி படவைத்தார்கள் பாரதிராஜாவும் பின் வந்தவர்களும். பாலு மகேந்திரா வின் அழியாத கோலங்கள், மூன்றாம்பிறை, வீடு, மகேந்திரனின் முள்ளும் மலரும், உதிரிப்பூக்கள், பூட்டாதபூட்டுக்கள் எல்லாம் தமிழ் சினிமாவின் வளர்ச்சிப்போக்கைத் தெளிவுபடுத்த..., எண்பதுகளில் ஆரோக்கியமான ஒரு சூழல் நிலவியது.

பின்னர் படங்களினுள் பிரம்மாண்டம் வந்து சேர்ந்தது. 'பென்ஹுர்' போலவோ அல்லது அகிராகுரசோவாவின் 'செவன் சாமுராய்' போலவோ விழிகளை விரியவைக்க முடியாவிட்டாலும், கார்களை உடைத்தும் காசைக் கரியாக்கியும் உலகெங்கும் திரிந்து விமானங்களில் பறந்து ஜாலங்கள் புரிந்து நம் ரசிகர்களை மயக்கியது தமிழ் சினிமா.

காதலன், ஜென்டில் மேன், காதல் தேசம் போன்ற பிரமாண்டங்க ளினால் வெற்றி கண்ட கே.ரீ. குஞ்சுமோன் ரட்சகனில் தோல்வியைத் தழுவினார். எனினும் மீண்டும் மகனை நடிக்க வைத்து கோடீஸ்வரன் வருகிறது. டென்னிஸ் விளையாட்டின் மூலமும் ஹொலிவூட் படத் தயாரிப்புகள் மூலமும் கோடிகளைச் சம்பாதித்த அமிர்தராஜ் சகோத ரர்களும் கோடம்பாக்கம் வந்தனர். வடக்கிலிருந்து அமிதாப் பச்சன் கொம்பனி தெற்கில் ரத்தினம், தாணு, கோயமுத்தூரிலிருந்து பையும் பணமுமாக வரும் மில் முதலாளிகள் என்று எல்லோருமாகத் தமிழ்ப் படங்களில் காசை இறைத்து வசூலை அள்ளும் பந்தயத்தில் இறங்கினர். ***'இவர்கள் ஒரு படத்திற்காகத் தேவையில்லாமல் நீளநீளமாக எடுத்து வெட்டி எறியும் ஃபிலிம் சுருள்களில் மட்டுமே நாலைந்து நல்ல படங் களை எடுத்து விட முடியும்'*** என்று ஒருசமயம் வருத்தப்பட்டுச் சொன்னார் மறைந்த பீம்சிங்கின் மகனும் பிரபல ஃபிலிம் எடிட்டருமான லெனின்.

மணிரத்தினம், ஷங்கர் போன்றோர் டெக்னிகலான விஷயங்களில் அதிக கவனம்செலுத்தினர். பிரமாண்டமும் டெக்னிகலாக பல புதுமை களும் கொண்டு வெளிவந்த ஷங்கரின் ஜென்டில் மேன், காதலன், இந்தியன் எல்லாம் பெருவெற்றியடைய அவரின் **ஜீன்ஸ்** எதிர்பார்த்த வெற்றி பெறவில்லை. மணிரத்தினத்தின் பம்பாயும், ரோஜாவும் மகத்தான வெற்றிபெற **இருவர்** தோல்வி கண்டது.

பண்டிட் குயினை இயக்கிய சேகர் கபூர், ரங்கீலா, தாவூத்தை இயக்கிய ராம்கோபால்வர்மா ஆகியோருடன் இணைந்து அந்த கூட்டுக் கொம்பனி யின் முதல் படத்தை இயக்குகிறார் மணிரத்தினம். ஹிந்தியில் **'தில்சே'**, தமிழில் **'உயிரே'** என்ற பெயர்களில் வெளியாகிறது. ரோஜா, பம்பாய் போன்று இதுவும் தீவிரவாதத்தின் கதைதான். ஷாருக்கானும், மனிஷா வும் நடித்திருக்கிறார்கள். கதை வசனம் சுஜாதா.

ஷங்கர் சொந்தப் படம் எடுக்கும் முயற்சியில் இருக்கிறார். பிரமாண் டங்களைத் தவிர்க்கிறார். சிறிய பட்ஜட் படம். பாலகுமாரன் கதைவசனம் எழுதுகிறார்.

புதிய இளைய டைரக்டர்கள் பிரமாண்டங்களைப் புறந்தள்ளி வெற்றிப் படங்கள் தருகிறார்கள். அழுத்தமான கதைகள், அதுவும் காதல் கதைகள் தமிழ்ப் படவுலகத்தை மாற்றியுள்ளது. காதல் கோட்டை, காலமெல்லாம் காதல் வாழ்க, பாரதிகண்ணம்மா, காதலுக்கு மரியாதை, பொற்காலம், பூந்தோட்டம் போன்ற வெற்றிப்படங்கள் எல்லாமே பிரம் மாண்ட டைரக்டர்களை யோசிக்க வைத்திருக்கிறது.

வஸந்த், கதிர், சேரன், சசி, விக்கிரமன், பாலசேகரன், சரண் போன்ற பெரும்பாலான புதிய டைரக்டர்கள் எல்லோருமே 30 வயதுக்கும் குறைந் தவர்கள்.

பாலச்சந்தர் தான் தயாரிக்கும் படங்களை தானே இயக்காமல் புதிய வர்களிடம் தருகிறார். அகத்தியன் இயக்கிய **விடுகதை** தோல்வியடை ந்தாலும் பாலசேகரன் இயக்கிய **துள்ளித் திரிந்த காலம்** வெற்றியடைந் தது. பெரியதிரை வாய்ப்புக்களை இளைஞர்களுக்குத் தந்துவிட்டு பாலச்சந்தர் சின்னத்திரையை ஆக்கிரமித்திருக்கிறார். **'பிரேமி'** சக்கை போடு போடுகிறது.

இளைஞர்களிடம் வித்தியாசமான கதைகளைக் கேட்டுப் பெற்று குறைந்த பட்ஜட்டில் படங்களை எடுத்து அதிக வசூலைக் கறந்து கொண்டிருக்கும் மற்றுமொரு பிரபல தயாரிப்பாளர் ஆர்.பி. சௌத்ரி. பூவே உனக்காக, லவ் டுடே, சூர்ய வம்சம், சொல்லாமலே எல்லாம் அவரது சமீபத்திய வெற்றிப் படங்கள்.



ஒளிப்பதிவாளர் சந்தோஷ்சிவன்



அரவிந்த் சாமி



சகோதரிகள் ஸ்ரீதேவி, ப்ரீதி



டைரக்டர் மணிரத்னம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது சாதாரணமான ஒரு படம் எடுக்கவே சராசரியாக ஒன்றரைக் கோடியிலிருந்து இரண்டு கோடி ரூபாவரை செலவாகிறது. சராசரிக்கும் குறைவான பட்ஜட்டில் எடுக்கப்பட்ட **'சொல்லாமலே'** மூன்று மடங்கு வசூலைத் தரும் என்று பேச்சு. சுந்தர புருஷனுக்குப் பிறகு லிவிங்ஸ்டனுக்கும் மற்றொரு திருப்பு முனை.


ரம்பா

பெப்ஸி பிரச்சினை முடிந்துவிட்டது. தமிழ்த் திரையுலகை இப்போது வாட்டும் பிரச்சினை **திருட்டு வீடியோ**. புதுப்படம் வெளிவந்ததும் வெளிநாட்டில் திருட்டுத்தனமாக வீடியோவிலும், சிடியிலும் பதிவுசெய்து விற்கிறார்கள்.
வீட்டிலிருந்தபடியே புதுப் படங்களைப் பார்க்க முடியுமென்பதால் தியேட்டர்களுக்குப் போவது குறைந்துவிட்டது. இந்தப் பிரச்சினையைச் சமாளிப்பதற்குப் பெரிய பெரிய தயாரிப்பு நிறுவனங்கள் எல்லாம் கூடி மண்டையை உடைத்துக் கொள்கின்றன.

விற்பனை என்று பார்த்தால் ரஜினி, கமல் நடிக்கும் படங்கள்தான் பூஜை போடும்போதே ஏரியாக்கள் விற்பனையாகி விடுகின்றன. இப்போது தயாரிப்பாளர்கள் கியூ நிற்கும் இடம் விஜய் வீடு. பூவே உனக்காக, லவ்டுடே, நேருக்கு நேர், ஒன்ஸ் மோர், காதலுக்கு மரியாதை, நினைத்தேன் வந்தாய், ப்ரியமுடன், நிலாவேவா.... என்று தொடர்ச்சியாக வசூல் வெற்றிகளின் உச்சாணிக்கொம்பில் நிற்கிறார் **விஜய்**. லண்டன் திருமணத்தாலும் சரிந்துவிடாத புகழிலிருக்கிறார். இளமை, துருதுருப்பு, நடனம், சண்டைக் காட்சிகளில் வேகம், கோயம்புத்தூர்க்காரர்களுக்கேயுரிய நையாண்டியும் நளினமுமான பேச்சு..... அத்தனை மனங்களையும் அள்ளிக்கொண்டிருக்கிறார் விஜய்.


ஷில்.'பா ஷெட்டி


பிரபு தேவா

பிரசாந்துக்கு ஜீன்ஸ் சரியாகப் போகவில்லை. அஜித் இறங்கு முகத்திலிருக்கிறார். பிரபுதேவாவின் நடனமும் நகைச்சுவையும் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளப்படவில்லை. அப்பாஸ் மீண்டும் மும்பைக்குப் போக நேர்ந்து விட்டது. சூர்யா நடிப்பில் தன்னை இன்னும் ஸ்தாபித்துக்கொள்ளவில்லை.... சுருங்கச் சொன்னால் விஜய் காட்டில் மழை!

கமலின் **மருதநாயகம்** படப்பிடிப்பு நடக்கிறது. பரிசு பெறுகிறதோ என்னவோ ஒஸ்கார் பரிசீலனைக்குப் போகப் போவதென்னவோ உண்மை. கமலின் லட்சியப் படம் செட்டிநாட்டுப் பகுதிக் காடுகளுக்குள் வளர்கிறது.

தமிழ்ப் படவுலகினரின் மில்லியன் டொலர் கேள்வி, ரஜினியின் அடுத்த படத்தை இயக்கப் போவது யார்? அருணாசலம் போலவே இதுவும் நலிந்த கலைஞர்களுக்கு நிதியுதவி அளிக்கப் போகும் படம்தான். சுரேஷ் கிருஷ்ணாவா, சுந்தர். சி.... ஆ என்ற கேள்விகள் முடிந்து கே.எஸ். ரவிக்குமார் இயக்கப் போகிறார். 'படையப்பா' என்ற பேரும் மாற்றப்பட்டு 'கிரி'. நவம்பரில் ஷூட்டிங் ஆரம்பிக்கிறது. சௌந்தர்யா, ரம்யா கிருஷ்ணன், மணிவண்ணன், செந்தில் ஆகியோர் நடிக்கிறார்கள். ரஜனிக்குத் தந்தை வேடத்தில் சிவாஜி.

***லூமியர் சகோதரர்கள்*** சினிமாவைக் கண்டுபிடித்து நூறாண்டுகள் கடந்துவிட்டது.

தமிழ் சமூகத்தின் பொழுதுபோக்கு நேரத்தை, பாடுபட்டு உழைத்த பணத்தை, கலாசார மனங்களை பெருமளவுக்குப் பாதித்துக் கொண்டிருப்பது இந்த அசுர சாதனம். மக்களை மயக்க லாகிரியில் வைத்திருக்கும் இந்த சாதனத்தின் அடிப்படைகளை, இதனால் வசீகரிக்கப்படும் மக்கள் மனங்களை, அது கட்டமைக்கும் இன்றைய கலாசாரப் போக்குகளை ஆராய்வது என்பது இன்றைய தமிழ்ச் சமூகத்தை ஆராய்வதுமாகும். ●




சிம்ரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மட்டக்களப்பு
## மரபுவழி நாடகங்கள் - கலாநிதி சி. மௌனகுரு

விபுலம் வெளியீடு மட்டக்களப்பு. சாதாரண பதிப்பு: விலை – 800/-




கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகத்து நுண்கலைத்துறைத் தலைவரான சி. மௌனகுருவின் கலாநிதிப்பட்ட ஆய்வேடு செம்மைப்படுத்தப்பட்டு நூலாக வெளிவந்திருக்கின்றது. பேராசிரியர் கைலாசபதியின் வழிநடத்துதலில் மௌனகுரு மேற்கொண்ட இந்த ஆய்வு, தமிழில் வெளியான நூல்கள் யாவற்றிலும் தனித்துவமும், சிறப்பும், ஆழமும் கொண்டது. பல பொய்மைக் கருத்துக்களை உடைத்து நொருக்கிய ஆய்வியற் பலமுள்ளது.

கலாநிதி சி. மௌனகுரு மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள் குறித்து மாணவப் பருவத்திலிருந்து அறிந்து, ஒரு நாடக நடிகராக மலர்ந்தவர். நொண்டி நாடகம், கர்ணன் போர் என்பனவற்றில் அர்ப்பணிப்போடு பங்கு கொண்டு மட்டக்களப்பு நாடகக் கூத்துக்கே வெளிச்சம் கொடுத்தவர். மெருகு தந்தவர். தந்து கொண்டிருப்பவர்.

'மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள்' நாட்டுக் கூத்துக்கள் பற்றிய வெறும் ஆய்வு ஆவணப் புத்தகம் மட்டுமல்ல, பேராசிரியர் சிவத்தம்பி கூறியிருப்பது போல மட்டக்களப்பின் சமூக வரலாற்று நூலும் ஆகும்.

எட்டு இயல்களைக் கொண்ட இந்த நூல் ஆசிய - தமிழக நாடக அரங்கு மரபுகளைப் பற்றிய விளக்கமான முன்னுரையுடன் தொடங்குகின்றது. மட்டக்களப்பு சமூக அமைப்பு, கிருத்தியங்கள், இதோடு நாடக மரபு கொண்ட தொடர்புகள் பற்றி கள ஆய்வுகள் செய்யப்பட்டு நிதானமாக முடிவுகள் வகுக்கப்படுகின்றன.

வட, தென் மோடி நாட்டுக் கூத்துகள் - தாளக்கட்டு, பாடல் வகை, ஆடரங்கம், ஆடை அணிகள் பற்றி மிக நுணுக்கமான ஆய்வுகளைச் செய்திருக்கிறார் ஆசிரியர்.

இந்த நூலைச் சகலரும் பயில வேண்டும். மட்டக்களப்பின் சமூக வளர்ச்சி, தளம் என்பனவற்றை சிறப்பாகச் சொல்லும் இந்த நூலின் இன்னொரு சிறப்பு மௌனகுருவின் எளிமையான தமிழ் நடை.

இந்த அரிய ஆய்வுக்காக தமிழ்கூறும் நல்லுலகம் மௌனகுருவை சிறப்பாகப் பாராட்டும். அருமையான முறையில் தரமாக வெளியிடப்பட்டுள்ள இந்த நூல், தமிழிற்குப் பெருமையும், வலுவும் தரும் தகைமைகள் கொண்டது.

# நூல் அறிமுகம்

## முதுமொழி வெண்பாவும் சூறாவளிப் படைப்போரும்



புலவர்மணி
அல்ஹாஜ்
ஆ.மு.ஷரிபுத்தீன்
அன்னை
வெளியீட்டகம்
மருதமுனை.
விலை:
குறிப்பிடவில்லை.

'வெண்பாவில் என்னை நீ வென்றாய்' என்று புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை யால் புகழ்ந்துரைக்கப்பட்ட கவிஞரின் வெண்பாவும், பிரபந்தமும் கொண்ட தொகுதி, பழந்தமிழ் நீதி நூல்களில் ஆசிரியர் கொண்ட அரும் பரிச்சயம் வெண்பாக்களில் தெள்ளெனத் தெரிகின்றது. 1987 புயல் அழிவை மானிட நேயத்துடனும் இலக்கிய நயத்துடனும் எடுத்துச் சொல்கிறது பிரபந்தம். இளங் கவிஞர்களுக்கு இது ஒரு பயிற்சி நூல்.

நூல் மதிப்புரைக்கு 'அமுது' இதழிற்கு தமது ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர் ஒவ்வொரு நூலிலும் இரண்டு பிரதிகள் அனுப்பிவைக்க வேண்டும்.

## ஒரு வித்தியாசமான விளம்பரம்

ரூபராணி யோசப்



துரைவிப் பதிப்பகம்
85, ஸ்ரீ இரத்தின சோதி
சரவணமுத்து மாவத்தை
கொழும்பு – 13.

மட்டுநகரில் பிறந்து மலையத்தில் கால் நூற்றாண்டுக்கு மேலாக வாழும் ஆசிரியையின் நாற்பது கதைகளைக் கொண்ட தொகுதி. பன்முகப் பார்வை கொண்ட கதைகள். அழகாக இந் நூலை துரைவிப் பதிபகம் வெளியிட்டுள்ளது.

## ஈழத்து சமகால தமிழ் இலக்கியம்

விபவி கலாசார மையம்
பாகொடை வீதி
நுகேகொடை.



தேவகௌரி, மு. பொன்னம்பலம், திக்குவல்லை கமால், பிரேம்ஜி, தெளிவத்தை ஜோசப் ஆகியோரின் ஆய்வுக் கட்டுரைகளைக் கொண்ட தொகுதி. ஒரே நோக்கிலோ, ஆய்வு முறையிலோ எழுதப்படாவிடினும், விவாதத்திற்கும் இன்னொரு முயற்சிக்கும் வழிவகுக்கும் நூல்.

நூலாய்வு: மாணிக்க வாசகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரியான தேர்வு



சரியான தேர்விற்குத்
தெளிவான கண்கள் தேவை

தெளிவான கண்கள் கொண்டு
மகாவலி மெரீன் சீமெந்தைத்
தேர்ந்தெடுத்தால் நீங்கள்
புத்திசாலிகள்.

BVQI ISO 9002




**MAHAWELI MARINE CEMENT**

நிர்மாணத்தின் நிலையான அடித்தளம்

69, புதிய களனிப் பாலம் வீதி, கொழும்பு 14.
தொலைபேசி: 451212 பக்ஸ்: 451049 டெலெக்ஸ்: 21655


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**தேசிய, மற்றும் மாகாண மட்டத்தில் ஏராளமாக பரிசு பெறும் வாய்ப்புகள்.**

சாதாரண சேமிப்புக் கணக்கு, காந்தா ரண் கினும் (மகளிர் பொற்கணக்கு), ரண்கொவி தன்பத்து கணக்கு, ரணவிறு ரண் கினும், மற்றும் ரண் கதெல்ல குடும்பக் கணக்கு மூலம் நீங்களும் இதில் கலந்து கொள்ளலாம்.

### ரண்கினும் வாசனா (பொற்கணக்கு அதிர்ஷ்டம்)

### தேசியரீதி மாபெரும் சீட்டிழுப்பு

நீங்கள் செய்யவேண்டியது இதுவே

1999 ஏப்ரல் மாதம் 01ந் திகதி முதல் ஜூன் மாதம் 30ந் திகதிக்குட்பட்ட காலப்பகுதியில் மேலே குறிப்பிட்ட கணக்குகளில் 10,000/- ரூபா அல்லது ரண் கதெல்ல தொகுதியில் 12,000/- ரூபா வரை கூட்டாக ஆகக் குறைந்த கணக்கு மீதியாக வைத்திருப்பது மட்டுமே நீங்கள் செய்ய வேண்டியது.

**முதலாம் பரிசு**

25 இலட்சம் ரூபா பெறுமதியான வீடொன்று

**இரண்டாம் பரிசு**

ஒவ்வொன்றும் 12 இலட்சம் ரூபா பெறுமதியான 2 சொகுசுக் கார்கள்

**மூன்றாம் பரிசு**

ஒவ்வொன்றும் 5 இலட்சம் ரூபா பெறுமதியான 3 மோட்டார் கார்கள்

**ஆறுதல் பரிசுகள்**

20 வர்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகள்
20 குளிர்சாதனப் பெட்டிகள்
20 சலவை இயந்திரங்கள் (வோஷிங் மெஷின்கள்)

### மாகாணப் சீட்டிழுப்பு (10 மாகாணங்களுக்காக)

இதில் கலந்துகொள்ள 1998 ஒக்டோபர் 01ந் திகதி முதல் டிசெம்பர் 31ந் திகதிவரை பின்வரும் முறையில் உங்கள் சேமிப்புக் கணக்குகளில் கணக்கு மீதி இருக்கவேண்டும்.

பிரிவு 1

ரூபா 5,000/- அல்லது அதற்குக் கூடிய தொகையை மீதியாக வைத்திருக்கும் மேலேயுள்ள சேமிப்புக் கணக்கு வைத்திருப்போருக்கு அல்லது ரூபா 6,000/-ற்கு அதிக தொகையை கூட்டு மீதியாக வைத்திருக்கும் ரண்கதெல்ல (பொன் மனை) குடும்ப அங்கத்தவருக்காக

**முதலாம் பரிசு**

10 மோட்டார் கார்கள்

**இரண்டாம் பரிசு**

20 இரண்டு சக்கர கை உழவு இயந்திரம் அல்லது 20 மூன்று சக்கர ஓட்டோ வண்டிகள்

**மூன்றாம் பரிசு**

40 வர்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகள்

**ஆறுதல் பரிசுகள்**

100 தையல் இயந்திரங்கள், 100 சைக்கிள்கள், 100 காஸ் அடுப்புகள்

**1000/- ரூபா பணத்தை முதலீடு செய்துள்ள சிறிய சேமிப்பாளர்களுக்குக் கூட இந்த சீட்டிழுப்பில் கலந்துகொள்ள வாய்ப்புக் கிடைக்கிறது.**

**இலங்கை வங்கி**

தேசத்தின் வங்கியாளர்

2ம் பிரிவு

1000/- ரூபா முதல் 4999/- ரூபா வரையில் மீதி வைத்திருக்கும் கணக்கு வைப்பாளர்களுக்கு மாகாணத்திற்கு 100 வீதம் தேர்ந்தெடுக்கப்படும் 1000 கணக்கு வைப்பாளர்களுக்கு கணக்கிலுள்ள தொகையைப் போல் இன்னொரு மடங்குத் தொகை இலங்கை வங்கியால் கணக்கில் வரவு வைக்கப்படும். வெற்றி பெற்றால் நீங்கள் சேமித்த தொகை தானாகவே இரு மடங்காகிடும்.

இலங்கை வங்கியின் ரண் கினும் வாசனா பொற் கணக்கு அதிர்ஷ்டத்தின் பொற்கதவு உங்களுக்காக திறந்துள்ளது. இலங்கை வங்கியில் மேலும் மேலும் சேமியுங்கள்.

மேலதிக விபரங்களுக்கு உங்கள் இலங்கை வங்கி முகாமையாளரைச் சந்தியுங்கள்.

FIRST & FORWARD

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org